# சுமை

(வானொலி நாடகங்கள்)



'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமை

## (வானொலி நாடகங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற ஆக்கங்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1. | பஞ்சாமிர்தம் | சிறுவர் நாடகங்கள் | 2015 |
| 2. | சட்டத்தின் திறப்பு விழா | வானொலி நாடகங்கள் | 2016 |
| 3. | பஞ்சாயுதம் | நாடகங்கள் | 2017 |
| 4. | மனவைரம் | வானொலி நாடகங்கள் | 2018 |
| 5. | வண்டல்மண் | சிறுவர் கதைகள் | 2018 |
| 6. | விதை | நாடகங்கள் | 2019 |
| 7. | பொக்கிசம் | சிறுவர் இலக்கியம் | 2019 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமை

## (வானொலி நாடகங்கள்)


'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர்

'maravanpulo' sellam ambalavanar



ஆசிரியர் வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சுமை'

(வானொலி நாடகங்கள்)

(c) மறவன்புலோ செல்லம் அம்பலவாணர்

முதற்பதிப்பு : 2020

ISBN : 978-955-42626-7-6

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு
வடிவமைக்கப்பட்ட வெளியீட்டு பட்டியல் தரவு

அம்பலவாணர், செ.
சுமை : வானொலி நாடகங்கள் செ.அம்பலவாணர்
கொழும்பு : ஆசிரியர், 2020.
ப. XX, 144 ; செமீ.21
ISBN 978-955-42626-7-6
i. 894.8112 டிவி 23 ii. தலைப்பு :
1. தமிழ் நாடகங்கள்

பதிப்பாசிரியர் : செ.அம்பலவாணர்,
478/28 அளுத்மாவத்தை வீதி,
கொழும்பு-15
தொலைபேசி :0714280809
e-mail : ambalam9591@gmail.com

அச்சுப்பதிப்பு : K.J.Enterprises
63, விகாரைலேன், கொழும்பு 06
0112058489

விலை : ரூபா 500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்..

ஒரு பொறியியலாளராக
மனச் சுமையைச்
சுமக்கும் பொழுது..
உள்ளத்து உளைச்சலுக்கு
ஒத்தடம் கொடுத்து
எனது கிறுக்கல்களையும்
இரைச்சல்களையும்
பறைசாற்ற
களம் தந்த
கலை உலகிற்கு ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கை இந்துக்குருமார் சங்கத் தலைவர்

**கலாநிதி சிவஸ்ரீ கு. வை. க. வைத்தீஸ்வரக் குருக்கள்**

வழங்கிய

# அருளுரை



மறவன்புலோவின் மகத்துவம் முதன்மை..
அனுபவம் உணர்ந்து அழகென எழுதி..
விழுமியம் சமயம் கலைகளைத் தெரிந்து..
'சுமை' என ஒரு நூல் தருகின்ற செய்தி....

மனமிக மகிழ்வாய் உவந்தளிக்கும் ஆசி
உலகியல் வாழ்வில் உயர்வு
என்றாகி
குணநலமிகுந்தோன்
அம்பலம் என்னும்
அரும் பணியாளனே வாழ்க!.. வாழ்க!!..

கலைதரு கிறுக்கலை எழுத்தென வடித்து
முத்தமிழ் நாடக முருகலாய் வளர்ந்து
வானொலி குரல்களில் உலவியே தன்னை
ஆளுமை ஆக்கிய அம்பலத்தானே
அம்பலத்தாடும் ஆனந்தக் கூத்தனின் அருளது பெற்று
அகிலமும் போற்ற வாழ்க!.. வாழ்க!!

அருளுரை ஆசி அகமன நிறைவாய் வழங்கி மகிழும்
சிவஸ்ரீ கு. வை. க. வைத்தீஸ்வரக்குருக்கள்
தலைவர்
இந்துக்குருமார் அமைப்பு
குமாரசாமிக் குருக்கள் அறக்கட்டளை
18.12.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிப்பணிப்பாளர், டவர் மண்டப அரங்க மன்றம்,

கலாநிதி சண்முக சர்மா ஜெயப்பிரகாஷ் வழங்கிய

## ஆசியுரை

வானொலி நாடகம்



செல்லம் அம்பலவாணர் அவர்கள் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக் கொண்டு, இலங்கை தொலைத் தொடர்புப் பணியகத்தில் பொறியியலாளராக கடமைபுரிந்து, கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவ உயர் படிப்பினைக் கற்று, தற்போது ஓய்வு பெற்றுள்ள ஒரு திறமையான பொதுசனத் தொடர்பாளன் ஆவார்.

அவருக்கு தமிழ் பண்பாட்டின் மீது ஆழமான பற்றுறுதி இருப்பதனால் தமிழ் சார்ந்த ஆன்மீக, கலை, கலாச்சார விடயங்களில் தன்னால் இயன்ற அளவு பங்களிப்பைச் செய்து வருகின்றார் என்பது போற்றுதற்குரியது. அந்தப் பங்களிப்பிற்கு சமூகத்தில் நல்ல வரவேற்புக்கிடைத்ததுடன் அரச அங்கீகாரமும் கிடைத்துள்ளது என்பது சிறப்பான விடயமாகும்.

இந்தக் குறிப்புரை அவருடைய 'சுமை'என்ற வானொலி நாடக எழுத்துப்பிரதியின் தொகுப்பிற்காக எழுதப்படுகின்றது. இவ்வுரையில் வானொலி நாடகம் பற்றிய சில பண்புகளை குறிப்பிடுவதன் மூலம், செல்லம் அம்பல வாணருடைய வானொலி நாடக எழுத்துரு எந்தளவிற்கு முக்கிய பிரதியாக விளங்கும் என்பது புலப்படும்.

வானொலி நாடகம், காட்சிக் கூறுகள் ஏதுமற்ற, முற்றிலும் ஒலி செயல்திறன் விளைவால் ஆன நாடக வடிவமாகும். உரையாடல், இசை மற்றும் ஒலி விளைவுகளைப் பொறுத்து, கேட்பவருக்கு கதாபாத்திரங்களையும் கதையையும் கற்பனை செய்ய உதவுகின்ற ஆற்றுகை வடிவமாகும். இது உடல் பரிமாணமற்றதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும் செவிக்குரிய பரிமாணத்தை உடையதாகும். இச்செவிப் பரிமாணத்தின் வழியே கதாபாத்திரங்கள் தங்கள் உடல் பரிமாணத்தை வெளிக்காட்டும். செவிவழியே கேட்பவர்கள் தமது மனத்திரையில் மேடை அமைத்து கேட்பவர் தமது உளவியல் பரிமாணத்தில் நாடகத்தைப் பார்வையிடுவர். ஆனால் உளவியல் பரிமாணத்தில் ஒரு காட்சியானது கண்ணால் காண்பதற்குரிய பரிமாணத்தில் உள்ள நாடகத்தை விடச் சக்தி வாய்ந்தது. அத்துடன் நடிகர்களின் நடிப்பு கதாபாத்திரத்தின் உளவியல் மற்றும் உடலியல் பரிமாணங்களை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

வானொலி நாடகத்தில் : ஆவணப்படங்கள், புனைகதையினை நாடகமாக்கப்பட்ட படைப்புகள், இசை நாடகம் மற்றும் ஓபரா உள்ளிட்ட நாடக அம்சங்கள் எழுதப்பட்ட நாடகங்கள் அடங்கும்.

எவ்வாறாயினும், வானொலி நாடகத்தில், நாடக ஆசிரியர் நம் கண்களால் தகவல்களைப் பெற முடியாது என்பதனால் நாடக உறுப்புகளைப் பற்றி வெவ்வேறு வழிகளில் தெரிவிக்க வேண்டும். வானொலி நாடகம் அடிப்படையில் தனியே கேட்கப்படுகிறது, பார்க்கப்படுவதில்லை.

ஒரு வானொலி நாடகம் எழுதுவது என்பது சொற்களையும் ஒலிகளையும் கொண்டு ஒரு படத்தை வரைவது போல. மேடை நாடகத் தயாரிப்புக்கான எழுத்துருவில் இருந்து இது முற்றிலும் வேறுபட்டது.

வானொலி நாடகத்தில் கதாபாத்திரங்களையும் அவர்களின் அசைவு முறைகளையும் பார்க்க முடியாது, என்பதால் கதாபாத்திரங்கள் அடிக்கடி பேசாவிட்டால் எந்தக் கதாபாத்திரம் என்பதை கேட்பவர்கள் மறந்துவிடுவது எளிதானது, குரலால் மட்டும் நடிப்பை வெளிப்படுத்தும் போது பல கதாபாத்திரங்கள் வேறுபடுத்திக் கேட்பது கடினம் போன்றவை வானொலி நாடகத்தைக் கேட்போரின்முன் உள்ள சங்கடங்கள் ஆகும். ஒரு பாத்திரம் என்ன சொல்கின்றது, மற்ற கதாபாத்திரங்கள் என்ன சொல்கின்றன என்பது எல்லாமே கதாபாத்திரத்தை ஏற்று நடிக்கும் நடிகரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரலின் ஒலி மூலம் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். இங்கு கதாபாத்திரங்களின் தனித்துவமான குரல்களைக் கொண்டே பாத்திரங்கள் அடையாளம் கண்டு கொள்ளப்படுகின்றது என்பதால் நடிகரின் குரல் என்பது இங்கு ஒரு பாத்திரமாக அமைகின்றது.

கதாபாத்திரத்தின் குரலானது கதாபாத்திரத்தைப் பற்றிய பல தகவல்களை கேட்பவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும், உதாரணமாக அவர்களின் வயது, இனம், சமூகப் பின்னணி மற்றும் நாடகத்தின் நிகழ்வுகளைப்பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் மற்றும் உணர்கிறார்கள் என்பது எல்லாம் கதாபாத்திரத்தின் குரலில் இருந்து கேட்பவர் தெரிந்து கொள்ள வேண்டும்.

அனைத்து நல்ல நாடகங்களும் அதனைக் கேட்பவர்களுக்கு ஒரு தொடர்பை ஏற்படுத்துகின்றது. கேட்பவருக்கு பரிச்சயமான சூழ்நிலையைப் பயன்படுத்துவதன் மூலம் இதை அடைய முடியும்.

குரல் நடிப்பு என்பது ஒரு கதாபாத்திரத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக மட்டுமல்லாது கேட்பவர்களுக்குத் தகவல்களை வழங்குவதற்காக, வானொலி நாடகத்தில் கதாபாத்திரங்களின் உரையாடல் முக்கியம் பெறுகின்றது. இந்தக் கதாபாத்திர உரையாடல்கள் - ஒரு கதாபாத்திரம் என்ன நினைக்கின்றது மற்றும் உணர்கின்றது என்பதைத் தெரிவிப்பதோடு, உரையாடலில் நாம் எங்கிருக்கிறோம், கதாபாத்திரங்கள் என்ன செய்கின்றன, மற்றும் கதாபாத்திரங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை எல்லாம் தெரிவிக்கின்றது.

வானொலி நாடகத்தில் கேட்கப்படும் ஒலிகளை வரையறுக்க உரையாடல் அவசியம். காட்சியை அமைப்பதற்கு கதாபாத்திரங்களிலிருந்து உரையாடல் இல்லாவிட்டால், கேட்பவர் பல வழிகளில் ஒலியைப் புரிந்துகொள்ளலாம்.

வானொலி நாடகத்தின் மேற்குறிப்பிட்ட பண்புகளை, அம்பலவாணருடைய நாடகப் பிரதிகளிலே தெளிவாக நாம் காண முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தசாப்த காலத்திற்கு மேலான தொடர்பு இவருடன் எனக்கு இருந்து வந்துள்ளது. ரோயல் கல்லூரி நாடக மன்றத்துடன் நான் தொடர்பினை கொண்டிருந்த போது அவருடன் பழக்கம் ஏற்பட்டிருந்தது. இலங்கை வானொலியில் மீண்டும் நாடகம் தயாரிக்கலாம் என்ற நிலை 2008 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் இருந்தபோது அப்போது ராஜேஸ்வரி சண்முகம் அம்மாவின் வழிகாட்டலில் நடிப்பதற்கான வாய்ப்பினைப் பெற்றிருந்தவேளை என்னுடன் இணைந்து நடித்தவர் இந்நூலாசிரியர் செல்லம் அம்பலவாணர்.

இலங்கை வானொலி நாடக வரலாறு என்பது மிகவும் நீண்ட வரலாறு ஆகும். அதன் தொடக்கம் சானா சண்முகநாதனுடன் தொடங்கி, இன்று வரை அதன் பட்டியல் நீண்டு செல்கின்றது. அவ்வாறாக வரலாறு பதித்த இலங்கை வானொலி நாடக வரலாற்றுடன் தொடர்புபட்ட நடிப்பு, பிரதியாக்கம் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட கலைஞர் என்ற பெருமை அம்பலவாணருக்கு இருக்கின்றது.

இவருடைய இந்த ஆவணப்படுத்துகை இலங்கை வானொலி நாடக வரலாற்றில் முக்கிய ஒரு ஆவணமாகும். காரணம் பொதுவாக வானொலி நாடக எழுத்துருக்கள் 'வான் அலையில்' தவழ்ந்த பின் அதற்கான பிரயோக பலன் குறைந்ததாக உணரமுடிகின்றது. அதனை நிவர்த்தி செய்து, அதற்கும் ஒரு காத்திரமான கனதியான தரம் இருக்க வேண்டும். அதற்கு ஒரு எடுத்துக்காட்டு அம்பலவாணருடைய இந்த எழுத்துப்பிரதி ஒரு ஆவணமாக வெளிவருவதாகும். அம்பலவாணருடைய இச்செயல்பாடு இத்துடன் நின்று விடாமல் தொடரவேண்டும், அதற்கு எல்லாம் வல்ல அந்த இறைவன் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் சகல வளங்களையும் வழங்கவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

சர்வே ஜனாக சுகினோ பவந்து....

கலாநிதி சண்முக சர்மா ஜெயப்பிரகாஷ்
பிரதிப் பணிப்பாளர்
டவர் மண்டப அரங்க மன்றம்,
12.12.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

**கொழும்புப் பல்கலைக்கழக கல்விப்பீட விரிவுரையாளர்,**

**எழுத்தாளர், நூல் ஆய்வாளர்**

## திரு. அமிர்தலிங்கம் பௌநந்தி

(B.A.(Hons), M.Phil, M.Ed, PGDE, PGDEM, PGESNE)

**அவர்களின்**

# அணிந்துரை



தொழில்நுட்ப சாதனங்கள், தொலைத்தொடர்பு சாதனங்கள், சமூக வலைத்தளங்கள் என்பவற்றினால் பிணைக்கப்பட்ட மனித வாழ்க்கை நேரப் போதாமையைக் காரணம்காட்டி வேகமாக நகர்ந்து கொண்டிருக்கிறது. இவற்றினால் நெகிழ்ச்சியற்ற நெருக்கடியைப் பலரும் எதிர்கொள்கிறோம் என்பதும், அதனால் அனுபவிக்க வேண்டிய பலவற்றை இழந்திருக்கிறோம் என்பதும், சமூகத்தின் மீதான பலரது கவனக் குவிப்பும் கலைந்திருக்கிறது என்பதும், கசப்பான உண்மையாகும்.

இவற்றிடையே இலக்கிய இரசனையும் எழுத்தும் என பயனுள்ள வகையில் தமது தடத்தைப் பதித்துச் செல்பவர்களையும் நாம் காணமுடிகின்றது. நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், பாட்டு, நடனம்.. என விரிந்து செல்லும் கலைத்துறையில் இந்திய சினிமாவின் தாக்கம் எமது ஈழத்துக் கலை மரபின் தனித்துவத்தைச் சிதைக்கிறது என்பதையும் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். இந்தப் பின்னணியில் இந்தியத் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் தொடர் நாடகங்கள், வானொலி நாடகங்களை இரசிக்கும் ஒரு கூட்டத்தவரை தன்பக்கம் இழுத்துவிட்டது என்று துணிந்து கூறலாம். எனினும், இன்றும் வானொலி நாடகங்களை இரசிக்கும் பலரை நாம் காணமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய இலக்கியப் பின்னணியில் மறவன்புலோ செல்லம் அம்பலவாணர் என்ற கலைஞர், எழுத்தாளர், சமூக ஆர்வலர், மனிதப் பண்பாளரின் பணி மகத்தானது. யாழ்ப்பாணம் தென்மராட்சி மறவன்புலவில் பிறந்து யாழ்ப்பாணப் பின்னணியில் தனது பாடசாலைக் கல்வியைச் செம்மையாகப் பெற்றுக்கொண்ட இவர் பாடசாலைக் காலத்திலிருந்தே நடிப்பு மற்றும் பேச்சுத் துறையில் சிறந்து விளங்கிவருகிறார். ஸ்ரீரெலிகொம் நிறுவனத்தின் பிரதிப் பொது முகாமையாளர், பொறியியலாளராக இருந்து அண்மையில் ஓய்வு பெற்ற இவர் சிறந்த நிர்வாகியாகவும் பிறரோடு அன்பாகப் பழகும் பக்குவமும் கொண்டதிறமையான பொறியியலாளர் ஆவர். அவரது தொழில் சார்ந்து ரெலிகொம் நிறுவனத்தில் பணியாற்றியிருந்தாலும் அவர் சமூகத்தின்மீது கொண்ட அக்கறை காரணமாக சமூகத்தின் சிறு அசைவுகளையும் துல்லியமாக அவதானிக்கும் ஆற்றல் உடையவர் என்பது அவரது படைப்புக்களை நுகரும் போது வெளிப்படுகின்றது.

பஞ்சாமிர்தம், சட்டத்தின் திறப்புவிழா, பஞ்சாயுதம், மனவைரம், வண்டல் மண், விதை, பொக்கிசம் ஆகிய ஏழு நூல்களை இதுவரையில் வெளியிட்டுள்ள அம்பலவாணர் ஐயா அவர்கள் தற்போது 'சுமை' என்கின்ற நூலை ஆறு நாடகங்களின் தொகுப்பாக வெளியிடுகிறார். இவை வானொலி நாடகங்களாக ஒலிபரப்பப்பட்டவை. வானொலி நாடகத்துக்குரிய அனைத்துக் கட்டமைப்புகளையும் கொண்டதாக அமைந்துள்ளன. சுமை, சத்தியம், வந்தாளே மகராசி, பரிசு, தூண்டில், உயர்ந்தவர்கள் ஆகிய ஆறு நாடகங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு நாடகமும் அமைப்பாலும் கருப்பொருளாலும் கதை நகர்வாலும் பாத்திரங்களின் தன்மையாலும் மொழிநடையாலும் தனித்துவமுடையதாக உள்ளது.

முதியவரைப் பராமரிப்பது சுமை என்று எண்ணும் ஒரு குடும்பத்துக்கு நிகழும் துன்பியலை 'சுமை' என்கின்ற நாடகம் பதிவு செய்கிறது. 'சத்தியம்' என்கிற நாடகம் மகாபாரதக் கதையைத் தொன்மமாகக் கொண்டு உண்மையின் வலிமை பற்றி இயம்புகிறது. 'வந்தாளே மகராசி' என்னும் நாடகம் கொரோனாவை மகராசி என்று உருவகித்து அதன் துன்பங்களை இரத்தமும் சதையுமாகப் பதிவு செய்கிறது. 'பரிசு' என்கிற நாடகம் முதுமையின் கொடுமையைப் பதிவுசெய்வதோடு தலைமுறை இடைவெளியைக் கடந்து தாத்தாவை நேசிக்கும் பேரன் ஒருவனின் பேரன்பையும் காட்டுகிறது. இது கிறிஸ்தவ சமயப் பின்னணியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மிகக் கூறுகள் சிதையாமல் எழுதப்பட்டிருப்பது எழுத்தாளரின் ஆளுமைக்கு மற்றொரு எடுத்துக்காட்டு. 'தூண்டில்' என்கிற அடுத்த நாடகம் வைத்தியக் குடும்பமொன்றின் வாழ்வில் ஏற்பட்ட ஏமாற்றத்தை இயம்புகிறது. 'உயர்ந்தவர்கள்' என்கிற நாடகமும் முதுமையை அடிப்படையாகக் கொண்டே நகர்கிறது. இவற்றை வாசிப்பவர்கள் ஆசிரியரின் மொழிநடை, பாத்திரத் தெரிவுகள், கதைப் பின்புலம் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை அடிப்படையாகக் கொண்டு வாசிக்கும் கலைஞரும் எழுத்தாளருமான இந்தப் படைப்பாளியின் தனித்துவங்களைத் தரிசிக்க முடியும்.

நூற்றுக்கு மேற்பட்ட வானொலி நாடகங்களுக்குப் பின்னணிக் குரல் வழங்கியுள்ள அம்பலவாணர் அவர்கள் யாழ்ப்பாணக் கிராமியத் தமிழைத் துல்லியமாகப் பேசக்கூடியவர் மட்டுமல்லர் தனது எழுத்துப் படைப்புகளிலும் அவற்றைச் செம்மையாகப் பதிவு செய்துள்ளார். 'சுமை' என்கின்ற இந்தத் தொகுப்பில் வரும் நாடகங்களில் இடம்பெறும் வெக்கறை, எக்கணம், இஞ்சை பாரப்பா, கொண்ணர்.. போன்ற சொற்கள் இதற்குப் பதச்சோறாக அமைவன.

அதுமட்டுமன்றி யாழ்ப்பாணத்தில் கிராமப்புறங்களுக்கே உரித்தான தற்போது அருகிவருகின்ற ஒப்பாரிப் பாடல்களை வந்தானே மகராசியில் "கங்கு வட்டில் ஒட்டு விட்டால்.. என்ரை அக்கா.. காவோலை கீழை விழும்.. தெங்கு வட்டில் ஒட்டு விட்டால்.. என்ரை அக்கா.. தென்னோலை கழண்டு விழும். என அப்படியே மாறாமல் ஒப்புவித்தும், "கட்டி அழுதுவிட்டால்.. கொரோணா தொத்திவிடும் எண்டுமெல்லோ.. எட்டி நிண்டு அழச் சொல்லி.. விதானை கட்டளையே போட்டிருக்கான். தொட்டு அழுதமெண்டால்.. தொத்தி விடுமெண்டு சொல்லி முட்டாமல் முடிக்கட்டாம்.. அவன் உத்தரவு போட்டிருக்கான்.." என்று சந்தர்ப்பத்துக் கேற்றவாறு ஒப்பாரி புனைவு பெறுதலை களநிலைமைக்கேற்ப வெளிக்கொணர்ந்தும் "இண்டைக்கு அட்டமி தொடங்குதெண்டு.. என்ரை சீமான் நேற்று வெட்டின உப்பட்டியை.. குத்துப்போர் ஆக்கியெல்லோ துரை குத்தாட்டம் வந்தாரே.." என்று உழவுத் தொழிலில் பாவனையிலிருக்கும் உப்பட்டி, குத்துப்போர் போன்ற சொற்களையும் அட்டமியில் காரியங்கள் செய்ய ஆரம்பித்தலைத் தவிர்ப்பதையும் தந்து தான் வாழ்ந்த மண்ணின் வாசனையை மணங்கமழச் செய்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசின் சாகித்திய விருது, கலாசார அலுவல்கள் அமைச்சும் கலாசாரத் திணைக்களமும் வழங்கிய அரச வானொலி விருது, தந்தை செல்வா விருது, திருமுறைச் செம்மல் விருது உட்பட பல்வேறு உயர் விருதுகளுக்குச் சொந்தக்காரன். ஒரு அகில இலங்கை சமாதான நீதவான் வானொலி நாடகங்கள் மட்டுமல்லாது சிறுவர் நாடகங்கள், சிறுவர் இலக்கியங்கள், சிறுகதைகள், கவிதைகள், பாடலாக்கம் என பல துறைகளில் தடம் பதித்து பல போட்டிகளில் பங்குபற்றி விருதுகளையும் பெற்றுள்ளார்.

தொழிலிலிருந்து ஓய்வு பெற்றாலும் ஓயாது கலை இலக்கிய உலகில் பணியாற்றும் மறவன்புலோ செல்வம் அம்பலவாணர் ஐயா அவர்கள் மேலும் பல வெற்றிகளையும் விருதுகளையும் பெற்று உயர வேண்டும் என்றும் மேலும் பல படைப்புக்களை இவ்வுலகிற்கு நல்க வேண்டும் என்றும் இவ்வேளையில் இறைவனை வேண்டுகிறேன்.

அமிர்தலிங்கம் பௌநந்தி
யாழ்ப்பாணம்
20.12.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை..



தமிழுக்கு ஆவணிக் கடைசியில் விதைப்பு. தை, மாசியில் வயலில் அறுவடை. அறுவடைமுடிய களத்தில் எடுத்த மீசுவலி நெல்லில் தொடங்கி பொங்கல், குளிர்த்தி எனக் கோவில்களில் கொண்டாட்டம். ஏன் வீடுகளிலும் தான். மாசியில் மகா சிவராத்திரி. பங்குனியில் பங்குனித்திங்கள். அம்மன் குளிர்த்தி, சித்திரைப் பரணி, சித்திரைக்கஞ்சி, வைகாசி விசாகம், ஆவணி கிருஷ்ண ஜெயந்தி பெரும் பொங்கல்கள் இப்படி இப்படி. இவற்றுடன் கொடும்பாவியும் உண்டு.. (கோவிலில் அல்ல) கிராமத்து வழிபாட்டுத் தன்மைகள் அச்சொட்டாகப் பேணப்பட்டு கடவுளின் அருட்கடாட்சத்தை அனுபவரீதியாக உணர்கின்ற சூழல்.

இவைதான் ஆறுமாதம் பச்சைக் கம்பளமாகவும் மிகுதி ஆறுமாதமும் வரண்ட கானல்பறக்கும் கடும்தரையுமான எமது மறவன்புலோவின் வாழ்க்கை வட்டங்கள்.

மேற்கூறியவை கோவில் விழாக்கள் என்று தோன்றினாலும், கலைகளுக்கு ஊற்றாய் அமையும் மூலங்கள் என்றால் மிகையாகாது. கோவில்களில் கதைகூறல், உடுக்கு அடித்துப் பாடுதல், கரகம் பாலித்தல், காவடி ஆட்டம், கூத்து மற்றும் நாடக உருவாக்கங்கள், வில்லுப்பாட்டு, பாட்டுக் கச்சேரி, 'சின்னமேள' (சதிராட்டம்) இறக்குமதி போன்றவை அரங்கேறும் நிகழ்வுகள். இந்நிகழ்வுகள் நடக்கும்போது ஒருபகுதியிலும் (உபயகாரர்-பகுதி பகுதியாக) பார்க்க மற்றப்பகுதி சிறப்பாகவும், ஆடம்பரமாகவும் செய்யவேண்டும் என்ற ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையே இவற்றின் வளர்ச்சிக்கு மூலதனம் என்றால் மிகையாகாது.

பனங்குற்றிகளால் அமைக்கப்பட்ட (தலையாடி) மேடைகளில் (பின்னையகாலகட்டத்தில் ட்ராக்டர் பெட்டிகள் பாவிக்கப்பட்டன). சூடடிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்குகள் மேடையின் மறைப்பாகவும், நிலத்தில் பார்வையாளர்கள் அமரும் விரிப்பாகவும் அமைய, திறந்த வெளியரங்கில் லைற்மெசினின் மின்னொளியில் (Generator Engine) கலைநிகழ்வுகள், நாடகம் மேடையேறும்.

எமது கிராமத்துடன் இணைந்துள்ள 'கலை ஆபரணம் கோட்டை' 'கலையாபரணன் கோட்டை'. அது கலைக்கான அணிமணிகள் சேர்த்த மாபெரும் களஞ்சியமோ அன்றேல் கோட்டையோ? (இதுதொடர்பாக மேலதிக தகவல்கள் சேகரிக்க வேண்டியுள்ளது) அதனாற்தானோ என்னவோ எமது கிராமச் செல்வங்களில் கலையும் ஊறியிருப்பது மறுப்பதற்கில்லை.

'நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்..'

என்பது போல இந்தச்சூழலில் வளர்ந்து, கலைகள் தவழுமிடத்தில் அமைந்துள்ள யாழ்/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் விடுதியில் தங்கிப் படித்ததனாலேயே இத்துறையில் ஈர்க்கப்பட்டு பாடசாலைச் சமூகமும் உந்துசக்தியாக அமைய கலைஆர்வமுள்ள பொறியியலாளராக எனது வாழ்க்கைப் பயணம் தலைநகராம் கொழும்புக்கு நகர்ந்தது.

இந்தக் கலையார்வமானது பொறியியல்துறையில் மன அழுத்தங்கள் ஏற்படும்பொழுது அவை கிறுக்கல்களாகவும், இரைச்சல்களாகவும் வெளிப்பட்டன. இவை இலங்கைவானொலி என்ற குடையின்கீழ் கலைத்துறை ஜாம்பவான்களினால் புடம்போடப்பட்டு கலைஉலகிற்கு என்னை அடையாளப்படுத்தின. அதன்மூலம் கிடைத்த விருதுகள் என்னை மேலும் மெருகூட்ட இன்றுநான் 'வானொலி நாடகக் கலைஞனாக' தொண்ணூறு வரையான நாடகங்களுக்குக் குரல் கொடுத்து, 'நாடகப் பிரதி எழுத்தாளராக' ஐம்பது வரையான நாடகப்பிரதிகளையும், 'நூலாசிரியராக' 2018ஆம் ஆண்டின் சிறந்த சுயநாடக நூலுக்கான அரசவிருது பெற்ற 'மனவைரம்' உட்பட ஏழு நூல்களையும் வெளியிட்டு தொலைக்காட்சித்துறையையும் ஊறுகாய்போல் தொட்டு ஒரு 'இலங்கை கலாச்சாரத் திணைக்களத்தினால் அங்கீகரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளப்படுத்தப்பட்ட நாடகக் கலைஞனாக, சமூகத்திற்கு அடையாளப் படுத்தி இன்று எட்டாவதான ஆக்கத்தின் மூலம் உங்களைச் சந்திக்கின்றேன்.

பாடசாலைக் காலத்தில் 'ரோகிணி' அக்காவினால் கால்கோளிடப்பட்டு தொடர்ந்து தமிழாசிரியர் மற்றும் விவாதஅணிப் பயிற்றுனருமான திரு.க.சின்னத்தம்பி ஆசிரியர், உலோகவேலை ஆசிரியரும் இந்து மன்றப் பொறுப்பாசிரியருமான திரு க.வேலாயுதம் மற்றும் விடுதிப் பொறுப்பாசிரியர் திரு அ.உ.பயசேகரம் ஆகியோரால் வழிநடத்தப்பட்ட கலைப்பங்களிப்புகள் பற்றிப்பிடிக்க ஏணிபோல் என்னை ஏற்றிவிட்டன,

வானொலித்துறையானது, வானொலி மாமா திரு.எஸ்.எழில்வேந்தன் அவர்களினால் சிறுவர்நாடகப்பிரதி எழுத்தாளராக அறிமுகமாகி தொடர்ந்து திரு.ஜோர்ஜ் சந்திரசேகரன் மூலம் (திரு.பெல்ப்ஸ் ஜெகநாதனின் தொடர் நாடகத்தின் மூலம்) நாடக நடிகராகவும், தொடர்ந்து நாடகப்பிரதி எழுத்தாளராகவும். அறிமுகம் பெற்று கலாபூசணம் வி.என்.மதிஅழகன், வானொலிக்குயில் திருமதி இராஜேஸ்வரி சண்முகம், திரு.இராசபுத்திரன் யோகராசன், திரு.லூக்கஸ் திருச்செல்வம், திரு.தக்கீசன் சிவராசா ஆகிய தயாரிப்பாளர்களின் மெருகூட்டலில் காலூன்றி, 2018 அரச வானொலி விருதுவிழாவில் 'விதி' என்ற நாடகப்பிரதிகு சிறந்த நாடகப் பிரதிக்கான ஜூரி விருதினையும் பெற வழிவகுத்துத் தந்தது.

தற்போதைய பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி ஆசிரியர்களும் முன்னாள் கொழும்பு றோயல் கல்லூரி தமிழ்நாடக மன்றப் பொறுப்பாசிரியர்களுமான திரு.கு.ஸ்ரீ.ராகவராஜன், திருமதி சாந்தினி செல்வதாஸ் ஆகியோருடன் கலாபூசணம் சைவப்புலவர் திரு செல்லத்துரை (ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகியோரின் உந்து சக்தியும் ஊக்குவிப்பும் என்னை ஒரு நூலாசிரியராக்கி, 2019ல் 'மனவைரம்' என்ற ஆறாவது நூல்மூலம் இலங்கை கலாசாரத் திணைக்களத்தின் 'சுயநாடக நூலுக்கான அரசஇலக்கிய விருது பெற' வைத்து அழகு பார்த்தது என்றால் மிகையாகாது. இவர்களுடன் தொலைக்காட்சி நாடகத்தில் எனக்கு அறிமுகத்தை தந்த திரு.கலைச் செல்வன் அவர்களையும் மறக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையுலகிற்குச் சமர்ப்பணமாகும் இந்த 'சுமை'க்கு கலையுலகத்தில் தமக்கென முத்திரை பதித்தவர்களான கலாநிதி சிவஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள் அவர்களது அருளுரையையும், டவர்ஹோல் நிறுவன பிரதிப்பணிப்பாளரும் தமிழ் மேடை நாடகத்துறைக்குப் பொறுப்பாளருமாகிய கலாநிதி ஜெயப்பிரகாஷ் சர்மா அவர்களின் ஆசியுரையையும், இலங்கையின் மூத்தகலைஞரும் என்னை அவ்வப்போது மெருகேற்றித் தட்டிக் கொடுத்துவரும் கலாபூசணம் கே.சந்திரசேகரன் அவர்களின் அட்டைப்பட அறிமுகத்தையும் எல்லாவற்றிற்கும் மேலாக தவறை தவறென்று தயங்காது சுட்டிக்காட்டும் பண்பட்ட நூல் ஆய்வாளர், விமர்சகர்,கொழும்புப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு அமிர்தலிங்கம் பௌநந்தி அவர்களது நூல் பற்றிய அணிந்துரைகளையும் பெறத்தக்கதாய் அமைந்தமை நான் செய்த பெரும் பாக்கியமே.

இவர்களுட்பட இங்கு பெயர்குறிப்பிடப்படாத, வானொலியில் உடன் குரல்கொடுத்த கலைஞர்களுட்பட என்னைச் செதுக்கியெடுத்த அத்தனை கலையுலக பெரியவர்களுக்கும், அவ்வப்போது தமது விமர்சனங்களின்மூலம் என்னை புடம்போடும் நண்பர் குழாமிற்கும் அட்டைப்படத்தை வடிவமைத்துத்தந்த இந்தியா, பங்களூரைச் சேர்ந்த திரு.ஹரிஸ்குமார் அவர்களுக்கும், எனது புத்தகங்களை அழகாகப் பதிப்பித்துத்தரும் KJ பிறின்ரேர்ஸ் நிறுவனத்தினருக்கும் உளம்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு, எனது கலைப்பசிக்கு களமமைத்துத்தந்த கலையுலகிற்கு சுமை, சத்தியம், வந்தாளே மகராசி, தூண்டில், பரிசு, உயர்ந்தவர்கள் ஆகிய ஆறு நாடகங்களை உள்ளடக்கிய 'சுமை' என்ற இந்த நாடக நூலைச் சமர்ப்பணமாக்குகின்றேன்.

நன்றி

உங்கள் அன்பு அம்பலம்

05.12.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமையின் உள்ளே ...


1. சுமை 3

2. சத்தியம் 25

3. வந்தாளே மகராசீ 51

4. பரிசு 69

5. தூண்டில் 97

6. உயர்ந்தவர்கள் 114


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. சுமை



நாடகமாந்தர்கள் :

| | | |
|---|---|---|
| ஐயம்பிள்ளை | – | குடும்பத் தலைவன் |
| சாந்தினி | – | ஐயம்பிள்ளையின் மனைவி |
| பிள்ளையம்மா | – | ஐயம்பிள்ளையின் தங்கை |
| சாமித்தம்பி | – | பிள்ளையம்மாவின் கணவன் |
| ரகு | – | ஐயம்பிள்ளையின் மகன் |
| செய்திவாசிப்பவர் | – | பெண் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. சுமை

காட்சி : 1

மாந்தர்கள் : **ஐயம்பிள்ளை, ரகு, சாந்தினி**

களம் : **ஐயம்பிள்ளையின் வீடு**

ஐய : ரகு.. எடுத்தெறிஞ்சு பேசாதை.. மாமிக்கு என்னை விட்டால் ஆரடா இருக்கினம்.. அவர் மாமாவும் தனியன்..

ரகு : அப்பா.. சொன்னால் கேளுங்கோ. என்னத்துக்கு வீண் சோலியளை தேடிப்போய் விலைக்கு வாங்கவேணுமோ எண்டுதான் சொல்லுறன்.

ஐய : எதுமோனை வீண்சோலி.. என்னத்தையடா விலைக்கு வாங்கிறது. உன்ரை மாமி பிள்ளையம்மா.. என்னோடை கூடப் பிறந்தவளடா.. வீண்சோலி இல்லையடா சொந்தம்.. ஓம் கூடப்பிறந்த இரத்தச் சொந்தம்..

ரகு : அப்பா பிள்ளையம்மா மாமி உங்களோடை கூடப் பிறந்தவா தான்.. அது எனக்கும் தெரியும். ஆனால் சோலி இல்லையெண்டு சொல்லாதையுங்கோ அப்பா..

ஐய : நாளைக்கு கொக்கா ரூபாவையும் நீ உப்பிடித்தான் சொல்லுவாய் போலை..

ரகு : அது வந்தப்பா..

சாந் : இஞ்சேருங்கோ.. நீங்கள் உங்கடை தங்கச்சிக்காகக் கதைச்சு.. அதுகளைப் பிரிச்சுவையாதையுங்கோ.. சகோதரங்களைப் பிரிக்காதேங்கோ.. இந்தக் கதையுக்கை அதுகளை ஏன் தேவையில்லாமல் இழுக்கிறியள்..

ஐய : (தடுமாறி) இல்லை ரகுவுக்கு ரூபா போலைதான்.. பிள்ளையம்மாவும் எனக்கெண்டு சொல்லவந்தன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந் : அவையை மாதிரியே ரூபாவும் வரவேணுமெண்டு நீங்களே கடவுளைக் கேக்கிறியள் போலை கிடக்குது.. ஒருநாளும் அப்பிடி வராது.. எங்கடை பரம்பரை அப்பிடியானதில்லை.. ஓ.. அதை நினைவிலை வைச்சிருங்கோ..

ஐய : என்ரை பிள்ளைக்கு நான் அப்பிடி வரவேணுமெண்டு நினைக்கிறன் எண்டு நாக்கூசாமல் சொல்லுறியே.. சீ..

சாந் : அப்ப..

ஐய : எங்கடை பரம்பரையும் அப்பிடி இல்லை எண்டு சொல்லுறன் ஆனால்..

சாந் : என்ன ஆனால் எண்டு இழுக்கிறியள்.. அதுதானே கண்ணாலை பாக்கிறமே.. ஏறிஇழந்து இந்தியா போயும்.. என்னத்தைக் கண்டவை.. இப்ப.. நீங்கள் அவையை எங்கடை தலையிலை கட்டிவைக்கப் பாக்கிறியள்.

ரகு : அதுதானே அம்மா.. பெத்த தாய் தகப்பனையே வயோதிப சாலையோ.. அனாதைமடமோ எண்டு கொண்டுபோய் தேடுவாரில்லாமல் விடுற நேரம்.. இது தனக்கும் இடு.. தன் சிண்ணுக்கும் இடெண்டால்..

சாந் : அதுதானே.. அதுதான் நானும் சொல்லுறன்.. உங்களுக்கு தங்கச்சியாய் இருக்கலாம். ஆனால் கண்டபடி அவையை அண்டவேண்டாம்.. அவையவையை வைக்கவேண்டிய இடத்திலை வைக்கவேணும்.. அவளவுதான் சொல்ல ஏலும்..

ஐய : என்ன சாந்தினி..

சாந் : ஓம்.. இண்டைக்கு அண்டி உறவுகொண்டாடுவினம்.. நீங்களும் தங்கச்சி எண்டு உருகுவியள்.. நாளைக்கு அவை படுக்கை எண்டு விழேக்கை.. என்ரை பிள்ளையள் தான் தூக்கிப் பறிச்சு.. மலம் சலம் எல்லாம் எடுக்கவேண்டி வரும்.. அதுகளுக்கென்ன தலையெழுத்தே.. தூரத்திலை வைச்சால் எதிர்பார்ப்பு இருக்காது.. தாங்களே வயது வரேக்கை எங்கையேன் வயோதிப மடத்துக்குத்தன்னும் ஒழுங்கு பண்ணிப் போவினம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரகு : ஓம் அம்மா.. அப்பா இப்ப சொல்லிப் போடுவர்.. பிறகு கிடந்து அனுபவிக்கிறது நாங்களெல்லோ.. அதுதான் சொல்லுறன்.. இப்பவே கொஞ்சம் எட்டத்தை வைச்சிருக்க வேணும்.. அவளவுதான்.. (புறுபுறுத்தபடி) தான்போக வழியைக் காணேலையாம் மூஞ்சூறு விளக்குமாத்தையும் தூக்கிச்சுதாம் எண்ட மாதிரி எல்லோ கிடக்குது அப்பாவின்ரை கதை..

ஐய : நாளைக்கு நீங்கள் விழுந்தாலும் தூக்கி விடுறது அவைதான் அதையும் மறந்திடாதையுங்கோ..

சாந் : (ஏளனமாக) ஓ.. எக்கணம் எங்களை அவை தான் தூக்கி நிறுத்தப் போகினம்.. எதிர்பாத்துக்கொண்டு இருங்கோ..

ஐய : இஞ்சைபார் சாந்தினி.. நீரடிச்சு நீர்பிரியப் போறதில்லை.. ஏதோ உடன் பிறப்பெண்டு சின்ன வயசிலை ஐயாவும் செத்துப் போக அவள் பட்ட பாட்டை நினைச்சன்.. அதுக்குப்போய்..

சாந் : அதுக்குத்தானே அள்ளு கொள்ளை சீதனத்தைக் குடுத்து கலியாணம் செய்து குடுத்தாச்சுதே.. பிறகென்ன..

ரகு : அதிலை குறைவிட்டனீங்களே.. இல்லைத்தானே...

ஐய : சரி.. சரி.. நீங்கள் சொல்லுறது தான் சரி. ஏற்றுக் கொள்ளுறன். ஆனால்.. நீங்கள் கொட்டுற வார்த்தையள் உங்களுக்குச் சொந்தமானதாக இருக்கலாம். கேக்கிற காதுகள் அடுத்தவையின்ரை எண்டதை நினைப்பிலை வைச்சிருங்கோ.. மற்றவையின்ரை மனம் எவளவு வேதனைப்படும் எண்டதையும் நினைச்சுப் பாருங்கோ.. அவள் தங்கச்சியின்ரை காதிலை இது விழுந்தால்..

சாந் : என்ன.. தங்கச்சியின்ரை காதிலை இது விழுந்தால் எண்டு பாதியிலை நிப்பாட்டிப் போட்டியள். விழவேணுமெண்டு தான் சொல்லுறன்.. அவையும் அறியவேணும்.. புரிய வேணும் எண்டு தான் சொல்லுறன்..

ஐய : அப்பா.. உண்மையைச் சொன்னால்.. நீங்கள் வார்த்தை.. வேதனை எண்டு ஏதோ எல்லாம் இழுக்கிறியள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐய : (தழுதழுத்து) ஓம் ரகு.. புரியுதடா.. இஞ்சைபார்.. வார்த்தைகளின்ரை மதிப்பு தெரிஞ்சவையோடை வாதம் செய்.. வார்த்தைகளாலை வதம் செய்யிறவையோடை மௌனம் செய் எண்டு ஆரோ ஒருத்தன் சொன்னது உண்மை எண்ணிறது இப்ப புரியுது.. நீங்கள் அவள் தங்கச்சியின்ரை மனசைப் புரியாமல் கதைக்கிறியள். அதுகளின்ரை நல்ல மனசைப் பற்றித் தெரிஞ்சால் உந்தமாதிரிச் சொல்ல மாட்டியள்.. ம்...

சாந் : (ஏளனமாக) என்ன.. உள்ளதைச் சொன்னாப் போலை உடம்பெல்லாம் குத்துதோ.. நாங்கள் இஞ்சை ஒருத்தரையும் வதம் செய்யேலை.. ஓ.. கதைக்கிறது எண்டாப்போலை.. அது பிள்ளையளோடை எண்டாலும் கண்ணியமாய்க் கதைக்கப் பழகுங்கோ முதலிலை..

ரகு : ஓம்.. நீங்கள் தானப்பா எங்களை வதம் செய்யிறியள். ஓமப்பா.. தேவையில்லாத சுமையளை ஏற்க வேண்டாமெண்டு தானே சொல்லுறம். அவளவுதானே..

ஐய : சரி.. உணரும் வரை உண்மை ஒரு பொய்தான்.. அதைப் போலைதான் புரியிற வரைக்கும் வாழ்க்கையும் ஒரு புதிர்தான். புரியுதடா.. நான் தங்கச்சியையோ மச்சானையோ இஞ்சை எனக்குக்கிட்டவாய் கொண்டந்து இருத்தேலை.. உங்களுக்கு சுமையை சுமத்தேலை.. உங்கடை சந்தோசத்தைக் கெடுக்கேலை.. இப்ப சரிதானே..

சாந் : என்னண்டாலும் புரிஞ்சால் சரி.. தேவையில்லாத சுமையை விலைக்கு வாங்க வேண்டாம்.. அவ்வளவு தான்..

ஐய : (பெருமூச்சு விட்டு) ஏதோ இண்டைக்கு உங்கடை கொடிதான் பறக்குது. பறக்கட்டும்.. படைச்சவன் ஆருக்கு எண்டாலும் படி அளக்காமல் விடவே போறான். ஆனால் ஒண்டை மட்டும் மறந்திடாதையுங்கோ.. கயிறு அறுந்துபோகேக்கை தான் பட்டத்துக்குத் தெரிஞ்சுதாம்.. உயரம் தனக்குச் சொந்தமானது இல்லை எண்டு.. ம்.. எதுவும் பட்டுத் தெளிஞ்சால் தான் தெரியும்.

......... காட்சி மாற்றம் .........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி : **2**

மாந்தர்கள் : **சாமித்தம்பி, பிள்ளையம்மா**

களம் : **சாமித்தம்பியின் வீடு. பிள்ளையம்மா சமையலறையில் சமைத்துக் கொண்டிருக்கிறார்**

சாமி : என்னப்பா.. உம்மடை கொண்ணர் ஐயம்பிள்ளை.. பிள்ளையள் குடும்பத்தோடை வானிலை கதிர்காமம் போறாராம்.. சுன்னாகம் சந்தையிலை அறிஞ்சன்.

பிள் : அதுக்கென்னப்பா.. கதிர்காமம் தானே.. அதுகள் ஏதேன் நேர்த்தியாக்கும்.. (பெருமூச்சு விட்டு) ம்.. அண்ணை யெண்டாலும்.. கண்ணீறு படக்குடாது.. அவருக்கென்ன குறை வாகனம் கையுக்கை நிக்குது. ட்ரைவர் வீட்டோடை.... ஆளடுக்கு உள்ளதுகள். காசிலை மிதக்கிறதுகள்.. என்னத்தைத்தான் செய்யேலாது.. அதுக்கு நீங்கள்போய்..

சாமி : இஞ்சைபார் பிள்ளையம்மா நான் அதை இல்லையெண்டு சொல்லேலை. (தயங்கி) எங்களையும் ஒருசொல்லுக் கேட்டிருக்கலாம் எண்டு மனம் சொல்லிச்சுது. அதுதான் சொன்னன்.

பிள் : ஏன்.. உங்களுக்கு கதிர்காமம் போக ஆசையாய் இருக்கே சொல்லுங்கோ. இந்த வருச வோறன்ற் மூண்டு செற்றும் அப்பிடியே இருக்குது. வேளைக்கே புக் பண்ணினால் போனம் வந்தம். பிறகென்ன..

சாமி : (தயங்கி) இல்லை.. ஐயம்பிள்ளை மச்சான் ஒரு சொல்லு எங்களையும் கேட்டிருக்கலாம். எல்லாரும் குடும்பமாய்ப் போகேக்கை.. தங்கச்சியும் தனியன்.. ஆளும் ஆளும்தான். பிள்ளையோ குட்டியோ.. அதுகளையும் ஒரு சொல்லுக் கேட்டுப்பாப்பமெண்டு நினைக்கேலை.. ம்..

பிள் : இப்ப உங்களுக்கென்ன.. கதிர்காமத்துக்குப் போகேலை எண்டு கவலையோ.. அல்லாட்டில் வாகனத்திலை.. இல்லை இல்லை.. ஐயம்பிள்ளை மச்சான்ரை வாகனத்திலை கதிர்காமத்துக்குப் போகேலை எண்டு கவலையோ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமி : அது வந்து.. வந்து.. எப்பிடியெண்டாலும் சொல்லுமன்.

பிள் : நீங்களப்பா.. பட்டும் பட்டும்.. அதுகள் உவ்வளவு கேளாக் கேள்வி கேட்டும்.. அதுகளைப் பற்றி இவ்வளவு காலம் அறிஞ்சும்.. திருந்தேலை.. உவ்வளவு எதிர்பார்ப்பு வைச்சிருக்கிறியள். நாய்வாலை நிமித்த ஏலாதெண்டது போலை.. என்ரைமனிசன் சாமித்தம்பியரையும் ஒருநாளும் திருத்தேலாதப்பா..

சாமி : மூண்டு வீட்டையும் பூட்டிப்போட்டு.. தாய் தகப்பன் மகன் குடும்பம், மகள்குடும்பம் எண்டு எல்லாரும் போட்டினமாம். ஒருத்தரும் மிச்சமில்லையாம்.

பிள் : தூரப்பயணம்.. எல்லாரும் போறதெண்டால் பூட்டிப் போட்டுத் தானே போகவேணும்..

சாமி : இல்லை.. நாங்களும் போயிருப்பம் எண்டு நினைச்சதாம். என்னைச் சந்தையிலை கண்டாப்போலை ஏன் நீங்கள் போகேலையோ எண்டு கேட்டார்.. எனக்கு ஒருமாதிரிப் போச்சுது

பிள் : (இடைமறித்து) இப்பபுரியுது. ஆர் கேட்டிருப்பினம் எண்டு. அதுகள்.. எங்கை என்னையும் அண்ணையையும் கொழுவி விடலாம் எண்டு பாத்துக் கொண்டிருக்கிறதுகள். நாங்கள் ஒற்றுமையாய்க் கதைச்சுப் பேசிறது பிடிக்காது..

சாமி : அவையைச் சரிஎண்டு சொல்லவரேலை.. எண்டாலும்.. பிள்ளையளையும் மருமக்களையும் விடும். அவர் மச்சான் தன்னும்.. ஆருமில்லாததுகள். எங்களை விட்டால் சொந்தமெண்டு இஞ்சை ஒருத்தருமில்லாததுகள். போற வானிலை.. ரெண்டு பேர்தானே தங்கச்சியையும் மனிசனையும் கூட்டிக்கொண்டு போவம் எண்டு.. ம்.. கொண்ணர் தன்னும் நினைக்கேலைப் பாரும்..

பிள் : அண்ணையிலை ஏன் குறைசொல்லுறியள். போகுதுகள்.. குடும்பமாய்ப் பிள்ளையள் மருமக்களோடை போகுதுகள்.. அதுகள் என்னென்ன சொல்லிச்சுதுகளோ.. ஏனப்பா.. ம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் போறது.. சீச்சி நாங்கள் போய் அதுகளுக்கு இடைஞ்சலாய்.. சுதந்திரத்திலை கட்டுப்பாடுகளை வைக்கிறதாய் இருக்கும் எண்டு நினைச்சுப் பாருங்கோ..

சாமி : (கேலியாக) ம்.. அவை என்ன சொன்னாலும்.. செய்தாலும்.. கடைசியிலை நீ என்னை மட்டம் தட்டுவியே தவிர.. ஒரு நாளும் கொண்ணரை விட்டுக் குடுக்கமாட்டாய் எண்டது தெரிஞ்ச விசயம் தானே.. இதென்ன புதிசே..

பிள் : ம்.. என்ன செய்யிறது.. ஓம்.. உரலுக்கு இரண்டு பக்கம் இடி எண்டு தெரியாமலே சொல்லுறது.. நானும்.. எனக்கோ அல்லது உங்களுக்கோ ஏதேன் ஒண்டெண்டால்.. ஆர் உதவுறது.. சரியோ பிழையோ.. அண்ணையும் பிள்ளையளும் தானே.. அதாலைதான் அவையள் எங்களை மதிக்காட்டிலும்.. ஏதோ பூசி மெழுகி.. எடுத்தெறியாமல் சமாளிச்சுக் கொண்டு போறது..

சாமி : (ஏளனமாக) ஓமெண்டு சொல்லன்.. ம்.. கோயிலுக்குப் போகினமாம் கோயிலுக்கு.. கண்ணுக்குத் தெரிஞ்ச மனிசரை மதிக்கத் தெரியாததுகள்.. ஏறிஇழுந்து கண்ணுக்குத் தெரியாத கடவுளைத் தேடிப்போய் என்னத்தைத்தான் எடுக்கப் போகினமோ தெரியாது..

பிள் : (பெருமூச்சுடன்) உண்மைதான். உதைத்தான் அன்னை திரேசாகூட இருகைகூப்பி கடவுளை வணங்குவதை விட ஒருகை நீட்டி உதவி செய்.. இருகை உன்னை வணங்கும் கடவுளாக.. எண்டு சொல்லியிருக்கிறா.. எங்களுக்கும் ஒருத்தருமில்லை..

சாமி : அப்பிடிச் சொல்லாதை.. இஞ்சைபாரப்பா.. உனக்கெண்டு கொண்ணர் இல்லாமலிருக்கலாம். உலகத்திலை யாரும் இல்லாமலிருக்கலாம்.. நீயும்.. ஒருத்தரும் இல்லை எண்டு சொல்லலாம்.. ஆனால் ஆரோ ஒருத்தருக்குத் தன்னும் நீதான் உலகமாயிருக்கிறாய் எண்டதை மட்டும் மறந்து விடாதை..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள் : ஏதோ பேச்சுக்குச் சொல்லுங்கோ.. (அழுதுகொண்டு) நான் ஆருக்கு மனசறிஞ்சு என்ன கெடுதல் செய்தன்.. எந்தக் கடவுளுக்கு என்ன குறை வைச்சன். ஆனால்.. என்ரை விசயத்திலை.. கடவுள் ஏன்தான் எனக்கு இப்பிடி ஓரவஞ்சனை செய்தாரோ..

சாமி : பிள்ளையம்மா.. ஆண்டவனிலை ஏனப்பா கோவிக்கிறாய்.. ஆண்டவன் ஒருத்தரை சோதிக்கிறது கஷ்டங்களை குடுக்கிறதுக்காக இல்லை.. எங்களைச் சுத்தி இருக்கிற.. முகமூடி போட்டுக் கொண்டு திரியிற உறவுகளையும் சிநேகிதங்களையும் பற்றி நாங்கள் அறியவேணுமெண்டு தான்.. அதை நினைவிலை வைச்சிரு..

பிள் : அதை இல்லையெண்டு சொல்லேலை..

சாமி : அப்ப..

பிள் : நீங்களே சொல்லுங்கோ பாப்பம்.. ம்.. (அழுது) நாடு கடந்து போய் வைத்தியம் செய்தும்.. அதுவும் ஆசையைக் காட்டி மோசம் செய்தது தான். மூண்டு மாதம் சுமந்து கற்பனைக் கோட்டையைக் கட்டினன்.. கடைசியிலை.. நான் குடுப்பனவில்லாதவள்..

சாமி : இஞ்சைபாரப்பா.. நடந்தது நடந்து முடிஞ்சுது.. அதையே பிறகும் பிறகும்.. நான்தான்.. என்ரை வாயைச் சும்மாய் வைச்சிருக்கேலாமல்.. இப்ப உனக்குக் கதையைத் தந்தது.

பிள் : நீங்கள் கதையைத் தந்தாலென்ன தராட்டிலென்ன.. உண்மைதானே.. அதை என்னணடப்பா மறக்கேலும்.. இந்தக்கட்டை எரிஞ்சு சாம்பலாகும் மட்டும் மறக்குமே.. ஒரு குழந்தை இருந்திருந்தால் இப்பிடி இருக்க வேண்டி வந்திருக்குமே.. மற்றவையை விடுங்கோ.. கூடப் பிறந்த அண்ணை குடும்பமே தங்களுக்கு சுமையாய்ப் போயிடுவமெண்டு வேண்டா வெறுப்பாய் ஒதுக்க வேண்டி வருமே..

சாமி : சும்மாய் விடப்பா அதுகளை..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள் : அந்த ஒண்டாலைதானே நான் மற்றவைக்குப் பயந்து நடுங்கி இருக்கிறது. அவையளும் தாங்கள் ஏதோ உலகத்திலை இல்லாத பிறப்புகள் எண்டு உசத்தி காட்டுறது.. எங்களுக்கும் ஒரு பிள்ளை இண்டைக்கு இருந்திருந்தால் இப்பிடி எல்லாரும் செய்வினமே..

சாமி : இஞ்சைபார் பிள்ளையம்மா.. இதுக்குப்போய் ஏன் இப்ப அழுகிறாய்.. படைக்கேக்கை பிரமன் எழுதினது.. மற்றவையை குறைசொல்லி என்ன பிரயோசனம்... எடுத்ததுக் கெல்லாம் அதையே திரும்பத் திரும்ப இழுக்காதை.. உனக்குத் தெரியுமே.. பிள்ளை இல்லாதவைக்கு இதுதான் கடைசிப் பிறப்பாம்.. எங்கையோ படிச்சனான். அந்தமட்டிலை தன்னும் நாங்கள் குடுத்து வைச்சனாங்கள் எண்டு நினை..

பிள் : (அழுது) நீங்கள் எழுத்தாளன்.. அது இதெண்டு வாசிச்சுத் தன்னும் மனதைத் தேற்றுங்கோ.. என்னையும் சமாளியுங்கோ.. ஆனால் நான்.. நான்.. (விக்கி அழுது) உறவுகள்.. அதிலையும் கூடப்பிறந்த உறவுகளே இப்பிடிச் செய்யேக்கை.. ஏலாதப்பா.. வாழ்க்கையே ஏன் எண்டு வெறுத்துப் போச்சுதப்பா..

சாமி : (அதட்டி) சும்மாய் அழாதை.. கண்ணைத் துடை... இஞ்சைபார்.. உறவுகள் தூக்கியெறிஞ்சால் வருத்தப் படாதை.. வாழ்ந்து காட்டு.. குழந்தை இருந்தால் மட்டும்தான் வாழ்க்கை எண்டு நினையாதை..

பிள் : (சிணுங்கி) ம்..

சாமி : அவை உன்னைத் தேடிவரக் கூடியதாய் வாழ்ந்து காட்டு.. அதுமட்டுமில்லை ஆர்வேணும் எண்டு நாங்கள் முடிவு செய்யிறதைவிட, நாங்கள் வேணும் எண்டு மற்றயவையை நினைக்க வைக்கத் தக்கதாக வாழ்ந்து காட்டவேணும். அதை நினைவிலை வைச்சிரு.. இல்லாததுக்கு வருந்திறதை விட்டிட்டு.. தேடுறதை விட்டிட்டு.. இருக்கிறதிலை திருப்திகொள்.. அழாதை.. கண்ணைத்துடை...

பிள் : சரி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமி : உன்னை ஒதுக்கிறவைக்காக வாழ்க்கையையே வெறுக்கிற உனக்கு.. உன்னை மட்டுமே.. (கலங்கு) உன்னை மட்டுமே நேசிக்கிற நான் இருக்கிறதை மறந்திடாதை.. உனக்கு நானும்.. எனக்கு நீயும்.. இதுபோதும் தானே.. இதைவிட வேறு என்ன வேணும்..

பிள் : அதாலை தான் நான் இன்னும் மனிசியாய் வாழ்ந்து கொண்டிருக்கிறன்.. ம்.. சரி.. அதைத்தன்னும் என்னை முந்தப் பண்ணிப்போட வேணும் எண்டுதான் நான் எந்தநாளும் அம்பலத்தாடியானிட்டை கேட்கிறனான்..

சாமி : (சிரித்து) பார்.. அதிலையும் சுயநலம்.. நானெண்டால் உவன் நடேசன்ரை தாய்தகப்பன்.. அமிர்தநாயகத்தாரையும் மனிசியையும் போலை.. இரண்டு பேரையும் ஒண்டாயே கூப்பிடு எண்டுதான் கேக்கிறனான். (உணர்ச்சிவசப்பட்டு) இருந்து பார். அது நடக்கும்.. அதுதான் நடக்கும்.. நீ போனாப்பிறகு.. இருக்கிறதைப் பற்றி என்னாலை நினைச்சே பார்க்கேலாது.. நீ இருந்துபார்.. நடக்கும்.. ம்.. அதுதான் நடக்கும்..

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 3**

**மாந்தர்கள் : சாமித்தம்பி, பிள்ளையம்மா, செய்தி வாசிப்பவர், ஐயம்பிள்ளை**

**களம் : சாமித்தம்பியின் வீடு. வானொலிப் பெட்டியில் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்க தொலைபேசி மணி அடிக்கின்றது**

அறிவி : நீங்கள் கேட்டுக் கொண்டிருப்பது இலங்கை தமிழ் வானொலியின் "சிந்தையில் முந்தியவை" தத்துவப் பாடல்கள் ஒலிக்கும் உங்கள் அபிமான நிகழ்ச்சி.. இந்த மணித்தியாலயத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தித் துளிகளைத் தொடர்ந்து நேயர்கள் நிகழ்ச்சியைக் கேட்கலாம்..

நிகழ்ச்சி இசை..

- இலங்கை தமிழ் வானொலியின் மணிச் செய்திகள்.. வாசிப்பவர் உங்கள் உமா..
- முதலில் தலைப்புச் செய்திகள்..
- தெற்கு அதிவேக வீதியில் கோர வாகன விபத்து.. சாரதி உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் பலி.. தந்தை கால்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதி..
- உலகை ஆட்டிப் படைத்த கொரோணாவின் தாக்குலால் சரிவடைந்த உலக பங்குச் சந்தை படிப்படியாக பழையநிலைக்குத் திரும்பியது.
- விளையாட்டு - T20 போட்டிகளில் இரட்டைச்சதம் என்ற சாதனைக்கு முதன்முதல் சொந்தமாகக் கூடியவர் ஆசியவீரரேயாகும்.. நேற்றைய போட்டிக்குப் பின்னர் மனம் திறக்கிறார் மாட்டின் பிறேக்கர்

இனி விரிவான செய்திகளைப் பார்ப்போம்.

யாழ்ப்பாணம் சுன்னாகத்திலிருந்து கதிர்காமம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஹைஏஸ் வான் மாத்தறை நகரிற்கு நான்கு கிலோமீற்றர் தூரத்தில் இன்று அதிகாலை இரண்டு மணியளவில் விபத்துக்கு உள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் ஸ்தலத்திலேயே பலி. இவர்களில் வாகனச் சாரதியும் உள்ளடங்குவர். 55 வயது மதிக்கத்தக்க குடும்பத்தின் தந்தையார் என அறியப்படுபவர் ஆபத்தான நிலைமையைத் தாண்டி, இரு கால்களும் துண்டிக்கப்பட்ட நிலையில் மாத்தறை வைத்தியசாலை அவசர விபத்துப் பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளார். வாகனம் வேகக்கட்டுப்பாட்டை மீறி மின்கம்பத்துடன் மோதியமையே விபத்துக்கான காரணம் என ஆரம்ப பொலிஸ் விசாரணைகளிலிருந்து அறியக் கிடக்கின்றது.

(மொபைல் தொலைபேசி மணி அடிக்கின்றது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த வருடம் டிசம்பர் மாதத்திலிருந்து கொரோனா வைரஸ் தாக்கத்தினால் சரிவடைந்திருந்த சர்வதேசப் பொருளாதாரம் படிப்படியாக முன்னேறி தற்போது பழையநிலைக்குத் திரும்பி பங்குச் சந்தை நிலையான தன்மையை அடைந்துள்ளது.

சாமி : ஹலோ.. ஹலோ..
உந்த றேடியோவை நிப்பாட்டப்பா.. ஒண்டும் சரியாய் விளங்குதில்லை.. நம்பரும் ஆரெண்டு தெரியேலை.. ஹலோ.. ஹலோ.. (போய்க் கொண்டு) கொஞ்சம் பொறுங்கோ வெளியிலை வந்து கதைக்கிறன்.. ஹலோ..ஹலோ..
ஆ.. ஆர்.. மச்சானே.. ஐயம்பிள்ளை மச்சானே.. கதைக்கிறது.. என்ன ஒண்டும் விளங்குதில்லை.. குரலும் ஒருமாதிரிக் கிடக்குது.

ஐய : (குடும்பமே விபத்தில் இறந்து விட்டது. இவருக்கும் கால்கள் துண்டிக்கப்பட்டு வைத்தியசாலையில் அந்தச் சோகம் உணர்வு குரலில் தெரிய வேண்டும்) (தளுதளுத்த குரலில்) ஓம் மச்சான்.. நான்தான் ஐயம்பிள்ளை கதைக்கிறன்.

சாமி : சொல்லுங்கோ மச்சான்.. என்ன ஒண்டும் விளங்குதில்லை.. ஏதோ கிணத்துக்கை இருந்து கதைக்கிற மாதிரிக்கிடக்குது.

ஐய : அது மச்சான்.. வந்து.. வந்து.. நாங்கள் எல்லாரும்.. அதுதான் சாந்தினி.. மக்கள்.. மருமக்கள்.. எல்லாரும் எங்கடை வானிலை கதிர்காமத்துக்கு வந்தனாங்கள்..

சாமி : ஓம்.. ஓம். தெரியும்.. சுன்னாகம் சந்தையிலை சுந்தரம் சொன்னது..

ஐய : ஆ..ஆ.. நாங்கள் வந்த.. வந்த வான்.. வான்.. அடிபட்டுப்.. அடிபட்டுப் போட்டுது..

சாமி : (ஆச்சரியத்துடன்) என்ன.. வான்.. அடிபட்டுப் போட்டுதோ..

ஐய : ஓம்.. ஓம்..

சாமி : எங்கை.. பிலனே.. ஆக்களுக்கு ஒண்டுமில்லைத்தானே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐய : ம்.. ம்.. மாத்தறை ஹைவேயிலை..

சாமி : மாத்தறை ஹைவேயிலையோ. அப்ப.. இப்ப எங்கையிருந்து கதைக்கிறியள்.

ஐயம் : நா.. நான்.. மாத்தறை ஆஸ்.. ஆஸ்பத்திரியிலை இருந்து கதைக்கிறன்.

சாமி : என்ன மாத்தறை ஆஸ்பத்திரியிலையோ.. அப்ப மற்றவை..

ஐய : ஓம்.. ஓம்.. நான் மாத்தறை ஆஸ்பத்திரியிலை தான்.. மற்றவைக்கு என்ன நடந்ததெண்டு.. எங்கை எண்டது தெரியேலை.. ரெலிபோன் எடுத்தனான்.. ஓவ் பண்ணியிருக்கு.. இவையளும் கேட்டால் ஒண்டும் சொல்லுகினம் இல்லை.. ஏதோ குசு குசு எண்டு தங்களுக்கை சிங்களத்திலை கதைக்கினம்.. எனக்கு.. எனக்கு.. இரண்டு காலும் இடுப்புக்குக் கீழே வெட்டினதைப் பற்றிக் கதைக்கினமோ.. அல்லாட்டில் அவையைப் பற்றியோ தெரியாது..

சாமி : என்ன இரண்டு காலும் இடுப்புக்குக் கீழை வெட்டினதோ..

ஐய : ஓம் மச்சான்.. அதுவந்து.. முன்.. முன்சீற்றிலை இருந்தனான்.. இறுகிப் போச்சு.. இழுத்தெடுத்ததாலை வெட்டினதாம். அவையைப் பற்றித் தான் தெரியாது.. ஆனால் பயமாய்க் கிடக்குது.. பொலிஸ்காரங்களும் ஏதோ வித்தியாசமாய்க் கதைக்கினம்.. கேட்டால் ஒண்டும் சொல்லுகினம் இல்லை..

சாமி : அவைக்கொண்டும் நடந்திருக்காது.. அப்பிடியெண்டால் கதைச்சிருப்பினம்.. எதுக்கும்.. ஆருக்கெண்டாலும் எங்கடை நம்பரைக் குடுங்கோ.. நான் இன்ரசிற்றியிலை வெளிக்கிட்டு வாறனே.. வந்து விபரமாய்க் கேட்பமே..

ஐய : ஓம் மச்சான்.. வாங்கோ.. எனக்கு ஏலாது.. இஞ்சை சிங்களமும் தெரியாது.. நீங்கள் வந்தால் சமாளிப்பியள். இஞ்சை ஆர்.. இஞ்சை ஆர் இருக்கினம் எனக்கு.. இப்பதான் ஒப்பிரேசன் முடிஞ்சு அறிவுவரக்.. கதைச்சனான். எனக்கெண்டு ஆர் இருக்கினம்.. அதுதான் மச்சான்.. கொஞ்சம் கெதியாய் வந்தால் அவையைப் பற்றி அறியலாம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமி : ஓம்.. ஓம்.. அவைக்கொண்டும் நடந்திருக்காது.. மனதைத் தளரவிடாதையுங்கோ.. நான் வந்து பாப்பமே.. எதுக்கும் எங்கடை நம்பரை.. எழுதிக் குடுங்கோ.. தேவைக்கு கதைப்பினம் தானே.. நான் இன்ரசிற்றியிலை வெளிக்கிட்டு வாறனே.. வந்து விபரமாய்க் கேட்பமே..

ஐயம் : ஓம் மச்சான்.. வாங்கோ.. தங்கச்சி தனியத்தான்.. புறுபுறுப்பள்.. ஏதேன் ஒழுங்கு பண்ணிப்போட்டு.. எனக்கு ஏலாது எண்டு சொல்லிப் போட்டு வாங்கோ....

சாமி : அவவை விடுங்கோ.. அது நான் இஞ்சை ஒழுங்கு பண்ணுறன்.. ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ.. நான் வாறன்.. ஒரு இரவு தானே.. இப்ப இன்ரசிற்றியிலை ஏறினனெண்டால் விடிய அங்கை நிப்பன்.. யோசியாதையுங்கோ..

ஐய : ஓம் மச்சான்.. உங்களைப் பாத்திருப்பன்.. அவையளைப் பற்றி அறிஞ்சால் இந்த நம்பருக்கு சொல்லுங்கோ.. சரி வைக்கிறன் மச்சான்.. கட்டாயம் வாங்கோ..

சாமி : சரி..சரி..மச்சான்..

பிள் : (வந்து கொண்டு.. சிறிது கோபமாக) என்ன.. சரி.. சரி.. மச்சான்.. றேடியோவை நிப்பாட்டச் சொல்லிப் போட்டு.. ரகசியமாய்.. என்னவாம் வீடு எப்படியெண்டு பாக்கட்டாமே.. போகேக்கை ஒரு சொல்லுச் சொல்லிப் போட்டுப் போனால்.. அவையின்ரை வானிலை நாங்களும் தொத்திப்போயிடுவம் எண்டு சத்தப்படாமல் மூச்சுக்கூட விடாமல் போட்டு.. இப்ப என்னவாம்.. வீடுகளைப் போய்ப் பாக்கட்டாமே.. எனக்குத் தெரியும்.. தெரிஞ்ச விசயம்தானே.. உதுதான் நடக்கு மெண்டு தெரியும்தானே.. நெடுக நடக்கிறது தானே.. அவர் கதைச்சிட்டார் எண்ட உடனை.. இனி இவர் இஞ்சை நிண்டு சன்னதம் ஆடப்போறார்..

சாமி : இல்லையப்பா.. கொஞ்சம் பொறு.. என்னை வரட்டாம். ஒருக்கால் வரட்டாம்.. மாத்தறைக்கு வரட்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள் : என்ன உங்களை வரட்டாமோ.. மாத்தறைக்கு வரட்டாமோ.. என்னத்துக்காம்.. மாத்தறைக்கு..

சாமி : கொஞ்சம் பொறு.. துள்ளாதை.. கொஞ்சம் பொறப்பா.. சொல்லுறதைக் கேள்.. ஏதோ அங்கை வான் அக்சிடென்ராம்.. மச்சானை மாத்தறை ஆஸ்பத்திரியிலை நிப்பாட்டி இருக்குதாம். அது தான் வரட்டாம்..

பிள் : என்ன மாத்தறை ஆஸ்பத்திரியிலை நிப்பாட்டியிருக்குதோ.. அப்ப.. அப்ப.. அந்த றேடியோ நியூஸ்.. அண்ணை குடும்பம் தானோ.. (இறப்பை நினைத்து அழுதல்) அண்ணை.. அண்ணை.. என்ரை அண்ணை.. (தொடர்ந்து அழுதல்)

சாமி : இஞ்சை பிள்ளையம்மா.. இப்ப ஏன் கத்திக்குழறுறாய்.. கத்திக்குழறி ஊரைக் கூட்டுறாய். அவருக்கு ஒண்டுமில்லை.. அவர்.. அதுதான் கொண்ணர்தானே ரெலிபோனிலை கதைச்சவர்.. மாத்தறை ஆஸ்பத்திரியிலை நிப்பாட்டி இருக்குது எண்டு வரச்சொன்னவர்.. பிறகேன் அழுகிறாய்.. அழுகையை நிப்பாட்டப்பா.. நான் இப்ப வெளிக்கிட்டாத் தான் இன்ரசிற்றியிலை தன்னும் போகலாம்.. அழுகையை நிப்பாட்டு.. போற ஒழுங்கைப் பார்.. இரத்தினம்மா ஆச்சியை இரவுக்கு கிடக்க வரச் சொல்லி ஒருக்கால் உந்த ரெலிபோனிலை கேட்டுப்பார்.. அழுகையை நிப்பாட்டு.. நடக்க வேண்டியதைப்பார்..

......... காட்சி மாற்றம் .........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி : 4

மாந்தர்கள் : சாமித்தம்பி, பிள்ளையம்மா, ஐயம்பிள்ளை

களம் : **சாமித்தம்பியின் வீடு. ஐயம்பிள்ளை கால்கள் இழந்த நிலையில் குடும்பமே இறந்த நிலையில் தங்கையுடன் சக்கரநாற்காலியில் வாழ்ந்து வருகிறார்.**

பிள் : அண்ணை.. இந்தா தேத்தண்ணி.. முகத்தைக் கழுவிப் போட்டுக் குடிப்பம். எழும்பு.. இந்தாருங்கோ..

ஐய : ம்..ம்.. சரி..சரி.. இஞ்சை.. இதிலை பிடி.. எழும்புவம்.. ம். என்ன செய்யிறது.. இப்பிடி வரும் எண்டு ஆர் நினைச்சது.. எல்லாம் விதி..(வாய் கொப்பளித்தல்).

சாமி : மச்சான்.. மாதமும் இரண்டு ஆகுது. இன்னும் அதையே நினைச்சுக் கொண்டு இருந்தால்..

பிள் : அண்ணை.. இந்தா இப்ப தேத்தண்ணியைக் குடி.. உதுகளைப் பற்றி ஆறுதலாய் கதைப்பம்..

ஐய : இஞ்சை தா.. ம்.. இரண்டு மாதம் இல்லை.. இந்தச் சீவனும் போய்ச் சேரும் மட்டும் மறக்கேலுமே.. (அழுது) ஒரு செக்கன் மச்சான்.. கண்மூடி முழிக்கக்கிடையிலை எங்கடை குடும்பத்தையே இல்லாமல் துடைச்சுப் போட்டுது ம்.. ஐஞ்சு பேரைக் கொண்டு போனது போலை என்னையும் கொண்டு போயிருந்தால் நிம்மதியாய் இருந்திருக்கும். இண்டைக்கு நானும் வீல் செயரிலை ஆற்றையேன் கையைநம்பி..

பிள் : (சிறிது கோபத்துடன்) ஏன் அண்ணை ஆற்றையேன் கையை நம்பி எண்டு சொல்லுறியள். நான் ஆரிட்டை நன்மை கேட்டன்.. ஏன் அண்ணை எங்களை நீயும்.. பிறத்தி காட்டிறாய்.. நானோ அல்லது அவரோ ஒருநாளும் அப்பிடி நினைக்கேலை..

சாமி : ஓம் மச்சான் எங்களுக்கு இதாலை ஒரு பிரச்சனையோ அல்லது கஸ்டமோ இல்லை மச்சான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐய : நான் ஏதோ வாயிலை வந்ததைச் சொல்லிப் போட்டன். என்ரை மனம் இப்ப ஒரு நிலையிலை இல்லை.. நீங்கள் பிறத்தி காட்டேலைத்தான்.. அதை இல்லையெண்டு சொல்லேலை.. ஆனால்..

பிள் : ஆனால்.. போனால் எண்டு இழுக்கிறதை விட்டிட்டு தேத்தண்ணியைக் குடியுங்கோ.. அப்பதான் நேரத்துக்கு குளிச்சிட்டுச் சாப்பிடலாம்.

ஐய : ம்.. கடலுக்குப் போட்டுவந்து விரும்பின நேரம் குளிச்சு.. விரும்பின நேரம் சாப்பிட்ட எனக்கு.. இப்ப குளிக்க வாக்க ஒரு ஆள்.. சாப்பாடு தீத்த ஒரு ஆள்.. ஒண்டுக்கு ரெண்டுக்கு போக வீல் செயரிலை தூக்கிப்பறிக்க.. இப்பிடி ஒரு வாழ்க்கை தேவையே..?. கடவுள் ஏன் இப்பிடித் தண்டிக்குதோ.. நான் என்ன பாவம் செய்தனோ தெரியாது.?

சாமி : இஞ்சை பாருங்கோ மச்சான்.. உதுகள் ஒண்டும் எங்களுக்குப் பிரச்சனையில்லை.. நாங்கள் இரண்டு பேரும் தானே.. இரண்டு பேரும் சமையலும் சாப்பாடும் எண்டு சும்மாய் தானே இருந்தனாங்கள்.. அதிலை கஷ்டமில்லை.. ஏதோ நடந்தது நடந்திட்டுது. அதையே யோசிச்சுக் கொண்டிருக்கிறதை விட்டிட்டு நடக்கப்போகிறதைப் பற்றி யோசியுங்கோ..

ஐய : ஓம்..ஓம்.. இஞ்சை பாருங்கோ.. சிரிக்கும் போது வாழ்க்கையை வாழத்தான் முடியும்.. ஆனால் அழும்போது தான் வாழ்க்கையைப் புரிந்து கொள்ள முடியும் எண்டு ஆரோ சொன்னதை இப்ப யோசிச்சுப் பாத்தன்.

சாமி : மச்சான் நீங்கள் சந்தோசமாய் வாழ்ந்தனிங்கள்.. இனி வாழ்க்கை என்னவெண்டு புரிஞ்சனீங்கள் இப்ப அதுக்குப்போய்..

பிள் : அண்ணை நாங்கள் இருக்கும் மட்டும்.. எங்களாலை ஏலக் கூடியதாய் இருக்கும் மட்டும் நாங்கள் உன்னோடை தான்.. பிறத்தியாரெண்டு நினையாதை..

ஐய : அதை யோசிக்கேக்கைதான்.. நினைக்கேக்கைதான் கவலையாயிருக்குது.. என்ரை மனச்சாட்சியே உறுத்துது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள் : இதிலை என்ன யோசிக்க இருக்குது.. கவலைப்பட இருக்குது சொல்லுங்கோ பாப்பம்..

ஐய : உங்களுக்குத் தெரியாது.. ஆனால்

பிள் : என்னண்ணை.. என்ன அப்பிடி.. எங்களுக்குத் தெரியாது.. ஆனால் எண்டு விழுங்குறியள்.. ஏன் இஞ்சத்தைய வசதியள் ஏதேன் பிடிக்கேலையே அண்ணை. என்ன செய்யிறது. என்ரை நிலைமை.. உனக்கேற்ற சந்தோசமான வசதியளைத் தரமுடியாமலிருக்கும்.. ஆனால் ஏதோ இஞ்சை இருக்கிறதைக் கொண்டு நான் எங்களால ஏலக்கூடியளவுக்கு.. சந்தோசமாய் உன்னைப் பாக்கிறன் அண்ணை. (பெருமூச்சு விட்டு) ஏதோ அம்மா ஐயாவுக்குத் தான் ஒண்டும் செய்யேலை எண்டு கவலைப்பட்டனான். இண்டைக்கு ஐயாவுக்கு ஐயாவாய் இருக்கிற உங்களைப் பாக்கிறதையிட்டு எவ்வளவு சந்தோசமாய் இருக்கிறன் தெரியுமே அண்ணை..

ஐய : அதில்லைப் பிள்ளையம்மா.. அது வந்து..

பிள் : (அக்கம் பக்கம் பாத்து) தனக்குள்.. அவர் இல்லை ம்.. ஏன் அண்ணை.. அவர் ஏதும் சொன்னவரே அண்ணை.. அவர் ஆள் கதைக்கேக்கை கொஞ்சம் சுடுதண்ணி மாதிரித் தான் தெரியும். ஆனால் மனதிலை ஒண்டும் வைச்சு அறுக்கிறவர் இல்லை அண்ணை.. அவர் நான் ஏதும் சொல்லிப் போடுவனெண்டே என்னை உறுக்கிறவர்.. அவர் போய்..

ஐய : (இடைமறித்து) அம்பலத்தாடியானே.. அந்தாளை அப்பிடிச் சொன்னால் ஆண்டவனுக்கே பொறுக்காது.. அவரைச் சொல்லாதை பிள்ளை.. அவர் தங்கப் பவுணடி.. அவரை நானும் பிள்ளையளும் தான் சரியாய்ப் புரிஞ்சு கொள்ளாமல் விட்டிட்டம்..

பிள் : அண்ணை என்ன சொல்லுறியள்.

ஐய : உங்களை நம்பும் மனிதர்களிடம் ஒரு பொழுதும் பொய் பேசாதீர்கள் ஆனால் உங்களிடம் பொய் பேசும் மனிதரை ஒரு போதும் நம்பாதீர்கள் எண்டது நூற்றுக்கு நூறு உண்மையடி. எல்லாம் இழந்து தனியனாய்த் தவிக்கேக்கை தான் அவர் எவளவு தூரம் எங்களை நேசிச்சார்.. நாங்கள்.. சாந்தினி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையள் எப்பிடி அளந்து வைச்சிருந்தினம் எண்டு நினைக்கேக்கை.. என்ரை மனச்சாட்சியே என்னை உறுத்துதடி தங்கச்சி..

பிள் : ஏனண்ணை.. அப்பிடி.. என்ன நடந்தது எண்டு சொல்லன்..

ஐய : இல்லை.. மனிசியும் பிள்ளையளும் உங்களுக்குப் பிள்ளை குட்டி இல்லை எண்டாப்போலை.. கடைசி காலத்திலை நீங்கள் தங்களுக்குச் சுமையாய்ப் போடுவியளெண்ட உணர்விலை.. உங்களோடை உறவு கொண்டாடுறதையே எவ்வளவு தூரம் தவிர்த்தினம் எண்டதை உங்களுக்குத் தெரியாது பிள்ளை..

பிள் : ம்.. தெரியாது எண்டில்லை.. சாடைமாடையாய் விளங்கிச்சுது. அதை ஏன் இப்ப.. அதைவிடுங்கோ முடிஞ்ச கதை

ஐய : ஓம்.. (அழுது) உங்களை மாமா மாமி எண்டு சொந்தம் கொண்டாடினால் தங்களுக்குத் தான் சுமையாயிருக்கும் எண்டும், படுக்கையிலை போனால்,.. தூக்கிப் பறிச்சு மலம் சலமும் தாங்கள் தான் எடுக்கவேண்டிவரும் எண்டு நினைச்சு எவளவுதூரம் பிறத்தி காட்டினதுகள்.

பிள் : அது அண்ணை.. வந்து..

ஐய : உனக்குத் தெரியாதடி தங்கச்சி.. அவர் நெருங்கி.. நெருங்கி வர.. ஏதோ திட்டத்தோடைதான் வாறார் எண்டு அதுகள் விலத்தி விலத்திப் போய்ச்சுதுகள். இண்டைக்கு நான் தேடிவந்து.. என்னை உங்களுக்குச் சுமையாய்..

பிள் : அதை விடுங்கோ அண்ணை..

ஐய : (அழுது) ஓம்.. மனிசனாய் ஊசாடித் திரியிற காலத்திலையே.. இரண்டு காலும் இல்லாமல்.. வீல்செயரிலை.. குளிப்போ.. முழுக்கோ.. ஒண்டுக்கு ரெண்டுக்குப் போகவேணுமோ எல்லாம்.. எல்லாத்தையும் உங்களுக்கு சுமையாய் சுமத்திப்போட்டு அதுகள் போய்ச் சேர்ந்திட்டுதுகள். நான்தான் கிடந்து அனுபவிக்கிறன்.. ஏதோ இன்னும் மிச்ச சொச்சம் செய்த கறுமம்.. குடுக்குமதி கிடக்குது போலை.. இல்லாட்டில் எல்லாரையும் கொண்டு போனவன் என்னை மட்டும் மற்றவைக்குப் பாரமாய் விட்டிட்டு..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள் : நீயும் அதையே திருப்பி திருப்பிச் சொல்லுறாய்.. இஞ்சைபார் (அழுது) நானோ உண்ணாணை அண்ணை.. அவரோ உன்னை ஒரு சுமையாய் அண்டைக்கோ.. இண்டைக்கோ சரி நினைக்கேலை அண்ணை.. எண்டைக்கும் நினைக்க மாட்டம்.. ஏனண்ணை உப்பிடிச் சொல்லுறாய்..

சாமி : ஓம் மச்சான்.. இஞ்சை பாருங்கோ.. 'ஒண்டுமில்லாத உழவன் தான் உலகத்தையே சுமக்கிறான்.. ஆனால் அவன் ஒருநாளும் சுமையாய் நினைக்கிறதிலை.. அதிலைதான் சந்தோசப் படுகிறான்..' அது மாதிரித்தான்.. நானும் ஒண்டுக்கும் வழியில்லாதவன்.. குடுத்துவைக்காதவன் தான்.. ஆனால் மச்சான்தன்னும் இண்டைக்கு எங்களோடை இருக்கிறார் எண்ட சந்தோசப்படுறன்.. உந்த அம்பலத்தாடியான் சத்தியமாய் ஒருநாளும் உங்களை சுமையாய் நினைக்கேலை..

ஐயம் : இல்லை.. இல்லை.. ஒருநாளும் இல்லை.. உங்களை நான் ஒருநாளும் அப்பிடி நினைக்கேலை.. இஞ்சைபார் பிள்ளையம்மா.. வெற்றியைவிடத் தோல்விக்குத்தான் பலம் கூட... ஓம்.. வெற்றி சிரிச்சு மகிழவைக்கும். ஆனால் தோல்வி.. சிந்தித்து வாழவைக்கும்.. புரிஞ்சு கொண்டன்.. நாங்கள் நல்லாய் இருக்கேக்கை.. நீங்கள் தங்களுக்குச் சுமையாய் இருப்பியள் எண்டு அதுகள் நினைச்சுதுகள்.. இண்டைக்கு சரியோ பிழையோ.. நீ சொன்னாலோ சொல்லாட்டிலோ.. நான் உங்களுக்குச் சுமையாய்.. ஓம் பிள்ளையம்மா இதுதான் அம்பலத்தாடியானின்ரை சோதனை.. அண்டைக்கு சிரிச்சம்.. இண்டைக்கு வாழ்க்கை எண்டால் என்னண்டு சிந்தக்கவைச்சு.. உனக்குச் சுமையாய் வாழ்ந்து கொண்டிருக்கிறன். அதுதான் உண்மை.

........ **நிறைவு** ........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ௨. சத்தியம்



நாடக மாந்தர்கள் :

| | | |
|---|---|---|
| அரவான் | – | அர்ச்சுனனதும் உலுப்பியினதும் மகன் |
| கிருஷ்ணர் | – | பாண்டவர்களது மைத்துனன் |
| உலுப்பி | – | நாகநாட்டு அரசி |
| துரியோதனன் | – | கௌரவர்களில் மூத்தவன் |
| தருமர் | – | பாண்டவர்களில் மூத்தவன் |
| பீஷ்மர் | – | கௌரவ படைச் சேனாபதி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 சத்தியம்

**காட்சி : 1**

**மாந்தர்கள் : கிருஷ்ணர், துரியோதனன்**

**களம் : துரியோதனனது அரண்மனை.**

**பாண்டவர்களுக்கான இறுதித்தூதாக கிருஷ்ணர் துரியோதனது அரண்மனைக்குவந்து உரையாடுவது. மகாபாரத யுத்தம் ஆரம்பிக்க இருக்கின்றது**

கிரு : துரியோதனா! நான் உனது வீடு தேடி வந்திருக்கிறேன். நீ என்னிடம் எதுவுமே பேசாமல் கண்டும் காணாதவன் மாதிரி இருக்கின்றாயே.

துரி : உண்மைதான் கிருஷ்ணா! நான் ஏன் உன்னிடம் பேச வேண்டும்? அதைக்கூறு..

கிரு : என்ன துரியோதனா.. அப்படிக்கேட்டு விட்டாய். உன் வீட்டுக்கு விருந்தாளியாக நான் வந்திருக்கிறேன் அப்படியிருக்க..

துரி : அதனால்தான் அப்படிச் சொன்னேன் கிருஷ்ணா. ஊருக்குள் வந்தால்.. என்வீட்டுக்கு விருந்தாளியாக வருவதாக இருந்தால்.. முதலில் என் வீட்டுக்கல்லவா வந்திருக்க வேண்டும்?.. ஆனால் நீ அப்படிச் செய்யவில்லையே.. நீ விதுரனின் மாளிகைக்கு சென்று விட்டுத்தான் இங்கு வந்தாயே.

கிரு : (சிரித்து) அட அதற்காகவா துரியோதனா.. ம்.. சரி.. அதனால் தான் பேசாமல் இருக்கிறாயா?.. இங்கே பார் துரியோதனா! எனக்கு உன் வீடு.. என் வீடு.. பிறர் வீடு.. என்ற பேதமில்லை. எனக்கு எல்லாருமே வேண்டியவர்கள் தான். (பதிந்து) நான் வரும் வழியில் விதுரர் என்னை எதிர்கொண்டு வரவேற்று அழைத்தார். அதனால், அவர்வீட்டுக்கு போனேன். அவ்வளவு தான். அதைவிட வேறு விசேடமாக எதுவுமில்லை..

துரி : (வேண்டா வெறுப்பாக) ம்.. அப்படியா.. நல்லது..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரு : அதுமட்டுமல்ல, நான் உன்வீட்டிற்கு வராததற்கு மற்றொரு முக்கிய காரணமும் இருக்கின்றது.

துரி : என்ன..? (எரிச்சலுடன்) அதைத்தான் கேட்கின்றேன்.

கிரு : நான் பஞ்சபாண்டவர்களின் தூதனாக இன்று வந்திருக்கிறேன். உன் வீட்டிற்கு வந்தால் நீ விருந்துபசாரம் செய்வாய். அது உனது சிறந்த பண்பு. யார் வீட்டிலாவது சாப்பிட்டதன் பின் அவர்களுடன் மனஸ்தாபப்பட்டாலோ, அங்குள்ள பெரியோர்கள் சொல்லும் உபதேசங்களை அலட்சியம் செய்தாலோ, செய்த உபகாரத்தை மறந்தாலோ அவர்களுக்கு நரகம்தான் கதி. அதனால்

துரி : (இடைமறித்து - சிறிது கோபத்துடன்) சொர்க்கம் யாருக்கு நரகம் யாருக்கு என்பதெல்லாம் கிடக்கட்டும். இப்பொழுது வந்த விடயத்தை.. அதுதான் பாண்டவர்களின் தூதனாக வந்ததற்கு காரணமெதுவோ..?

கிரு : துரியோதனா! பாண்டவர்களுக்கு நீ நியாயமாக கொடுக்க வேண்டியதை கொடுத்து விடு. அது அவர்களுடைய பூமி. அவர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட நிபந்தனையின்படி வனவாச காலத்தை நிறைவு செய்து விட்டார்கள்.

துரி : அதற்கு..

கிரு : அதைத்தான் இறுதியாகக் கேட்டு வந்தேன். இனியும் நீ அவர்களுக்கு அவர்களது ராஜ்ஜியத்தை ஒப்படைக்காது விட்டால் அது எவ்வகையிலும் தர்மமாகாது. மேலும் அது உன் வீரத்திற்கும் புகழுக்கும் இழுக்கைத்தரும்.. அதையும் நினைவில் வைத்திரு..

துரி : (சிரித்து) ம்.. தர்மம்.. அதர்மம்.. கண்ணா!.. நீ மிகவும் தந்திரமாக எனது நாட்டைப் பிரித்து பாண்டவர்களிடம் ஒப்படைக்க நினைத்து வந்திருக்கிறாய். இங்கே பார் அவர்கள் சூதாட்டத்தில் நாட்டை விட்டது விட்டது தான். தொடர்ந்து அவர்களை வனத்திலேயே இருக்கச்சொல். அது அவர்களுக்கும் நல்லது.. எனக்கும் நல்லது.. ஏன் உனக்கும்தான்..

கிரு : (ஆச்சரியத்துடன்) துரியோதனா..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரி : ஆம்.. எனது முடிவில் எதுவித மாற்றமுமில்லை.. எக்காரணம் கொண்டும் ஒரு ஊரைக்கூட ஏன் இருக்க ஒரு வீடுகூட அவர்களுக்கு நான் தரமாட்டேன். அவ்வளவுதான். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை..

கிரு : இதுதான் உனது முடிவென்றால் போருக்கான அறிவிப்பை வெளியிடுவதைத்தவிர வேறு வழியில்லைத் துரியோதனா! பாண்டவர்களுக்குரிய பூமியை நீயாக அவர்களிடம் கொடுக்க மறுத்தால்.. வேறுவழியில்லை. குருஷேத்திர யுத்தத்திற்கு நீ தயாராகிவிட்டாய்.. பாண்டவர்களை குருஷேத்திரப் போரில்தான் சந்திக்கப் போகிறாய் என்றுதான் அர்த்தம் கொள்ள வேண்டிவரும்..

துரி : அர்த்தமல்ல.. நிச்சயமாக.. அதையேதான் நானும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றேன்..

கிரு : அப்படி எனில் குருஷேத்திர யுத்தத்திற்கு தயார் என்று கூறு..

துரி : (ஏளனமாக) சத்தியமாக.. நானும் குருஷேத்திர யுத்தத்திற்கு தயார்

கிரு : (ஆத்திரத்துடன்) துரியோதனா..!

துரி : என்ன மிரட்டுகிறாயா கண்ணா! (ஏளனமாக) ம்.. நீயார்.. நினைத்துப்பார்.. உனது பிறப்பே கேவலமானது. நீ பசுக்களை மேய்க்கின்றவன். நெய்யும், வெண்ணெயும் திருடியதற்காக இடையர்குல பெண்கள் உன்னை உரலோடு சேர்த்து கட்டி வைத்தார்கள். கேவலம்.. அதை எல்லாம் மறந்துவிட்டு, குருவம்சத்து அரசனான என்னிடம் இப்படித் தைரியமாகப் பேசிக்கொண்டிருக்கிறாய்! அத்துடன் மிரட்டல்வேறு..

கிரு : துரியோதனா.. என்ன சந்தர்ப்பத்தில் எண்ணத்தைச் சொல்லுகிறோம் என்று புரிந்துதான் கதைக்கிறாயா..

துரி : அனைத்தும் நன்றாகப் புரிந்துதான் கதைக்கிறேன். பஞ்ச பாண்டவர்கள் என்னை எதிர்த்தால் மதயானை போல் அவர்கள் முன்னால் நிற்பேன். தயங்கமாட்டேன் மறந்திடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரு : துரியோதனா.. எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்துத்தான் கதைக்கிறாயா..?

துரி : (ஏளனமாக) ஆம்.. பாண்டவர்கள் மானங்கெட்டவர்கள். அவர்களது மனைவியை இந்த சபையிலே கூந்தலை பிடித்து இழுத்துவந்து நான் அவமானப்படுத்தியபோது கையைக் கட்டிக் கொண்டு இருந்த கோழைகள்.. சீ.. அப்படிப் பட்டவர்களுக்காக நீ தூது வந்திருக்கிறாய்.

கிரு : இது ஆணவம் மிக்க பேச்சு.. ஆணவம் மிக்கவர்கள் தோல்வியை தழுவுவது உறுதி.. அதை மட்டும் நினைவில் வைத்துக்கொள் துரியோதனா..

துரி : ஆணவம்.. யாருக்கு..? பாண்டவர் பக்கம் அருச்சுனன் இருக்கிறான் என்ற ஆணவம் உமக்குத்தான். என் நண்பன் கர்ணனிடம் இருக்கும் வில்லுக்கு எந்த அருச்சுனனாலும் பதில் சொல்ல முடியுமா?.. பிதாமகர் பீஷ்மர் தலைமையில் எனது படை வெல்லும்.. நான் எதற்கும் தயார்.. சென்று வாரும்..

கிரு : ம்.. துரியோதனா.. எது எப்படி நடக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளதோ.. அது அப்படியே நடக்கும்.. காலம் தான் பதில் சொல்லும்.. வருகிறேன்.

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 2**
**மாந்தர்கள் : பீஷ்மர், துரியோதனன்**
**களம் : துரியோதனனது அரண்மனை.**

துரி : வணங்குகின்றேன் பிதாமகர் பீஷ்மரே..

பீஷ் : எழுந்திரு துரியோதனா.. என்றும் என் ஆசீர்வாதங்கள்.

துரி : பிதாமகரே! மகாபாரதப் போர் என்பது முடிவு செய்யப்பட்ட தொன்றாகி விட்டது. அதற்குமுன் நாம் களபலி கொடுக்க வேண்டுமல்லவா.. அது தொடர்பாக தங்களுடன் கலந்தா லோசிக்கலாம் என எண்ணுகிறேன்.. அதற்கு உரிய நல்ல நாள் எது என்பதை தாங்கள் தான் சொல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீஷ் : (சிரித்து) உண்மைதான் துரியோதனா.. ஆனால் இங்கேபார் துரியோதனா.. நான் எனது வில்லினாலே உனக்கு போர்க்களத்திலே வெற்றி பெற்றுத்தருவேன். ஆனால் இது போர்க்களமில்லையே.. ஜோதிடம் சார்ந்தது. ஆதனால்..

துரி : (இடைமறித்து) அதனால் உங்கள் வில்லாண்மையை நம்பி.. எமது படைப்பலத்தை நம்பி.. களப்பலி இல்லாமலே யுத்தத்தை தொடங்குவோம் என்கிறீர்களா?

பீஷ் : நான் அப்படிச் சொல்ல வரவில்லை. வில்லில் இருக்கும் திறமையை.. நம்பிக்கையைப்போல் .. ஜோதிடத்தில் எனது இயலாமையைச் சொல்ல வந்தேன்..

துரி : அப்படியா.. அதுசரி.. அப்போ யாரிடம் இதுதொடர்பான ஆலோசனை கேட்கலாம் பிதாமகரே..

பீஷ் : உண்மையைச் சொல்லப் போனால், ஜோதிடத்தில் உன் தம்பி சகாதேவனுக்கு நிகரானவர்கள் வேறுயாரும் இவ்வுலகில் இல்லை துரியோதனா...

துரி : (ஆச்சரியத்துடன்) என்ன பாண்டவர்களில் இளையவன் சகாதேவனா.. நடக்கப் போவது, அவர்களுக்கு எதிரான யுத்தம்.. சுபநேரம் கேட்பது அவர்களிடமேயா? ஆச்சரியமாக இல்லையா..? இது நடக்கக் கூடியதா.. சாத்தியப்படக் கூடியதா..

பீஷ் : துரியோதனா.. சகாதேவன் உனக்கு எதிரிதான் மறுக்கவில்லை. ஆனால் சிறந்த ஜோதிடன். ஜோதிடப்பண்பு கொண்டவன். மறுக்கவே மாட்டான். நீ போய் கேட்டால் ஒரு ஜோதிடனாக.. நிச்சயம் நல்ல நாள் குறித்து தருவான் அதில் சந்தேகம் கொள்ளாதே.. அவனிடம் உள்ள சிறந்த பண்பு அது. அவனுக்கு சோதிடக் கலைமீதுள்ள பக்தி.

துரி : அப்போ.. களப்பலி..

பீஷ் : அது வந்து.. களப்பலி கொடுப்பதற்கு முப்பத்திரண்டு சாமுத்திரிகா இலட்சணங்களையும் உடைய வீரன் தான் சிறந்தது. இப்போதைய நிலையில் நால்வர் மட்டும்தான் அதற்கேற்றவர்களாக இருக்கின்றனர். அவர்களில் ஒருவனை களப்பலி கொடுத்தால் தான் போரில் வெற்றி கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரி : நால்வரா.. யார் அவர்கள் சொல்லுங்கள்..

பீஷ் : ஒருவர் எங்கள் பக்கமுள்ளவர். மற்றையவர்கள் மூவரும்.. இல்லை.. இருவரும் பாண்டவர் பக்கம் உள்ளனர். மூன்றாமவன் பாண்டவர் பக்கமாக இருந்தாலும். பாண்டவர்களில் அருச்சுனனுடன் எதிர்த்தன்மை கொண்டவன்.

துரி : அருச்சுனனுடன் எதிர்த்தன்மை கொண்டவன் என்றால் அந்த மூன்றாமவன் யார். அவனையே நிச்சயிக்கலாம்.

பீஷ் : ஆனால் அது அவ்வளவு லேசான காரியமில்லை துரியோதனா..

துரி : (சிரித்துக் கொண்டு) சகுனி மாமா இருக்கும் வரை இயலாத காரியம் என்று எதுவுமில்லை.. யாரென்று கூறுங்கள்..

பீஷ் : அரவான்.. (நிறுத்தி) அருச்சுனனுக்கும் நாக இளவரசி உலுப்பிக்கும் பிறந்தவன். தந்தையார், மூத்தவர்களாகிய தங்களைக் கவனிப்பதில்லை என்றும் சுபத்திரையின் மகன் அபிமன்யுவுக்கே எதற்கும் முன்னுரிமை கொடுப்பதாக மனப் புழுக்கத்தில் உள்ளவன்.

துரி : ஆ.. அப்படியா..

பீஷ் : ஆம்.. ஆனால் யார் என்ன கேட்டாலும் மறுக்காது கொடுக்கும் சிறந்த பண்பை உடையவன். அவனை நாசூக்காக.. கச்சிதமாக.. வஞ்சகமாகத் தன்னும் கையாண்டு சம்மதிக்கப் பண்ணுவது உனது பொறுப்பு. அதை மறந்திடாதே

துரி : எதற்கும் முயற்சி செய்துதான் பார்ப்போமே..

பீஷ் : அது உனது கெட்டித்தனம் துரியோதனனே.. நடக்க வேண்டியது.. தாமதியாதே..

துரி : ஆம்.. சகுனிமாமாவுடன் கலந்தாலோசித்து முதலில் சகாதேவனையும் பின்பு அரவானையும் சந்திக்கிறேன். சென்று வருகின்றேன்.

பீஷ் : நல்ல முடிவுடன் வருவாயாக..

......... **காட்சி மாற்றம்** .........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி : 3

மாந்தர்கள் : அரவான், உலுப்பி

களம் : உலுப்பியினது அரண்மனை.

தாயும் மகனும் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள்

அர : அன்னையே.. நாகலோகத்தின் அரசியே.. எனக்குத் தெரிந்த நாளிலிருந்து எனது தந்தை பஞ்சபாண்டவர்களில் ஒருவரான அர்ச்சுனர் என்று கூறுகிறீர்கள். ஆனால் ஒருதடவையாவது இங்கு வந்ததும் இல்லை.. என்னைத் தன் மகனென்று கூறியதும் இல்லையே!.. ஏனம்மா..?

உலு : அதுவா மகனே அரவான்.. அது வந்து..

அர : கூறுங்கள் அன்னையே.. ஒருதடவை என் தந்தையாரை நானாவது சென்று பார்க்க வேண்டும் போலுள்ளது தாயே.. கூறுங்கள்..

உலு : அது பெரிய கதை.. அவரது ஆயிரம் கதைகளில் இதுவும் ஒரு கதை.. ஆற்று மணலை எண்ணிவிடலாம் அர்ச்சுனரது காதல் கதைகளை எண்ணிவிட முடியாது என்பார்கள்.. அதிலொரு கதை தான் எனது கதையும்.. ஏன் உனது கதையும் கூட..

அர : உங்கள் கதையை.. அதுதான் என்கதையும் என்றால் அதைச் சற்றுக் கூறமாட்டீர்களா தாயே..

உலு : நீயும் அறிய வேண்டியது தான்.. அன்றொருநாள் மூத்தவர் தருமராசரும் அன்னையார் திரௌபதியும் கூடியிருந்த நேரத்திலே தவறுதலாக உன்தந்தையார் பள்ளியறையினுட் புகுந்த காரணத்தினால் அதற்குப் பரிகாரமாக ஒரு வருடம் தீர்த்த யாத்திரை செய்ய வேண்டியதாயிற்று.

அர : அப்படியா?

உலு : ஆம் தென்திசையை நோக்கி நகுலேச்சரம் மற்றும் நமது நாகதேசம் அதன் தொடர்ச்சியாக மாந்தைக்கும் பயணப்பட்டார். எமது நாகதேசம் வந்தபொழுது என்னைச் சந்தித்தார். எனது தந்தை உரகபதி மன்னனின் சம்மதத்துடன் உலுப்பி என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படும் நாகதேசத்து ராஜகுமாரியான கருநாகக் கன்னியான எனக்கும் திருமணம் நடந்தது.

அர : (சிரித்தபடி) தீர்த்த யாத்திரை என்று வந்த போதும் காதல் திருமணமா?

உலு : விதி அதுதான் என்றால் யாரால் தடைபோட முடியும் மகனே.. அத்திருமணத்தின் விளைவு. குருகுலத்தின் சந்திரவம்சத்தின் முப்பத்தெட்டாவது தலைமுறையாக நீ பிறந்தாய். நீ நாககன்னிக்குப் பிறந்த படியால் அரவுமகன் என்று குறிக்கும் அரவான் எனப் பெயரிட்டார்.

அர : அப்போ அதன் பிறகுதானா மாந்தை அரசி அல்லிராணியை மணந்து பப்புருவாகனன் பிறந்தானா?.

உலு : ஆம் மகனே.. அல்லிராணி.. அதனைத் தொடர்ந்து தான் கிருஷ்ணபகவானின் தங்கை சுபத்திராதேவி அம்மையாரை மணந்து அபிமன்யு கிடைத்தான். அபிமன்யுவின் பிறப்பின் பின்னரே தான் அவர் உன்னையும் பப்புருவாகனனையும் தவிர்க்கத் தொடங்கினார்.

அர : அப்போ தன் தங்கையின் மகனுக்காக நாராயணன் செய்யும் மாயாவித்தைதான் இதுவோ தெரியாது.

உலு : அப்படியும் இருக்கலாம். பப்புருவாகனன் தந்தையாரைக் காண அரண்மனைவரை சென்றும் காணாது திரும்பி வந்ததாகக் கேள்வி.

அர : ஆம் அன்னையே..

உலு : நீ எதற்கும் கலங்காதே மகனே அரவான்.. நீயும் உன் தந்தையைப் போலவே ஒரு ஆண்மகனுக்குத் தேவையான முப்பத்திரண்டு சாமுத்திரிகா இலட்சணங்களுடனும் வளரும் ஆண்மகன். வீரன். அரசகுமாரன்.

அர : வீரம் மிக்க ஆண்மகனாக இருந்தென்ன.. மூளப்போகின்ற பாண்டவ கௌரவ யுத்தத்தில் பாண்டவர் பக்கத்தில் ஒரு வீரனாகத்தன்னும் பங்குபற்ற முடியவில்லையே என்ற ஆதங்கம் அவ்வளவு தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலு : உண்மைதான் (கவலையுடன்) என்ன செய்வது விதி. காலம் கனிந்தால் நிச்சயம் உன் ஆவல் நிறைவேறும். நீ எதற்கும் கலங்காதே மகனே அரவான்.. உன் அன்னை நான் மற்றும் தாத்தா உன்னுடன் இருக்கும் போது இதை எண்ணிக் கவலை கொள்ளாதே. எது எப்படி நடக்க வேண்டும் என உன் தலையில் எழுதியிருக்கின்றதோ அது நடந்தே தீரும் கவலைப்படாதே அரவான் (அழுதல்)

........ காட்சி மாற்றம் ........

**காட்சி : 4**

**மாந்தர்கள் : அரவான், துரியோதனன்**

**களம் : உலுப்பியின் அரண்மனை.**

அர : வணங்குகிறேன் மன்னவனே.. சந்திரகுலப் பிரபுவே.. வணக்கம் துரியோதன மகாராஜாவே. பாராளும் மன்னனான நீங்கள் என்னைத்தேடி வந்த காரணம் என்னவோ.

துரி : நான் நாடாளும் மன்னனானாலும் உனக்குப் பெரியதந்தை தானே மகனே அரவான். நீ பெரியதந்தை என்றே கூப்பிடு.

அர : என்னைப் பெற்ற தந்தையே நாடும் காடுமாக அலைந்து திரிகின்ற போதிலும் என்னை வந்து ஒ ருதடவையாகிலும் மகனே என்று அழைத்தாரில்லை.. ஆனால்.. நாடாளும் மன்னன் நீங்கள் மகனே என்று..

துரி : (இடைமறித்து) அது.. பாசம் என்றால் என்னவென்றே புரியாத பாண்டவர்களின் பண்பு.. கிருஷ்ணரின் தாளத்திற்கெல்லாம் ஆமாப்போடும் அவரது மருமக்களின் பண்பு.. இது துரியோதனது பண்பு. நூறு சகோதரர்களுடன் பிறந்த துரியோதனது பண்பு.. தான் ஆடா விட்டாலும் தசை ஆடுமடா மகனே அதுதான் வித்தியாசமடா அரவான்.

அர : மன்னா துரியோதனா..!

துரி : இல்லை.. பெரிய தந்தையே என்றே அழை..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர : பெரிய தந்தையே!

துரி : இப்போதுதான் நீ என்மகன்.. எனக்கு எல்லாமே புரிகின்றது.. தந்தையார் விலகி இருக்கின்றாரே என்ற கவலையில்.. ஆதங்கத்தில் இருக்கிறாய்.. ஆசைதீர என்னைப் பெரியப்பா என்று கூப்பிடு..

அர : (மகிழ்ச்சியாக) பெரிய தந்தையே!... பெரிய தந்தை!... எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கின்றது.. கூறுங்கள் பெரிய தந்தையே இந்த அரவானைத் தாங்கள் தேடி வந்ததற்கான காரணம் என்னவோ.. கூறுங்கள்..

துரி : துரியோதன மகாராஜாவை பெரிய தந்தையே என்று சொல்வதில் உனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கின்றது பார்த்தாயா.. அப்போ என்னையும் மகிழ்ச்சிப்படுத்த வேண்டாமா..

அர : நிச்சயமாக.. மகிழ்ச்சிப்படுத்தவே வேண்டும்.. கூறுங்கள் பெரிய தந்தையே.. நான் என்ன செய்ய வேண்டும்.. எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன்.. என்ன வேண்டும் கூறுங்கள் பெரிய தந்தையே..

துரி : உனது சிறிய தந்தை கூறியபடியே தான் இங்கு வந்தேன்..

அர : என்ன சிறிய தந்தை கூறினாரா.. யார்

துரி : அதுதான் சகாதேவன் கூறியதால்தான் வந்தேன்.

அர : (அவசரப்பட்டு) சிறிய தந்தை சகாதேவன் கூறினாரா.. என்ன கூறினார்.. கூறுங்கள் என்ன வேண்டும்.. நாகலோகத்தில் இல்லாத மாணிக்கமா!.. இரத்தினமா!.. வைடூரியமா!.. என்ன வேண்டும் உங்களுக்கில்லாததா.. சிறியதந்தை சகாதேவன் என்ன தான் கூறினார்.. கூறுங்கள் பெரியதந்தையே.. எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன்..

துரி : அப்போ.. நான் கேட்கிறேன் என்றல்ல.. (ஏளனமாக) உன் சிறிய தந்தை கூறியபடியால் தான் தருகிறாய் ஆக்கும்.. அப்படித்தானே..

அர : இல்லை.. இல்லை அப்படி இல்லை.. தவறாக எண்ணாதீர்கள்.. நான் நீங்கள் எதுகேட்டாலும் தரச்சம்மதிக்கிறேன். எனது உயிரை என்றாலும் உங்களுக்காகத் தரச்சம்மதிக்கிறேன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரி : சொன்ன சொல்லு மாறமாட்டாய்தானே மகனே..

அர : இல்லைப் பெரியதந்தையே.. நம்புங்கள்.. இந்த அரவான் சொன்ன சொல்லை மீறியதாகச் சரித்திரம் கிடையாது.

துரி : அதனால் தான் கேட்கிறேன்.. சத்தியம் செய்து தா மகனே..

அர : நம்பவில்லையா.. இதோ சத்தியம் செய்து தருகிறேன். என் தாய்மீது ஆணையாக நீங்கள் எதுகேட்டாலும் தரச் சம்மதிக்கிறேன். எனது உயிரை என்றாலும் உங்களுக்காகத் தரச் சம்மதிக்கிறேன்.. இப்போது திருப்திதானே பெரியதந்தையே..

துரி : ஆம் மகனே.. நான் எதுகேட்க வந்தேனோ நீயே சரியாகப் புரிந்துகொண்டு அதையே தருவதாகக் கூறிவிட்டாயே..

அர : என்ன.. நானே கூறிவிட்டேனா. .ஒன்றுமே புரியவில்லையே..

துரி : சத்தியத்தில் மாற்றமேதும் இல்லைத்தானே மகனே அரவான்.

அர : இல்லை அதில் எந்தவித மாற்றமும் இல்லை பெரியதந்தையே!

துரி : மகனே அரவான்.. ஆம்.. நான் கேட்க வந்ததைத்தான் உனது சத்தியத்தின் இறுதியிலேயே கூறிவிட்டாய்.. விபரமாகக்கேள். மகாபாரதப் போர் தொடங்குவது உறுதியாகி விட்டது.

அர : நானும் அறிந்து கொண்டேன்

துரி : போர் தொடங்குதற்கு சுப நாள் நேரம் பார்ப்பதற்கு, ஜோதிடத்தில் பாண்டித்தியம் பெற்ற உன் சித்தப்பா சகாதேவனை விட சிறந்தவர் யாரும் இல்லை என்றார்கள்.. சென்றேன்.. கேட்டேன்.. விபரமாகக் குறித்தும் தந்தார்.

அர : (ஆவலாக) அப்புறம்

துரி : போரில் எனக்கு வெற்றி கிடைப்பதற்கு, எனது ஜாதகப்படி நாளை மறுநாள் வரும் அமாவாசை தினத்தன்று நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு ஆண் மகனுக்குத் தேவையான முப்பத்து இரண்டு சாமுத்திரிகா இலட்சணங்களுடனும் உள்ள ஒருவனை காளிதேவிக்குக் களப்பலி கொடுக்கும் படியும் உன் சித்தப்பா சகாதேவன் குறித்துத் தந்தார்.

அர : அப்படியா.. அதற்கும் எனது சத்தியத்துக்கும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரி : இதைக் கேட்டு நீ செய்த சத்தியத்தை மறந்து விடாதே. ஆம்.. உனது ஜாதகத்தின்படி எட்டாம் இடத்தில் செவ்வாயும் இராகுவும் நிற்பதால் உன்னையே களப்பலி கொடுப்பதே சிறந்தது என்றார்கள். உன்னிடம் வந்தேன் அரவான்..

அர : (ஆச்சரியத்துடன்) என்ன.. யுத்தகாளிக்கு களப்பலிக்கு உகந்தவன் நானென நாளை மறுநாள் வரும் அமாவாசை தினத்தன்று நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு காளிதேவிக்கு பலிகொடுப்பதற்கு பலியாளாக்க என்னிடம் வந்தீர்களா..?

துரி : ஆம் அரவானே..

அர : காளிதேவிக்கு பலிகொடுப்பதற்கு உங்கள் மகனை என்றால்? அழைப்பீர்களா களப்பலிக்கு.. எப்படிப் பெரிய தந்தையே மனம் வந்தது.. (அழுது) தம்பியின் மகன்தானே.. தந்தையின் பாசத்திற்கு ஏங்குபவன் தானே என நினைத்து வந்து மகனே என்று பாசம் தழுவ அழைப்பது போல் பாசாங்கு செய்தீர்களா..? எரிகின்ற நெருப்பிலே எண்ணைய்யை ஊற்றி வித்தையல்லவா காட்டுகின்றீர்கள்.. (அழுது) அதற்குத்தான் முன்னதாகவே சத்தியமும் வாங்கினீர்களா..

துரி : ஆம்.. உண்மையை அறிந்தபின் நீ மாறிவிடக் கூடாதல்லவா..

அர : (அழுது) கடவுளே.. தந்தையார் கவனிக்கவில்லை.. மனதார மகனென்று ஒருபோதும் அழைக்கவில்லை என மனங்கலங்கி நின்றேன்.. நாடாளும் மாமன்னர் துரியோதனர் தாமாகவே வந்து மகனே என அழைத்த மகிழ்ச்சியில். கடவுளே நீ கண்திறந்து விட்டாய் என மகிழ்ந்தேன்.. கடவுளே அந்த மகிழ்ச்சியை ஒருகணம்கூட அனுபவிக்க விடவில்லையே.. அப்படி நான் என்ன பாவம் செய்து பிறந்தேன்.. கடவுளே. என்னை களப்பலிக்கு அனுப்பத்தான் இந்தக் கணப்பொழுது மகிழ்ச்சியா.. கடவுளே..

துரி : சத்தியம் செய்து கொடுத்திருக்கிறாய்.. ஆம் அரவான்.. நாளை மறுநாள் வரும் அமாவாசை தினத்தன்று நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர : (அழுது) கடவுளே.. நாளை மறுநாள் எனது உயிரைக் கொடுக்க நானே என்வாயால் சத்தியம் செய்து கொடுத்தேனே. இது என்ன சோதனை.. என் மகிழ்ச்சி உனக்குப் பொறுக்க வில்லையா..

துரி : சத்தியம் செய்து விட்டாய் மறந்திடாதே

அர : புரிகின்றது பெரியதந்தையே.. இல்லை துரியோதன மாமன்னரே.. எனது விதியை எண்ணி நானே நொந்து கொண்டேன்.. (ஆவேசமாக) களப்பலி.. அரவான் களப்பலி.. துரியோதன மகாராஜாவின் வெற்றிக்கு நாகஅரசி உலுப்பியின் மைந்தன் களப்பலி.. பார்த்தனின் மைந்தன் களப்பலி.. தன் வாயாலேயே தனது பலிக்குச் சத்தியம் செய்து கொடுத்த புதுமை.. கடவுளே.. கடவுளே..

துரி : மகனே அரவான்.. உன் நிலைமை கவலைக்கிடமாகத் தான் இருக்கின்றது. என்ன செய்வது. சத்தியத்தை மறந்திடாதே..

அர : (தேற்றிக் கொண்டு) துரியோதன மகாராஜாவே.. இந்த அரவான் கொடுத்த சத்தியத்திலிருந்து ஒருபோதும் பின்வாங்குபவன் அல்ல.. நாளை மறுநாள் பலியாகப் போகும் இந்த அரவான் கொடுத்த சத்தியத்திலிருந்து ஒரு போதும் பின்வாங்குபவன் அல்ல..

துரி : அப்போ நாளை மறுநாள் வரும் அமாவாசை தினத்தன்று நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு களப்பலிக்குத் தயாராக இரு.. அழைத்துச் செல்ல நான்வருகிறேன். சம்மதம் தானே..

அர : (அழுது) கொடுத்த சத்தியத்திலிருந்து மாற முடியுமா.. சரி.. பாருங்கள் ஒருநொடிப் பொழுதில் நடந்ததை. ஆம். மனித வாழ்வு என்பது ஒரு நீர்க்குமிழி போன்றது.. நிலையில்லாதது.. தெளிவாகப் புரிந்து கொண்டேன்.. எந்த நேரத்தில் என்ன விதமான சம்பவங்கள் நடக்கும் என்பது எனது வாழ்க்கையின் இந்தக் கணங்களே பறைசாற்ற வில்லையா.. அதனால்..

துரி : (இடைமறித்து ஆச்சரியமாக) அதனால்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர : பதற்றமடையாதீர்கள் பெரியதந்தையே.. இன்றிருக்கும் நாளல்ல நாளை மறுநாள். விதி எதுவோ எதுவும் நடக்கலாம். நீங்கள் குறிப்பிடும் அந்த நாளை மறுநாள் வரும் அமாவாசை தினத்தன்று நள்ளிரவு பன்னிரண்டு மணிவரை இந்த அரவானின் உடலுக்கோ உயிருக்கோ எதுவும் நிகழாமல் இருந்தால்.. எனது தேகத்தில் உயிர இருக்குமானால்.. எனது சத்தியத்தின் படி வருவதற்கு எதுவித தடையும் இல்லை. நிச்சயமாக, உங்கள் களப்பலிக்கு நான் தயார். வாருங்கள்

துரி : ஆம் நிச்சயமாக..

அர : (ஏளனமாக) நம்பிக்கையில்லையா மன்னன் துரியோதனரே.. இதற்கும் சத்தியம் வேண்டுமா.. நீங்கள் கேட்கத் தேவையில்லை.. நாளை மறுநாள் வரும் அமாவாசை தினத்தன்று நள்ளிரவு பன்னிரண்டு மணி வரை இந்த அரவானின் உடலுக்கோ உயிருக்கோ எதுவும் நிகழாமல் இருந்தால் நிச்சயமாக நான் களப்பலிக்கு வருகிறேன்.. சத்தியம் தவறமாட்டேன். இது சத்தியம் திருப்திதானே.. (தனக்குள்) ம்..ம்.. அரவானே கலங்காதே உன் தலையில் எது எழுதியிருக்கிறதோ அது நடந்தே தீரும் கவலைப்படாதே.. ஆனால் தாயாரிடம் இதை எப்படிச் சொல்லப் போகின்றேன்.. விதி.. (அழுதல்)

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 5**

**மாந்தர்கள் : தருமர், கிருஷ்ணன், அரவான்**

**களம் : தருமரது அரண்மனை.**

**மகாபாரதயுத்தம் நிகழ்வதற்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. துரியோதனன் களப்பலிக்கு அரவானைப் பலிகொடுக்க எண்ணியுள்ள திட்டத்தை முறியடித்து அதே அரவானை பாண்டவர்களுக்காக பலியிட கிருஷ்ணர் வஞ்சக முயற்சி செய்தல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பின்னணியில் அந்தணர்கள் அமாவாசைக்கான மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள்)

நாரா : (தனக்குள்) எனது திட்டத்தின் படி அந்தணர்கள் நாளையே அமைவாசையாக இருந்த பொழுதும், தமக்குள் எழுந்த குழப்ப நிலையையும் பொருட்படுத்தாது, எனது சொல்லிற்குக் கட்டுப்பட்டு.. இன்றே அமாவாசையில் செய்ய வேண்டிய மந்திர உச்சாடனங்களையும் தர்ப்பணங்களையும் செய்கிறார்கள். ம்.. பொறுத்திருந்து தான் பார்ப்போமே சூரிய சந்திரர்கள் என்ன செய்கிறார்கள் என்று.

தரு : நாராயணா, கோபாலா, மைத்துனா தங்களை நமஸ்கரிக்கின்றேன்.

நாரா : வாரும் தருமரே. சகல சௌபாக்கியங்களும் கிட்டட்டும். இப்படி இருக்கையில் அமரும்

(மெதுவாக மந்திர ஒலி குறைந்து பின்னணியில் தொடர்ந்து ஒலிக்க வேண்டும்

தரு : அவசரமாக வரும்படி அழைத்தீர்களாமே..

நாரா : ஆமாம் தருமரே.. விடயம் கேள்விப்பட்டீரா..

தரு : என்ன விடயம். கேள்விப்படவில்லையே மைத்துனா!

நாரா : துரியோதனன் பதினெட்டு நாள் யுத்தத்தில் வெற்றி பெறுவதற்காக உனது தம்பி சகாதேவன் நாள் குறித்துக் கொடுத்தாராம். நாளைய தினம் அமாவாசை அன்று நள்ளிரவு களப்பலி கொடுத்தால் வெற்றி நிச்சயம் என்றும் கூறினாராம்.

தரு : ஆமாம்.. அதுவா. எங்கள் எதிரியாக இருந்தாலும் தன்னை நாடி வந்த துரியோதனனுக்கு நாள்குறித்து கொடுத்தது சாதாரண சகாதேவன் என்ற ஜோதிடன். அது தவிர்க்க முடியாதது. ஜோதிட தர்மம். ஆனால், எம்முடன் நாராயணனின் அவதாரமாகிய தாங்கள் இருக்கும் போது நாள் நட்சத்திரங்கள் எங்களை எதுவும் செய்ய முடியாதென்ற அசையாத நம்பிக்கையில் உள்ளான் தம்பி சகாதேவன்.

நாரா : ம்.. அப்படியா சகாதேவன் சொன்னான். என்மீது அவ்வளவு நம்பிக்கையா.. மகிழ்ச்சி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரு : ஆமாம் மைத்துனா..

நாரா : அதுமட்டுமல்ல.. துஷ்டன் துரியோதனன், அர்ச்சுனனின் மகன் அரவானையே களப்பலி கொடுப்பதற்கும் சம்மதம் வாங்கி இருக்கிறானாம்..

தரு : (ஆச்சரியத்துடன்) என்ன? அர்ச்சுனனின் மகன் அரவானையே களப்பலி கொடுப்பதற்குத் துரியோதனன் முடிவெடுத்து விட்டானா..?

நாரா : ஆம்.. சகாதேவன் கூறியபடி நாளையதினம் அமாவாசை அன்று நள்ளிரவு களப்பலி கொடுத்தால். அதுவும் முப்பத்திரண்டு சாமுத்திரிகா இலட்சணங்களுடனும் வளரும் ஆண்மகன். வீரன். அரசகுமாரன்.. திட்டமிட்டபடி அரவானைக் களப்பலி கொடுத்தால் துரியோதனனுக்கு வெற்றி நிச்சயம். அதனை எவராலும் தடுக்க முடியாது.

தரு : அப்படியென்றால்..

நாரா : அதே அமாவாசையில் நாம் களப்பலி கொடுக்க வேண்டும்.

தரு : (ஆச்சரியத்தடன்) அதே அமாவாசையில் நாம் களப்பலி கொடுக்க வேண்டுமா?அது எப்படி.. சரி.. யாரைத்தான் களப்பலி கொடுப்பது..

நாரா : வேறுயாரை.. அதே அரவானைத்தான்..

தரு : (ஆச்சரியத்தடன்) என்ன அரவானையா..(தயங்கி) வேண்டாம்.. வேண்டாம்.. எங்கள் பிள்ளையைக் களப்பலி கொடுத்து நாம் யுத்தத்தில் வெற்றி பெற வேண்டுமா.. வேண்டாம்..

நாரா : (சிறிது கோபத்துடன்) அரவான் வேண்டாமென்றால் என்னைக் களப்பலியாக்கு..

தரு : தங்களைப் பலி கொடுத்துத்தான், நாம் நாடாள வேண்டும் என்றால், அந்த நாடும் எங்களுக்கு தேவையில்லை, இந்த உயிரும் எனக்குத் தேவையில்லை. நீர் இல்லாமல், நாங்கள் ஏது? தர்மம் ஏது? இந்த உலகம் தான் ஏது? வேண்டாம் நாராயணா இந்த விபரீத விளையாட்டு.. விளையாட்டுக்காகவேனும் அப்படிக் கூறவேண்டாம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரா : (இடைமறித்து.. கோபமாக) அப்போ என்ன செய்யச் சொல்கின்றாய். களப்பலி கொடுப்பதற்கு வேண்டிய அத்தனை இலட்சணங்களையும் கொண்டுள்ள பொருத்தமான வீரர்கள், என்னையும் சேர்த்து நான்குபேர் மட்டுமே உள்ளனர். ஒருவன் கௌரவர்களின் பக்கமுள்ள சால்யன் மற்றயவர்கள் உனது தம்பி அருச்சுனன் மற்றையது அரவான்.. இந்த நான்கு பேரிலிருந்து அரவான் வேண்டாமென்றால் அடுத்த தெரிவாக உள்ளவன் நான்தானே.. அதனால்தான் அப்படிக் கூறினேன். அதிலென்ன தவறு.

தரு : (தயங்கி) அது யாரென்றாலும்.. களப்பலி கொடுக்கத்தான் வேண்டுமா மாதவா!

நாரா : தருமராசனே உமது தரும உபதேசத்தை நிறுத்தும். நடக்கப் போவது பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்குமான யுத்தம்.. ஆட்சியுரிமைக்கான யுத்தம்.. அதற்கு களப்பலி கொடுக்காமலா..? வெற்றித் தேவதையை மகிழ்விக்காமலா..?

தரு : (தயங்கி) ஆட்சியுரிமைக்கு..

நாரா : (உறுக்கி) ஆம் ஆட்சியுரிமைக்குத்தான்.. வெற்றி தேவை என்றால் இப்படிச் செய்ய வேண்டும் என்று கூறியவன் நானல்ல. உனது தம்பி சகாதேவன்.. அனைத்தையும் துரியோதனனுக்கு சோதிடனாக கூறியவன் சகாதேவன்.. அதே சோதிடத்தை நீயும் நம்பு.. புதிதாக ஒன்றுமில்லை.. அவ்வளவே..

தரு : அதற்காக சின்னஞ் சிறிய பாலகன் அரவானைப் பலியாக்க வேண்டுமா.. அதனிலும் பார்க்க தம்பி தானே துரியோதனனே நாட்டை ஆளட்டும்.. நாம் கானகம் செல்வோம்..

நாரா : நாட்டை ஆளுவது ஒரு புறமிருக்கட்டும்.. அப்போ திரௌபதி என்றும் அவிழ்ந்த கூந்தலை முடியாமல் இருப்பதைத்தான் தாங்கள் விரும்புகிறீர்களா.. வீமனின் சபதம் என்னாவது..? அவற்றையும் சிறிது சிந்தித்துப் பாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரு : உண்மைதான்.. அனைத்தும் புரிகின்றது.. அதற்காக எமது புதல்வனையே..

நாரா : இன்று எமது புதல்வனையே என்று நீர் அரவானைத் தவிர்க்கலாம். ஆனால் நாளை அமாவாசை நடுச்சாமத்தில் அதே அரவான் துரியோதனனின் களப்பலியாவதை உம்மால் தடுக்க முடியாது.. அதை மறக்க வேண்டாம். அதுமட்டுமல்ல நாளை யுத்தமென்று வந்தால் எத்தனை பேர்.. எவர் மகனோ.. யார் யார் யுத்தகளத்தில் மடிவார்களோ..?

தரு : உண்மைதான். அப்படியென்றால்.. (தயங்கி) எப்படி இரு இடத்திலும் ஒரே அரவான்..

நாரா : நீர், களப்பலிக்கு அரவான்.. ஆம் என்று சம்மதம் கூறும். அதை நடைமுறைப்படுத்துவது எனது பொறுப்பு.

தரு : சரி.. தங்களுக்கு மறுப்புக் கூறமுடியுமா..

நாரா : இன்னும் சிறிது நேரத்தில் அரவான் இங்கு வருவான். பொறுத்திருந்து நடப்பனவற்றைப்பாரும்.

(பின்னணியில் கேட்ட மந்திர ஒலி உரத்துக் கேட்டல்.. அங்கே சூரிய சந்திரர்கள் வந்ததால் சிறிது குழப்பமான பின்னணியும்)

ஆ.. அதோ அரவானே வருகிறான்.

அர : (வந்துகொண்டு) வணங்குகின்றேன் நாராயணப் பிரபுவே.! வணக்கம் பெரியதந்தையே!

நாரா : வா.. அரவான்.. வா..

தரு : வா மகனே.. வணக்கம் வா மகனே.. வா

அர : நாராயணப் பிரபுவே.. என்னை வரவழைத்தமைக்கான காரணம்.. (தழுதழுத்து) நாளை பெரியதந்தையாம் துரியோதன மகாராஜாவின் களபலியாகப் போகின்ற என்னை இந்த நேரத்தில் திடீரென வரவழைத்த காரணம் எதுவோ.?

நாரா : அது வந்து..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர : தயங்காதீர்கள். இங்கே தங்களுடன் பெரியப்பாவும் நிற்கிறார். வெளியே தர்ப்பணம் செய்து கொண்டிருக்கும் பிராமணர்களுடன் சூரியபகவானும் சந்திரபகவானும் நேருக்கு நேர் நின்று ஏதேதோ தர்க்கம் வேறு புரிந்து கொண்டிருக்கிறார்கள்..

தரு : (ஆச்சரியத்துடன்) என்ன..? தர்ப்பணம் செய்து கொண்டிருக்கும் பிராமணர்களுடன் சூரியபகவானும் சந்திரபகவானும் நேருக்கு நேர் தர்க்கம் புரிகிறார்களா..

அர : ஆமாம் பெரியப்பா..

நாரா : (ஏளனச் சிரிப்புச் சிரித்தல்) ம்..ம்..ம்..

தரு : அப்பொழுதே நினைத்தேன்.. இப்படி ஏதாவது விபரீதம் நிகழுமென்று.. அப்படியே நடந்து விட்டது. நான் வரும்போதே நாளை தானே அமாவாசை இன்று ஏன் தர்ப்பணம் செய்கிறீர்கள் எனக் கேட்டேன்.. அவர்கள் நாராயண பகவான் சொன்னார் செய்கிறோம் என்றார்கள். வாசுதேவா இது என்ன விளையாட்டு.. சூரிய சந்திரர்கள் நேருக்குநேர் நின்று அந்தணர்களுடன் தர்க்கம் புரிகிறார்கள் என்றால்.. இது என்ன நாடகம்..

நாரா : அதைத்தான் நானும் எதிர்பார்த்தேன். (சிரித்து) நான் எதிர்பார்த்ததுதான்.

தரு,அர : (இருவரும் ஒருமித்து) நீங்களும் அதைத்தான் எதிர் பார்த்தீர்களா..?

நாரா : ஆம்.. அதுசரி.. தருமரே.. எப்போ அமாவாசை என்றீர்..

தரு : அது நாளை

நாரா : (ஏளனமாக) அமாவாசை என்பது என்னவோ..? சிறிது கூறும் பார்ப்போம்.

தரு : தங்கள் கேள்வியிலுள்ள விகடம் புரியவில்லை சரி.. அது.. அதுவந்து.. சூரியபகவானும் சந்திரபகவானும் ஒரேகோட்டில் எதிரெதிரே சந்திப்பது..

நாரா : அங்கே என்ன நடைபெறுகின்றது அரவான்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர : சூரியபகவானும் சந்திரபகவானும் நேருக்கு நேர் நின்று மந்திரமோதுகின்ற அந்தணர்களுடன் ஏதோ தர்க்கம் புரிந்து கொண்டிருக்கிறார்கள்..

நாரா : சரி.. அங்கே.. சூரியபகவானும் சந்திரபகவானும் நேருக்கு நேர்நின்று தர்க்கம் என்றால் இன்றைக்கு.. இல்லை இல்லை.. இப்போது என்ன..

அர : அமாவாசை.. ஆம் அமாவாசை பிரபுவே..

நாரா : புரிகின்றதா தருமரே.. அப்போ.. அமாவாசை நாளைக்கல்ல.. இன்றைக்கு.. சரிதானே!

தரு : மைத்துனா.. இதுவும் தங்கள் நாடகமா..? கிரகங்கள் நாராயணனது சொல்லுக்குக் கட்டுப்படுபவை என்பது தெரிந்த விடயம். அதற்காக இப்படியும் ஒரு நாடகமா..?

நாரா : புரிகின்றது தானே.. அதுசரி.. அரவானே! வரும்போது நீ என்ன சொன்னாய்.?

அர : நாளை துரியோதன மகாராஜாப் பெரியப்பாவிற்காக களபலியாகப் போகின்ற என்னை திடீரென வரவழைத்த காரணம் எதுவோ என்றேன்..

நாரா : நல்லது.. துரியோதனனுக்கு எப்படிச் சத்தியம் செய்து கொடுத்தாய்.

அர : நாளை மறுநாள் வரும் அமாவாசை தினத்தன்று நள்ளிரவு பன்னிரண்டு மணிவரை இந்த அரவானின் உடலுக்கோ உயிருக்கோ எதுவும் நிகழாமல் இருந்தால்.. எனது தேகத்தில் உயிர் இருக்குமானால்.. எனது சத்தியத்தின் படி வருவதற்கு எதுவித தடையும் இல்லை. நிச்சயமாக, உங்கள் களப்பலிக்கு நான் வருகிறேன் என்றேன்.

நாரா : பாருங்கள்.. அரவான் களப்பலி ஆவதில் மாற்றமில்லை. ஆனால் ஒரு சிறு மாற்றம்.

தரு : புரியவில்லை மைத்துனா..

நாரா : சூரியசந்திரர்கள் நேரேவந்து விட்டார்கள். அமாவாசை இன்றே துரியோதனன் நாளைவரை காத்திருக்கட்டும். அரவான்..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர : கூறுங்கள்..

நாரா : நீ விரும்பியபடி களப்பலியாவது நிஜம்.. அதில் எதுவித மாற்றமுமில்லை.. ஆனால் நாளையல்ல இன்று.. களப் பலியாகப் போவது துரியோதனுக்காகவல்ல பாண்டவர்களுக்காக.. ஆனால் துரியோதனனுக்குச் செய்த சத்தியத்தையும் நீ மீறவில்லை புரிகின்றதா.

அர : புரிகின்றது.. (கவலையுடன்) அற்ப ஆயுள் என்பது எனது சத்தியத்தின் மூலம் நான் நானாகவே தேடிக்கொண்டது. அதிலும் தங்களது மாயவேலையால் ஒரு நாளைக் குறைத்துக் கொண்டீர்களே.. பரவாயில்லை ஆனால் துரோகி துரியோதனனின் வெற்றிக்காகப் பலியாகப் போகின்றேனே என்று கவலையுடன் இருந்தேன். இப்போ பாண்டவர்களின் வெற்றிக்காக பலியாகும் முதல்வீரனாக இருப்பதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

தரு : (தழுதழுத்து) அரவான்.. என் ஆசைமகனே.. எவ்வளவு பெரிய தியாகமடா..

அர : இல்லைப் பெரியதந்தையே. இது சத்தியம் செய்து நான் நானாகத் தேடிக்கொண்டது.

நாரா : இல்லை கவலைப்படாதே அது கருவிலேயே எழுதப்பட்டது..

அர : அமாவாசையன்று என்னை பலி கொடுக்க துரியோதனனிடம் சம்மதித்திருந்தேன். அவரோ, நாளை தான் அமாவாசை என நினைத்து இதுவரை வராமல் நாளைவரை காத்திருக்கிறார். ஆனால், தங்கள் சக்தியால், இன்றே அமாவாசை வந்து விட்டது. பெரிய தந்தையாருக்கு உறுதியளித்தபடி செல்வதற்கு அவர் சொன்ன நேரத்துக்கு வராததால், அதாவது அமாவாசை வந்த பின்பும் அவர்களைக் காணவில்லை எனவே அவருக்காக குறிக்கப்பட்ட அதே சமயத்தில், பாண்டவர்களுக்காக அதுதான்.. எம்மவர்களுக்காக பலியாகிறேன். களப்பலியாகின்றேன்.. முழுமனதுடன் மகிழ்ச்சியாக முதற் பலியாகின்றேன்..

நாரா : பார்த்தீரா தருமரே.. கேட்டீர்தானே இனியென்ன சிந்தனையோ..

அர : அதற்கிடையில்.. வாழ்வின் இறுதிக்கட்டத்திலுள்ள நான், தங்களை மூன்று வரங்கள் கேட்க விரும்புகின்றேன்.. சம்மதிப்பீர்களா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரா : சரி. என்ன வரங்கள் கூறு அரவானே..

அர : களப்பலி அடைந்தாலும் மகாபாரத யுத்தத்தை எனது கண்களாலேயே காணவேண்டும்.

நாரா : அதில் தடையேதும் இல்லை.. வெட்டுண்ட தலையை நிறுத்தி வைக்கின்றோம். அதற்கு உயிர் இருக்கும்.. அதிலுள்ள உன் கண்கள் மூலம் யுத்தத்தைப் பார்த்து ரசி

அர : பதினெட்டு நாள் யுத்தத்தில் ஒரு நாளாவது நானும் பங்கு கொள்ள வேண்டும்.

நாரா : ஒரு நாள்தானே.. அதற்கென்ன.. ஆ.. எட்டாவது நாள் உனக்கே..

தரு : அது வந்து எப்படி..

நாரா : புரிகின்றது.. அரவான் கவனமாகக் கேள்.. வெட்டுண்ட தலையுடன் உனது தாயின் தகப்பனான ஆதிசேஷனை வணங்கு.. உனக்கு அந்த வல்லமை கிடைக்கும்..

தரு : இரண்டும் சரி.. அது சரி.. மூன்றாவது வரம் என்ன மகனே..

அர : திருமணமாகாத ஒருவர் மரணிக்கும் போது அவர் புதைக்கப்படுவார். எனக்கு அதில் விருப்பமில்லை. எனது ஈமச்சடங்குகளை உரிமை கொண்டாட, நான் களப்பலியாக முன்பாக தாலிகட்டி ஒரு பெண்ணைத் திருமணஞ் செய்ய வேண்டும்.

நாரா : என்ன..? இன்றிரவே மரணத்தைத் தழுவ இருக்கும் ஒருவருக்கு மாலையிட எந்தப் பெண்ணாவது சம்மதிப்பாளா யாராவது பெண் தருவார்களா..

தரு : ஆனால் கேட்பதில் நியாயமிருக்கின்றது மைத்துனரே..

நாரா : நியாயமானது தான்.. ஆனால் அன்று கட்டி அன்று அறுப்பதற்கு ஒருத்தி முன்வர வேண்டுமே.. அதுதான் யோசிக்கின்றேன்.. இதற்கு யார் சம்மதிப்பார்?

தரு : அதுதானே..

நாரா : (யோசித்து) ம்.. சரி.. அவள் வருவாள்.. நீ சென்று திருமணத்திற்காகத் தயார்படுத்து அரவான். பெண் தயாராக வருவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர : மாறமாட்டீர்கள் தானே.. ஏமாற்றமாட்டீர்கள் தானே

நாரா : அதில் எந்த மாற்றமுமில்லை. இந்த நாராயணன் ஏமாற்றுக் காரனல்ல.. போ.. திருமணத்திற்குத் தயாராக இரு..

அர : (போய்க் கொண்டு) சரி.. நான் செல்கின்றேன்.. தாமதிக்கும் ஒவ்வொருகணமும் நிலைமைகள் மாறலாம். பெண்ணை அழைத்து வாருங்கள். நான் தயாராகிறேன்...

தரு : தங்களது வார்த்தையை நம்பி அரவான் சென்று விட்டான்.. இப்போ பெண்..

நாரா : (இடைமறித்து) கவலை வேண்டாம்.. ஆணான நானே மோகினி வடிவம் எடுத்துச் செல்கிறேன். இந்த மாயக் கண்ணனே மணப்பெண்ணாகி அரவானை மணக்கிறேன்.

தரு : சரி மைத்துனா.. தங்களின் திருவிளையாடல். ம்.. அமாவாசைக்கு சூரியசந்திரர்.. தற்பொழுது திருமணப் பெண்ணுக்கு மாப்பிள்ளை... ஏதோ நடக்கட்டும்.

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 5**

**மாந்தர்கள் : பீஷ்மர், துரியோதனன்**

**களம் : துரியோதனனது அரண்மனை.**

**துரியோதனன் களப்பலிக்கு அரவானைப் பலி கொடுக்க ஒழுங்குகள் செய்திருக்க கிருஷ்ணர் வஞ்சக முயற்சியால் பாண்டவரே அரவானைக் களப்பலி கொடுத்தமையை அறிந்த துரியோதனன் சோகத்துடன் பீஷ்மரைச் சந்தித்தல்.**

துரி : (பதகளித்து) பார்த்தீர்களா பீஷ்மரே மாயக்கிருஷ்ணன் செய்த மாயவேலைகளை..

பீஷ் : ஆமாம் கேள்விப்பட்டேன்.. அந்தணர்களைக் கொண்டு அமாவாசை தினத்தில் செய்யப்படும் தர்ப்பணத்தை முதல் நாளாகிய சதுர்த்தசித் திதியில் செய்யத் தூண்டி அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழப்பமடைந்த சூரிய சந்திரர்களை ஒருங்கே வரப்பண்ணி, அவர்கள் இருவரும் ஒருங்கே வந்ததனால் அன்றைய தினத்தை அமாவாசையாக்கி..

துரி : (இடைமறித்து) எமது களப்பலிக்குத் தயாராக இருந்த அரவானை ஆணாக இருந்த கிருஸ்ணரே பெண்ணாக மாறித் திருமணஞ் செய்து, அரவானை திருமணமானவனாக்கி யுத்தக்காளிக்கு களப்பலி கொடுத்து எமது திட்டங்களை தவிடு பொடியாக்கி விட்டான். களப்பலியிலும் முந்தி விட்டார்கள்.

பீஷ் : மோகினி வடிவில் அரவானை மணந்து.. தாலி அறுத்து.. ஒப்பாரி வேறு வைத்தானாம்.. கிருஷ்ணன்

துரி : அது மட்டுமில்லை.. களப்பலியாகிய அரவானின் தலைக்கு போர் முடியும் வரை உயிர் பிரியாத வரமும் கொடுத்து கூத்தாண்டவராக்கி பதினெட்டாம் நாள் வரை போரையும் பார்க்கும் படி வரமும் கொடுத்துள்ளானாம். இப்படி நடக்கும் என்று எண்ணிப் பார்க்கவில்லை..

பீஷ் : உண்மைதான்.. அரவான் சத்தியவான், தான் செய்த சத்தியத்தில் தவறவில்லை.. தவறு அவன்மீதல்ல..

துரி : ஆம் அவன் சத்தியத்தை மீறவில்லைத்தான் நான்தான் தவறு செய்துவிட்டேன். எனது தவறு.. அரவான் களப்பலிக்கு சம்மதித்தபோதே அழைத்து வந்து எம்முடன் வைத்திருந்திருக்க வேண்டும். அருமையான சந்தர்ப்பத்தைத் தவறவிட்டு விட்டேன்.

பீஷ் : நடந்தது நடந்து முடிந்து விட்டது. அதனைப் பற்றியே சிந்தித்து மனதைத் தளரவிடாதே.. ஆக வேண்டியதைப் பார்ப்போம்.. (பெருமையுடன்) கிருஷ்ணன் தனது மாய வேலைகளைக் காட்டி களப்பலியில் முந்தி விடலாம்.. (உயர்த்தி) ஆனால் களத்தில் வெல்லப் போவது நாமே.. அதை மறந்து விடாதே. சென்றுவா..

........ **நிறைவு** ........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. வந்தாளே மகராசி



நாடக மாந்தர்கள் :

| | | |
|---|---|---|
| கனகரத்தினம் | – | பொன்னம்பல உபாத்தியாயரின்அயலவர் |
| தம்பிராசா | – | பொன்னம்பல உபாத்தியாயரின் அயலவர் |
| பரமேஸ்வரி | – | மறைந்த பொன்னம்பல உபாத்தியாயரின் மனைவி |
| காந்திமதி | – | தம்பிராசாவின் மனைவி |
| சாந்தன் | – | சமூகசேவகன், பொன்னம்பல உபாத்தியாயரின் அயலவர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. வந்தாளே மகராசி

காட்சி : 1

பாத்திரங்கள் : கனகரத்தினம், தம்பிராசா, பரமேஸ்வரி, காந்திமதி

களம் : பொன்னம்பலம் உபாத்தியாயர் வீடு

**ஓய்வு பெற்ற ஆசிரியர் பொன்னம்பலம் உபாத்தியாயர் இறந்து விட்டார். கிராம விதானையால் ஊரடங்கு மற்றும் கொரோனா காரணமாக இறுதிச் சடங்குகளுக்கு கட்டுப்பாடு விதிக்கப்படுகின்றது.**

கனக : இஞ்சைபார் தம்பிராசா.. இதுமுந்தின ஊரடங்குச் சட்டங்கள் போலை இல்லை.. முந்தின சட்டங்கள் எண்டால் றோட்டுக்கு வராதை.. வீட்டுக்கை என்னண்டாலும் செய் எண்ட மாதிரி. இது ஊரடங்கு போட்டதே றோட்டிலை வெளிக்கிட வேண்டாம் எண்டு மட்டுமில்லை மக்களைத் தனிமைப்படுத்திறதுக்காம் கண்டியோ.. வீட்டுக்கைகூட எட்டவா இருக்கட்டாம்..

தம்பி : அப்ப விதானையார் என்னவாம்... சில கிராமப் புறங்களிலை சிங்கள ஆக்கள் செய்யிற மாதிரி பின் வளவுக்கையே தாழ்க்கட்டாமோ..

கனக : இது இயற்கை மரணமெண்டதாலை, வீட்டுப் பின் வளவுக்கையோ அல்லது முத்தத்திலை தாழ்க்கிறியளோ, சுடலையிலை எரிக்கிறியளோ பிரச்சனையில்லை.. முக்கியமாய் ஆக்கள் கூடக்கூடாதாம்.

தம்பி : இதென்னண்ணை.. ஆக்கள் கூடக்கூடாதெண்டால்.. பொன்னம்பல வாத்தியார் எண்டால் சும்மாயே.. அந்தாள் இந்த ஊருக்குச் செய்யாததே.. பள்ளிக்கூடமென்ன.. வாசிகசாலை என்ன.. நெசவுசாலை என்ன.. மாதர்சங்கம் என்ன.. எல்லாம் அந்தாளாலை வந்ததுதானே..

கனக : அதை ஆர் மறுத்தது தம்பிராசா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி : எத்தினை அரசியல் வாதியள் காலுக்கை கையுக்கை மிதிபட்ட மாதிரி நிறைஞ்சு இருந்தாலும்.. வாத்தியார் செய்த மாதிரி ஒருத்தன் செய்திருப்பனே சொல்லுங்கோ பாப்பம்.. அப்பிடியான மனிசன் செத்தது எண்டறிஞ்சால் சனம் வராமலே விடும்.

கனக : அதாலைதானே நான் விசயம் வெளியிலை பரவமுந்தி என்ன செய்யிறது எண்டு கேட்டுப்பாப்பம் எண்டுதானே விதானையாரிட்டைப் போட்டு வந்தனான். அவன் தானே இப்பிடிச் சொல்லுறான்..

தம்பி : அண்ணை.. இருபத்தைஞ்சு, முப்பது வருசமாய் நாங்கள் காணாத ஊரடங்கே.. இவர் நேற்று வந்தவர் எங்களுக்குப் படிப்பிக்கின்றார். இஞ்சை பாருங்கோ.. காதும் காதும் வைச்சது மாதிரி..

கனக : சொல்லு தம்பிராரசா..

தம்பி : பொன்னம்பலம் வாத்தியார் ஊருக்கு இப்படி நல்லதுகளை நறுக்கெண்டு செய்யிறது.. மற்றது விதானை அப்பிடி இப்பிடி ஏதேன் செய்தால்.. அதுக்கும் இடைஞ்சலாய் இருந்தவர் எல்லே.. அதாலை விதானையாருக்கும் வாத்தியாரோடை அவளவு சரியில்லைக் கண்டியளோ.. அது தான் அவன் கடைசியிலை செத்தவீட்டிலை பழிவாங்குறான் போலை..

கனக : முதலிலை நானும் அப்பிடித்தான் நினைச்சன். ஆனால் விதானை எழுத்திலை எல்லே தாறான். சட்டமெண்டால் சட்டம்.. இஞ்சை பார் கடிதத்தை.. (கொடுத்தல்) நாலு கண்டிசன் எல்லே போடுறான்..

தம்பி : தாங்கோ பாப்பம். (வாசித்தல்) ம்.. அறிவித்தல்.. மரணவீடு.. நெருங்கிய உறவினர் தவிர ஏனையோர் வருவதை தவிர்க்கவும். ஆகக்கூடியது பத்து பேர் வரை மட்டுமே பங்குபற்றலாம்.

கனக : பாத்தியே.. பத்து பேருக்குக் கூடினால்.. பிறகு பொலிசு வந்து கொண்டு போனால் தன்னட்டை வரவேண்டாமாம்..

தம்பி : இஞ்சை பார் மிச்சத்தை.. தொட்டு உரையாடுதல், கட்டி அழுதலை முற்றாகத் தவிர்க்கவும், ம்.. செத்தவீட்டிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழாமல்.. ஒப்பாரியுமில்லை போ.. வெளியூரிலிருந்து வருதலைத் தவிர்க்கவும்.. ம்.. கடைசியாய்.. மூன்று அடி இடைவெளி விட்டு ஒவ்வொருவரும் உட்காரவும்

கனக : இப்ப புரியுதே..

தம்பி : ம்.. ம்.. சட்டமெண்டால் சட்டம் தானே.. எழுதிக் கையெழுத்தும் போட்டுக் குடுத்திருக்கிது.. பிறகென்ன மீறினால் பொலிசுதான்..

கனக : பொலிசில்லை.. பதினாலு நாள் எல்லாரும் தனிமைப்படுத்தல்

காந்தி : ஏனுங்கோ.. வாத்தியார் வயசு வந்துதானே செத்தவர்.. வருத்தம் வந்தே செத்தவர். இல்லையே.. அது இயற்கை மரணம் தானே.. கொரோணா வந்தில்லைத் தானே பிறகென்ன.. அது தெரியாமலே விதானையார் உவ்வளவு சட்டங்கள் போடுறார்.

தம்பி : பொன்னம்பலம் மாஸ்டரின்ரை இறப்பு இயற்கை மரணம் தான். அதை இல்லை எண்ணேலை. ஆனால் இப்ப உலகத்திலை நடக்கிற உவத்திரவக் காய்ச்சலாலை எல்லோ சட்டங்களும்.. ஊரடங்குகளும். காந்திமதி இது செத்தவைக்கு இல்லையப்பா. உயிரோடை இருக்கிறவைக்கு.. உயிரோடை இருக்கிறவையைப் பாதுகாக்க.. அதை.. நினைவிலை வைச்சிரு..

கனக : ஓம் தம்பி.. கொள்ளை நோய்.. தொத்துமெண்டால்.. நாங்களும் பாதுகாப்பாய்த் தானே இருக்க வேணும். எங்கடை பாதுகாப்பு தானே முக்கியமாது,

தம்பி : உண்மைதான்..

கனக : ஒருவிதத்திலை பாத்தால்.. செத்தவீடெண்டால் ஆக்கள் வருங்கள் போங்கள் தான். ஆனால் வந்து என்ன.. போன உயிர் வரப்போகுதே.. இருக்கிறவை தன்னும் வருத்தம்.. துன்பம்.. தொத்தாமல் இருக்க நாங்கள்தான் கவனமாய் இருக்க வேண்டும்.

தம்பி : ஓ.. செத்தசீவனுக்குச் செய்ய வேண்டியதை அதுதான்.. ஏதோ சமய சாத்திரங்களைக் கிரியையளைச் செய்து அந்தாளை அடக்கம் செய்தால் சரி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனக : எக்கணம் அவ பரமேசக்கா தான்.. அவர் செத்த கவலை வேறை.. இந்தக் கவலை வேறை..

தம்பி : ஏதோ.. என்ரை மனிசி காந்திமதியோடை தன்னும் அழுது குழறி தன்ரை கவலையைப் போக்கட்டும். ஏறத்தக்கதாய்ச் சொல்லுங்கோ

கனக : ஆ.. இஞ்சை அவவே வாறா.. நாங்கள் கதைச்சது கேட்டிட்டுது போலை.. காந்திமதியும் கூட வாறா போலை..

பரமே : என்ன கனகரத்தினம் அண்ணை .. விதானையார் என்னவாம்.

தம்பி : ம்.. அது தான்.. எப்பிடிச் செய்யச் சொல்லி விபரமாய் எழுதியே குடுத்திருக்கிறார்.. பாருங்கோ..

பரமே : என்ரை ராசா.. இதென்ன சோதினை.. (அழத் தொடங்குதல்).. காந்திமதி இஞ்சை பார்.. இந்தா இந்தத் துண்டைப்பார்..

காந்தி : என்னவாம்.. இஞ்சை தாங்கோ பாப்பம்.. ம்..ம்.. (வாசித்தல்) இதென்ன கண்டறியாத சட்டம்.. எங்கடை சீவியத்திலை கேள்விப்படாதது..

பரமே : பாத்தியே காந்திமதி.. போட்டிருக்கிற சட்டங்களை.. ஐயோ.. என்ரை ராசா.. மதுரைக்கு வந்த சோதினை என்னப்பா.. அழாதை.. ஆக்களை வரவேண்டாம் எண்டால்.. என்ரை துரை.. எப்பிடி என்ரை மனசை அடக்குவன்.. நாப்பது வருச வாழ்க்கை துரை..

(ஒப்பாரி)

*கொரணா வருகுதெண்டு.. கொழுத்தாடு தான் புடிச்சு..*

*இரணை அழாதை எண்டால்.. இந்த உடன் கட்டை கேக்குதாமோ..*

*இரணை அழாதை எண்டால்.. இந்த உடன் கட்டை கேக்குமோ சொல்..*

காந்தி : *கட்டி அழுதுவிட்டால்.. கொரோணா தொத்திவிடும் எண்டுமெல்லோ..*

*எட்டிநிண்டு அழச்சொல்லி.. விதானை கட்டளையே போட்டிருக்கான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டு அழுதமெண்டால்.. தொத்தி விடுமெண்டு சொல்லி முட்டாமல் முடிக்கட்டாம்.. அவன் உத்தரவு போட்டிருக்கான்..

பரமே : பட்ட மரமானேன் நான்.. தொட்டவன் நீ போனதாலை.. என்ரை துரை.. விட்டகுறை என்னஎண்டு நானும்.. விக்கி அழ விடுகுதில்லை.. என்னை..

பெட்டியிலை பொக்கிசமாய் பேணி வைச்ச என்ரை செல்லம்.. இப்ப முட்டி முறிக்க முந்தி..என்னைத் தட்டம் தனியனாக்கி.. என்ரை துரை

காந்தி : கங்கு வட்டில் ஒட்டு விட்டால்.. என்ரைஅக்கா.. காவோலை கீழை விழும்..

தெங்குவட்டில் ஒட்டுவிட்டால்..என்ரைஅக்கா.. தென்னோலை கழண்டு விழும்.

பழக்காம்பு காய்ஞ்சு வத்த.. என்ரை அக்கா பழுத்தபழம் உதிர்ந்து விழும்

காலமது காலமணை அக்காள் அவர் பழுத்த பழம்போலை.. கண்மூடி முழிக்க முன்னம் கனாப்போலை போய்ச் சேர்ந்தார்

பரமே : (வசனம்) அவர் பழுத்த பழம் தான் ஆனால் ஏலாதெண்டு ஒருநாளும் கிடந்தவரில்லையடி..

எடி காந்தி.. இண்டைக்கு அட்டமி தொடங்குதெண்டு.. என்ரை சீமான் நேற்று வெட்டின உப்பட்டியை.. குத்துப்போர் ஆக்கியெல்லோ துரை குத்தாட்டம் வந்தாரே..

குத்தாட்டம் வந்த செல்லம்.. பொத்தெண்டு பொறியுமெண்டு இந்த பேதைமனம் நினைக்கலையே..

காந்தி : படுக்கேலை கிடவாமல்.. பாசாணம் பருக்காமல்.. பாக்கியவான் போனாரணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மிடுக்காய் இருந்ததுரை மிடறுதண்ணி போகமுன்னம்..*
*மின்னலென மறைஞ்சதென்ன..*

பரமே : *தட்டிலே மை இருக்க.. இஞ்சை தாய்கொடுத்த சீர்இருக்க நீ குடுத்த சீரிழந்தேன் என்ரைதுரை நானும் தாலியையே தானிழந்தேன்..*

*முத்துப் பதித்தமுகம் என்ரராசா முழுநிலவாய் நின்ற முகம் என்ரை சொத்தாய் இருந்த துரை போன பின்பு வேலையென்ன..*

(வசனம்) என்ரை துரை போனாப்பிறகு எனக்கு இஞ்சை என்ன கிடக்கு.. ஐயோ என்னைத் தவிக்க விட்டிட்டுப் போனியளே..

*நாக்குப் படைச்சவையள் இனி நாகரியம் பேசுவினம்*

*மூக்குப் படைச்சவையள் இனி முழுவியளம் பேசுவினம்*

*மூளி அலங்காரி இவள் மூதேவி என்பினமே*

*தாலி அறுந்த இவள் சபைக்கெடாதை என்பினமே..*

தம்பி : சரி இஞ்சை ஐயரும் வந்திட்டார்.. இஞ்சை பாருங்கோ பரமேசக்கா பழுத்த பழம் எண்டைக்கோ விழத்தானே வேணும்.. ஏதோ மரணம் வரும் வரைக்கும் கிடந்து அழுந்தினார் எண்டில்லாமல் அம்பலத்தாடியான்ரை செயலாலை படுத்த உடனை போட்டார்.. இதைவிட வேறை என்ன வேணும்.. இனி அழுது குழறி என்ன செய்யிறது. ஊரடங்கு வேறை.. மினைக்கெடுத்தாதையுங்கோ.. பிறகு சுடலை அலுவலெல்லாம் பிந்திப்போம்.

கனக : ஓம் பிள்ளை.. அழுகையைவிடு.. ஊரடங்கு எண்டதை மறந்திடாதை..

பரமே : *என்ரை ராசா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*குந்தி நாங்கள் கூடிஅழ என்ரை துரை.. சொந்த பந்தம் ஒருத்தரில்லை*

*வந்த மகராசியவள் சொந்தங்களின் வாயை அடைச்சதென்ன...*

காந்தி : *பந்தமது பிடிக்கவெண்டு என்ரை ஐயா சொந்தமெண்டு ஒருத்தரில்லை*

*வந்த மகராசி.. அவள் சீனத்துச் சிங்காரி..*

*சொந்த பந்தம் தனை விலக்கி என்ன.. சுகபோகம் கண்டாளோ..*

கனக : அது சரி.. உண்மைதான். எண்டாலும் சொந்தம் வந்து அழுதாப் போலையோ அல்லாட்டில் பந்தம் பிடிச்சாப் போலையோ போனசீவன் வரப்போகுதே.. போனசீவனுக்கு போறவழி சீராய் இருக்க வேணுமெண்டு எங்கடை கிரியை யளைச் சீராய்ச் செய்யுறதுதான் முக்கியம் கண்டியோ. ஐயரும் வந்திட்டார். கொரோணா ஒருபக்கம். ஊரடங்கு மற்றப் பக்கம். ஐயா நீங்கள் உங்கடை அலுவலைத் தொடங்குங்கோ.. அதுதான் செத்தசீவனுக்கானது. முக்கியம்.. சீராய்ச் செய்யவேணும்.

காந்தி : (பரமேஸ் தொடர்ந்து அழுதல்)அழாதையக்கா.. விடு.. விடு.. என்ன செய்யிறது இந்த கொரோணாவாலை தொட்டுக்கிட்டும் ஒண்டும் செய்யேலாதே.. வாங்கோ.. இஞ்சாலை வாங்கோ.. அண்ணை.. தம்பியவை நீங்கள் தூக்குங்கோ..

கனக : ஆ..ஆ..சரி..சரி..அப்பிடி.. இஞ்சாலை.. ஆக்கள் வரவேண்டாம் எண்டதாலை ஆளும் ஆளும் தான் கவனமடா தம்பி.. கவனம்.. உப்பிடி வையுங்கோ தம்பியவை..

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 2**

**மாந்தர்கள் : பரமேஸ்வரி, சாந்தன்**

**களம் : பொன்னம்பலம் உபாத்தியாயர் வீடு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமே : என்ன தம்பி சாந்தன்.. ஊரடங்கு நேரமாயிருந்தாலும் வெளிக்கிட்டு வந்திட்டாய் தம்பி.. உனக்குத்தான் நான் கரைச்சல் தாறன்..

சாந்த : சீச்சீ.. இதிலை போறவழியிலை வந்து எட்டிப்பாத்திட்டு போறதிலை.. எனக்கென்ன கரைச்சல் மாமி..

பரமே : நேரகாலத்துக்கு அவற்றை பென்சன் தொடர்பாய் விதானையாருக்கு தெரிவிக்காட்டில் பிறகு வீண் பிரச்சனை வரும் கண்டியோ.. அதுதான் வரச்சொன்னனான்..

சாந்த : உண்மைதான்..

பரமே : உதிலை இரு மோனை.. நான் எல்லாம் நிரப்பி வைச்சிருக்கிறன். கொண்டாறன். துடக்கு வீடெல்லே.. தண்ணி வென்னி குடி எண்டு கேக்கவுமேலாது..

சாந்த : ஓம் மாமி.. அது பறவாயில்லை..

பரமே : தம்பி இந்தா இதிலை கடிதம் இருக்கு.. அடையாள அட்டை தான் போட்டோ கொப்பி எடுக்கேலை..

சாந்த : பரவாயில்லை தாங்கோ.. அது நான் எடுத்துக் குடுக்கிறனே.. (ஆச்சரியத்துடன்) இதென்ன மாமி காசு.. என்னத்துக்கு..

பரமே : அது தம்பி.. (தயங்கி) வந்து.. நீர் இந்த ஊரடங்கு காலத்திலை அண்டண்டு உழைச்சு சீவிக்கிற சனங்கள்.. இண்டைக்கு உழைப்பில்லாமல் சாப்பாட்டுக்கு கஷ்டப்படுகிற ஆக்களுக்கு வாசிகசாலைப் பெடியளோடை சேர்ந்து உதவுறதாய்க் கேள்விப்பட்டன்.

சாந்த : ஓமோம் மாமி.. வாத்தியார் இருந்திருந்தால் நிச்சயமாய் அவர்தான் முதல் ஆளாய் வெளிக்கிட்டிருப்பார்..

பரமே : அதுதான் தம்பி.. என்னாலை சாமான் சக்கட்டு வாங்கித் தரேலாது.. இந்தக் காசுக்கு ஏதேனும் வாங்கிக் குடு தம்பி.. அவருக்கும் ஒண்டும் செய்யேலை.. உப்பிடிப் பசி பட்டினியிலை கிடக்கிறதுகளுக்கு குடுத்து அதுகளின்ரை வயிறு குளிர்ந்தால் செத்தசீவனுக்கும் புண்ணியம் கிடைக்கும் தம்பி.. ஓம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்த : உண்மைதான். அதாலைதான் கஸ்டம் எண்டாலும்.. ஏதோ ஏலக்கூடிய உதவிதன்னும் செய்வம் எண்டு வெளிக்கிட்டனாங்கள்..

பரமே : இப்பிடியான நேரத்திலைதான் கட்டாயம் செய்யவேணும்

சாந்த : (தயங்கி) நாங்கள்.. ஒருத்தரிட்டையும் காசாய் வாங்கேலை மாமி அதாலை பிறகு எங்களுக்கையே தேவையில்லாத பிரச்சனையள் உருவாகலாம். கெட்ட பேரும் வாங்க வேண்டி வரும்..

பரமே : சாந்தன்.. குலைக்காத நாயும் இல்லை குறைசொல்லாத வாயும் இல்லை. ஆக மொத்தத்திலை இரண்டும் இல்லாட்டில் அது உலகமும் இல்லை.. எண்ணுவினம். எங்கடை வேலையை நாங்கள் பாக்க வேணும்.. எங்களுக்கு எது சரி எண்டு தெரியுதோ அதைச் செய்ய வேணும்..

சாந்த : விளங்குது மாமி.. ஆனால்..

பரமே : என்ன ஆனால் எண்டு இழுக்கிறாய் தம்பி.. உதுகளைப் பாத்தால் வீட்டு மூலைக்குள்ளைதான் குந்தியிருக்கவேணும்..

சாந்த : எண்டாலும்..

பரமே : (இடைமறித்து) இஞ்சைபார்.. எனக்கு இந்தநேரத்திலை அதுகளுக்கு எதெண்டாலும் என்னாலை ஏலக்கூடியது செய்ய வேணுமெண்டு விருப்பம். ஆனால் வெளிக்கிட்டு சாமான் சக்கட்டு வாங்கேலாது..

சாந்த : எனக்குத் தெரியுது.. ஆனால்..

பரமே : (அதட்டி) பிறகும் பிறகும் ஆனால் ஆனால் எண்டு இழுத்தால்.. என்ன மூஞ்சேலை அதுதான் பேஸ்புக்கிலை ஆரேன் போட்டிடுவினம் எண்டு பாக்கிறியோ.. அது முகம் தெரியாத கழிசறையள் செய்யிற வேலையெல்லோ..

சாந்த : நான் அதுக்குப் பயப்பிடேலை..

பரமே : இது நான் தாறதில்லை.. வாத்தியாற்றை செத்த சீவனுக்காகச் செய்ய வேண்டிய ஆடம்பரங்கள் விலாசமாய்ச் செய்யாமல் விட்டதாலை கிடக்கிறது. இதை நீ கொண்டு போய் அதுகளுக்கு ஏதேன் செய்தால் தான் அவற்றை சீவன் சாந்தியடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுக்காகவெண்டாலும் கொண்டு போ.. வாற பிரச்சனையை நான் பாக்கிறன்.. இந்தா பிடி

சாந்த : நீங்கள் உப்பிடிச் சொல்லேக்கை இயலாது எண்டு மறுக்கவும் முடியேலை..

பரமே : தேவையில்லாத கதையள் வராது. சீனாவிலை இருந்து சிங்காரி வந்தாள்.. என்ன ஏழை பணக்காரனெண்டு வித்தியாசம் பாத்தாளே பாவி... எங்கத்தையோ பிரதம மந்திரியையே பிடிச்சதெண்டால் பார்.. மனிதமெண்டால் என்னண்டு புரியவைச்சிருக்குது...

சாந்த : எந்த விசயத்திலையும் தீமையிலையும் நன்மையும் இருக்கிறது தானே..

பரமே : ஓம்.. ஓம் ..அதை இல்லை எண்டு சொல்லமுடியுமே..

சாந்த : உப்பிடித்தான் சுனாமி வரேக்கையும்.. ரெண்டு வருசம் ஏதோ சுடலைஞானம் மாதிரிக்கதைச்சம்..ஒண்டுதன்னும் நடந்துதே..

பரமே : எப்பிடிச் சொன்னாய்..

சாந்த : கதைச்சமாதிரி நடந்திருந்தால் இண்டைக்கு இப்பிடியே இருப்பம். இப்ப எல்லாம் பழைய குருடி எண்டது மாதிரி.. அப்பிடித்தான் இதுவும்.. நாலுநாளைக்கு மனிதம் எண்ணுவினம். பொறுத்திருந்து பாப்பம். சரி வாறன் ..மாமி. பிந்தினால் விதானையைப் பிடிக்கேலாது.. (சிறிது இடை வெளியின் பின் கேற் திறக்கும் சத்தம்)

பரமே : பயணம் போறபிள்ளையைக் கூப்பிடக் கூடாதுதான். இஞ்சேதம்பி ஹெல்மட்டை விட்டிட்டுப் போறீர்..

சாந்த : (வந்துகொண்டு) தாங்கோ மாமி.. மனிதத்தைப் பற்றிக் கதைச்சு ஹெல்மட்டை மறந்து போனன். (நாய் குலைத்தல்)

பரமே : நல்லகாலம் நான் கண்டது.. உங்கை சந்திக்குச் சந்தி நிக்கிற பொலிஸ்காரன் ஹெல்மட்இல்லையெண்டு பிடிச்சால்..

சாந்த : (சிரித்து) மாமி.. பொலிஸ் தலைமூடி அதுதான் ஹெல்மட் கேட்ட காலம்போய்.. இப்ப முகமூடி அதுதான் முகக்கவசம் கேக்கிறகாலம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமே : அப்பிடியே ..எனக்கெங்கை உதுகள் தெரியப்போகுது..

சாந்த : (சிரித்து) முகமூடி போடாமல் திரிஞ்சால் மரணமும் மேட் இன் சைனா தான்.. அதுவும் உங்கடை சீனத்துச் சிங்காரியின்ரை வேலைதான்..

பரமே : இஞ்சைபார் தம்பி உவங்கள் உதுக்கு மருந்து கண்டு பிடிக்காட்டிலும் பரவாயில்லை.. எங்கை எப்பிடி எந்தப் பக்கத்தாலை, எந்தப்பாதையாலை வருகுதெண்டு பாக்க ஒரு கண்ணாடி எண்டாலும் கண்டு பிடிச்சா அதே போதுமடா..

சாந்த : எடை.. அப்பிடியும் ஒரு உண்மை இருக்குதுதான்.. நல்ல ஐடியாதான். கடையிலை இருந்தால் உங்களுக்கும் ஒண்டு வாங்கியாறனே..

பரமே : எல்லாத்துக்கும் பகிடிதான்..

சாந்த : (போய்க் கொண்டு) சரி நான் வரப்போறன்.. (நாய்கள் குரைத்தல்)

பரமே : இஞ்சை பார் இவளவு நேரமும் அங்காலை தங்கடை பாட்டிலை கிடந்த றோட்டு நாயள் இப்பதான் குலைக்கினம். ஐம்பதுக்குக் காணும்..

சாந்த : அதுவும் கொரோணாவின்ரை வேலைதான்.. (சிரித்து) அதுகள் நாங்கள் பயப்புடுறதைப் பாத்துச் பாத்துச் சிரிக்குதுகள்..ம்.. காலம்..

பரமே : சாந்தன் உண்மையைச் சொல்லப் போனால்.. கொரோணாவாலை அடங்கினது மனிசர் மட்டும் தான். மற்ற ஒரு அறிவிலை இருந்து ஐஞ்சு அறிவு வரையிலிருக்கிற அத்தினை சீவனுகளும் இண்டைக்கு சுதந்திரமாய் வாழுதுகள்.. கடவுள் படைச்ச மாதிரியே வாழுதுகள். ஆறறிவுபடைச்ச மனிசன் மட்டும்தான் அடங்கிக் கிடக்கிறான்..

சாந்த : ஆண்டவனுக்கே சவால்விட்டவன் மனிசன் மட்டும் தானே.. மற்றதுகளில்லையே..

பரமே : அது தானே ஆண்டவன்ரை கோவில் குளத்தையும் மூடியாச்சே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்த : கோயில் பூட்டினால் என்னமாமி.. வானம் தூசி இல்லாமல் தெளிவாய் இருக்கிறதாலை எத்தினையோ வருசத்துக்குப் பிறகு இந்தியாவிலை இமயமலையே தெளிவாய்த் தெரியுது எண்டால் பாருங்கோவன்..

பரமே : தம்பி.. ஒவ்வொண்டுக்கும் பொருத்தமாய் ஒவ்வொரு கதை சொல்லிப் போடுவாய்.. உன்னோடை கதைச்சு வெல்லேலாது.. நிண்டு மினைக்கடாதை. கவனமாய்ப் போட்டு வா (கேற் மூடும் சத்தம்)..

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 3**

**மாந்தர்கள் : கனகரத்தினம், தம்பிராசா**

**களம் : தபாற்கந்தோர்**

கனக : தம்பிராசா.. வாத்தியாரும் போய் மாதமாகப்போகுது.. இந்த கண்டறியாத கொரோணாவாலை எல்லாரும் அயல்வீட்டுப் படலை திறக்காமல் வீட்டுக்கை அடைஞ்சு கிடந்தது தான்.

தம்பி : போதாக்குறைக்கு அவன் ஆரோ ஒருத்தன் சுவிசிலை இருந்து வந்து சும்மாகிடந்த சங்கை ஊதிக் கெடுத்தது மாதிரி என்னத்தையோ ஓதி எங்கடை பக்கத்தையும் மாட்டுப்பட வைச்சது தான் மிச்சம்.

கனக : ஏதோ இந்த பென்சனாலை இண்டைக்கு வெளிக்கிடக் கூடியதாய் இருந்தது..

தம்பி : ஓம்.. வாத்தியார்.. நீ வீட்டுக்கை எண்டால் கொரோணா வெளியிலை.. நீ வெளியிலை எண்டால் கொரோணா வீட்டிலை எண்டு அரசாங்கம் சொல்லி.. சனத்தை பாதுகாக்கேக்கை.. ஏன் நாங்கள் தேவையில்லாமல் இஞ்சை அங்கை எண்டு வெளிக்கிட்டுத்திரிவான்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனக : உண்மைதான்.. எனக்கெல்லாம் ஒன்றும் ஆகாது எண்ட நினைப்பும்.., எவனுக்கு என்ன ஆனால் எனக்கென்ன எண்ட திமிரும் தான்.. இந்த கொரோனா பரவ மூலகாரணமாம்..

தம்பி : இது மற்ற வருத்தங்களைப்போல இல்லையாம்.. ஒவ்வொருத்தரும் சுய கட்டுப்பாட்டோடை இருந்தால் பரவுறதைக் கட்டுப் படுத்தலாமாம்..

கனக : பாருங்கோ.. பொன்னம்பல வாத்தியார் செத்தார்.. எத்தினை ஆயிரம் வந்து மொய்க்கிற செத்தைவீட்டை... சீனாவிலை இருந்து சிங்காரி வந்திட்டாள்.. பத்துபேரோடை செய் எண்டு விதானை சொல்ல.. அதின்படியே செத்தவீடு செய்யேலையே.. என்னகுறை விட்டனாங்கள்..

தம்பி : அதை மாதிரித்தான் நாங்கள் ஒவ்வொருத்தரும் நினைச்சா.. சுயகட்டுப்பாட்டோடை இருந்தா..சிங்காரியென்ன.. எந்தமகராசி வந்தாலும்.. எங்களை அண்டேலாது கண்டியளோ.

கனக : சரியாய்ச் சொன்னியள்.. மகராசி சீனாவிலை இருந்து வந்து கால்வைச்சாள்.. மனிசரைத்தான் விடுங்கோ.. கோயிலோ, குளமோ.., நன்மையோ.. தீமையோ.. எல்லாத்தையும் இல்லாமல் பண்ணினது மட்டுமில்லை.. கடவுளுகளையும் எல்லோ பூட்டி வைச்சிட்டுது. எல்லாம் பூசை புனஸ்காரம் இல்லாமல் பூட்டெண்டால் பாருங்கோவன்..

தம்பி : சனத்துக்கு கடவுளே கதி எண்டு மனம் ஆறவும் இடமில்லாமல் இருக்குது..

கனக : உங்கை செவ்வாய்க்குப் போறன்.. புதனிலை கால்வைக்கிறன்.. எண்டு வீரம் பேசினவை எல்லாரும் வீட்டு வாசலுக்கு வெளியிலை காலைவைக்கவே பயப்பிடுகினம் எண்டால் பாருங்கோவன்.

தம்பி : விஞ்ஞானம் வளர்ந்திட்டுது, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை போட்டியாக எல்லாருமே உருவாக்கி விட்டம். அணுகுண்டு வைச்சிருக்கிறம்.. ஒரு கணத்திலை நினைச்சதை அழிப்பம் எண்டு வீறாப்பு பேசினவை.. மருத்துவத்திலை கொடிகட்டிப் பறக்கிறமெண்டவை இதை அழிக்க ஆயுதமும் இல்லையாம் மருந்தும் இல்லையாம்.. இப்பதான் தேடுகினமாம்.. ஆராய்ச்சி செய்யினமாம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனக : (ஏளனமாக) இண்டைக்கு மருந்தென்ன தெரியுமே.. வெள்ளைக் காரனுக்கும் சித்த வைத்தியம். அதுதான் 'மிளகுக்கு ஓடும் நோயும். வேம்புக்கு இறங்கும் பேயும், மஞ்சளுக்கு மயங்கும் கிருமியும், உப்பில சாகிற வைரசும்' எண்ட சித்தர் பாட்டுத்தான் மருந்தெண்டால் பாருங்கோவன்.

தம்பி : உலகமே அடங்கிப் போச்சுது.

கனக : அப்பிடிச் சொல்லாதையும்.. மனிசர் இனம் மட்டும் அஞ்சி அடங்கிக் கிடக்குது எண்டு சொல்லும். மற்ற எல்லாம் எதுக்கும் அஞ்சவேயில்லை. வழமையிலும் பார்க்க உற்சாகத்தோடை இயங்கிறதைப் பாக்கிறம்..

தம்பி : உண்மைதான் திருகோணமலையிலை அழகான மான்கூட்டம் எவளவு சுதந்திரமாய் ஓடித்திரிஞ்சுதுகள்..

கனக : ஓம்.. ஓம்..

தம்பி : இஞ்சை உந்த ஓமந்தைப் பாலத்திலை.. ஒண்டுரெண்டே... எத்தினைமயில்.. கூட்டமாய் தோகை விரிச்சாடிச்சுது.. ஆரோ மூஞ்சைப் புத்தகத்திலை அதுதான் பேஸ்புக்கிலை வீடியோ போட்டிருந்தான்.

கனக : (சிரித்து) அப்ப இப்ப தம்பிராசரும் மூஞ்சை பாக்கிறார் போலை..

தம்பி : பேரன் பள்ளிக்கூடமும் இல்லை.. இருபத்திநாலு மணித்தியாலமும் சூம்.. சூம் எண்டு அதோடைதான்.. உப்பிடி ஏதேன் எண்டால் எனக்கும் காட்டுவான். அதிலையும் விசயமிருக்கு.

கனக : ம்.. இல்லாமலே.. அதாலைதானே அடங்கின சனம் இண்டைக்கும் பைத்தியம் பிடிக்காமல் இருக்குதுகள். (சிரித்து) இஞ்சைபாரும் உந்தத் தொடர் நாடகங்களும்.. அதுதான் மாமி.. மருமக்களும் சீனத்து மகராசியைக் கண்டு வீட்டுக்கை அடங்கி எல்லே கிடந்தவை கொஞ்சநாள். அது எங்கடை பெண்டுகளுக்கு சீரியல் இல்லாமலும் வாழலாம் எண்ட தெண்டைக் குடுத்திருக்குது.

தம்பி : அதெண்டால் நூற்றுக்கு நூறு உண்மைதான் வாத்தியார்.

கனக : (சிரித்து) இஞ்சைபார் தம்பிராசா! குடும்பத்துக்காக ஓடுறம் எண்டு குடும்பத்தை விட்டே ஓடிக்கொண்டிருந்த எங்கடை சனத்தின்ரை ஓட்டத்தை வீட்டுக்கையே அடக்கின தெண்டால் அவள் மகராசிதானே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி : உண்மைதான் வாத்தியார்.. உது.. உயிரியல் ஆயுதமும் இல்லை ஒரு மண்ணாங் கட்டியுமில்லை.. மனிசற்றை கொட்டம் எல்லை தாண்டேக்கை ஆண்டவன்ரை ஆட்டம் தொடங்கும் எண்ணுவினமே.. அந்த ஆட்டம் தான் இப்ப நடக்குது... எல்லாம் கடவுளின்ரை சோதினை..

கனக : அதுதான் நூறுவீதம் உண்மை (ஓட்டோ ஹோர்ண் அடித்தல்) இஞ்சை பார் கொரோணாக் கதையைச் சொல்லிக் கொண்டு நிண்டதாலை நேரம் போனதே தெரியேலை.. ஓட்டோவும் வந்திட்டுது.

தம்பி : சரி.. ஏதோ அந்த மகராசி சீச்சீ சீனத்துச் சிங்காரி எங்களிலை கண்வைக்காமல் தப்பியொட்டி இருந்தால் ஆறுதலாய்க் கதைப்பமே..

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 4**

**மாந்தர்கள் : கனகரத்தினம், சாந்தன், பரமேஸ்வரி,**

**களம் : பொன்னம்பலம் உபாத்தியாயர் வீடு**

கனக : என்ன பரமேசு.. ஆக்கள் வாறது கூடித் தெரியாமல்.. யோசினை பிலனாயிருக்குது.

பரமே : ம்.. வந்தாள் மகராசி.. சீனாவிலை இருந்து வந்தாள். மூலை முடுக்கு எல்லாம் புகுந்து உலகத்தையே ஒரு உலுக்கு உலுக்கிப் போட்டாள்.

கனக : (சிரித்து) பரமேசு சொல்லுறது சிரிப்பாய் இருந்தாலும். உண்மை தான். மகராசி தான். மகராசி எண்டதாலை தான் பொம்பிளையளுக்கு முகராசி போலை..

பரமே : என்ன வாத்தியார்.. ஏதோ வாயிலை வந்துது.. சொன்னன்.. நீங்கள் அதுக்குள்ளை இன்னொண்டு வைச்சுப் பகிடி பண்ணினால்..

கனக : பரமேசு பகிடியில்லை.. உண்மையிலை கொரோணா பொம்பிளையளுக்கு முகராசி தான்.. அதாலைதான் உலகத்திலை எங்கையெல்லாம் பொம்பிளையள் ஆட்சி செய்யினமோ அங்கைதான் கொரோணா கட்டுப்பாட்டுக்கை வந்திருக்கெண்டால் பாரன்.. முகராசி இல்லாமலே.. (நியூசீலந்து, ஜேர்மனி, டென்மார்க், நோர்வே, பின்லாந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந் : (வந்து) என்ன கொரோணா ஆருக்கு சப்போட் எண்டு விவாதம் நடக்குது போலை..

பரமே : தம்பி சாந்தனே.. வா.. கொரோணா மகராசி.. பொம்பிளை யளுக்குத்தான் சப்போட் எண்டு வாத்தியார் சொல்லுறார்..

சாந் : உண்மைதானே கொரோணாவாலை ரிவி மெகா தொடர் நாடகங்களை பாக்காமலும் நாங்கள் மூண்டு நேரமும் சமைச்சுப் போட்டு குடும்பத்தோடை குதூகலமாய் இருப்பம் எண்டு எங்கடை அன்னையர் குலத்துக்கு நிரூபிக்க ஒரு சந்தர்ப்பம் குடுத்திருக்குது எல்லே..

கனக : அதுதானே பாத்தன்.. தம்பி சாந்தன் மறுப்பரே.. தம்பிக்கும் கொரோணா வழிகாட்டி இருக்குதெண்டு சாடைமாடையாய் கதையொண்டு உலாவுது.. பரமேசு.. உன்ரை மகராசி கொரோணாவாலை தம்பி சாந்தனுக்கும் மகராசி வரப்போறா எண்டு கேள்வி..

பரமே : பார்வெக்கத்தை.. அதேசொல்லுது.. என்னதம்பி.. அந்த இடம் தானோ..

சாந் : (வெட்கத்துடன்) ஓம்.. ஓம்.. பிள்ளைக்கு விருப்பமாய் இருந்தாலும்.. அவவின்ரை தாய் தகப்பன்.. வெளிநாட்டு மாப்பிள்ளைக்குத் தான் கட்டிக்குடுப்பன் எண்டு நிண்டவை. இப்ப கொரோணா எங்கடை சனத்தை வெளிநாட்டிலை பிரட்டி எடுக்கிறதைப்பாத்திட்டு.. இப்ப எழுதிப்போட்டு ஆவணிக்கு செய்வம்எண்டு முடிவெடுத்திருக்குது..

கனக : ம்.. அப்ப.. நான் கேள்விப் பட்டது சரிதான்..

பரமே : பாத்தியளே வாத்தியார் அப்ப நான் சொன்னது சரிதானே.. சீனத்துச் சிங்காரி வந்து எவளவோ அழிவுகளைக் குடுத்தாலும்.. படிப்பினையளையும் தந்திருக்குது. ம் கொரோணா மகராசி.. தான்.. அவள் எங்கடை வையகத்துக்கு.. மனிதகுலத்துக்கு புத்தி புகட்டவந்த மகராசி தான். (மூவரும் சிரித்தல்)

......... **நிறைவு** .........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. பரிசு



நாடக மாந்தர்களும் வானொலியில் குரல்கொடுத்த கலைஞர்களும்.

| | | |
|---|---|---|
| அண்ணாவியார் அருளப்பு | – | ஞானம்மாவின் கணவரின் தகப்பன் |
| | | செல்லம் அம்பலவாணர் |
| ஞானம்மா | – | குடும்பத் தலைவி. |
| | | நெய் றஹீம் சஹீட் |
| எட்வேட் | – | ஞானம்மாவின் மகன் |
| | | எம் ஐ. லோசன் |
| சிசிலியா | – | எட்வேட்டின்மனைவி |
| | | கலிஸ்ரா திருச்செல்வம் |
| பொன்னம்பலம் | – | புறோக்கர் (கலியாணத் தரகர்) |
| | | லூக்கஸ் திருச்செல்வம் |

வானொலிக்கான தயாரிப்பு : சிவராசா தக்கீசன்

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தமிழ்ச்சேவையில் 25.12.2019ல் கிறிஸ்துமஸ் தின சிறப்பு நாடகமாக ஒலிபரப்பாகியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. பரிசு

காட்சி : 1

மாந்தர்கள் : அருளப்பு, ஞானம்மா

களம் : ஞானம்மா வீடு

அரு : (பாடுதல்) *தண்ணி அள்ளக் காலமோ..*
*தாயிருந்தால் இது ஆகுமோ..*
*எண்ணியே என்னுள்ளே ஏங்குகின்றேன்*
*ஏசுநாதா என்ன சோதனையோ..*

ஞான : (கோபத்துடன்).. ம்.. சாப்பிட்ட கோப்பையைக் கழுவுறதுக்கு ஒரு வாளி தண்ணி அள்ளச் சொல்லிப் போட்டனெண்டு.. இந்தப் பாட்டை இழுத்து விடுறார் எனக்கு.. உந்தக் குத்துக் கதையளுக்கும் பாட்டுக்களுக்கும் மட்டும் குறைவில்லை..

அரு : ரெண்டு வரி பாடினால் பிள்ளை ஞானம் ஏன் அப்பிடி எடுக்கிறாய்..

ஞான : மனிசருக்கு எத்தினை காலும் கையும்.. விடிஞ்சால் பொழுதுபடும் மட்டும் மிசின் மாதிரிவேலை செய்தும்.. ஆரிட்டை எண்டாலும் நன்மை கேட்கிறதே.. யேசப்பா.. எல்லாம் என்ரை தலைவிதி..

அரு : நான் இப்ப என்ன சொல்லிப் போட்டனெண்டு மோனை ஞானம் உந்தத்துள்ளுத் துள்ளுறாய்.. ஏதோ அந்தக் காலத்திலை இந்த அண்ணாவியார் அருளப்பன் ஆடின கூத்தின்ரை ரெண்டு வரியை முணுமுணுத்த உடனை கொக்கரிக்கிறாய்..

ஞான : என்ன கொக்கரிக்கிறனோ.. ம்.. கூத்துப்பாட்டுப் பாடுறாராம்.. கூத்துப்பாட்டு.. குத்துக்கதை சொல்லிப்போட்டு அதுக்கு ஒரு வியாக்கியானத்தைப் பாருங்கோவன்.. இஞ்சை இருந்து மற்றவைக்கு குத்துக்கதையள் போடுறதை விட்டிட்டு விரும்பின இடத்திலை போய் விரும்பியவையோடை சந்தோசமாய் இருங்கோ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரு : நான் சும்மாய் வாயிலை வந்ததை முணுமுணுக்க ஏதேதோ எல்லாம் சொல்லுறாய் மோனை..

ஞான : (கவலையுடன்) என்ன கறுமம் செய்து பிறந்தனோ.. இஞ்சை கிடந்து அனுபவிக்கிறன். அந்தாள் புண்ணியம் செய்த மனுசன்.. மகன் எட்வேட்டுக்கு ஐஞ்சு வயசாய் இருக்கேக்கையே இந்த உபத்திரவங்கள் ஒண்டும் வேண்டாமெண்டு நிம்மதியாய்ப் போய்ச் சேர்ந்திட்டுது. நான் கிடந்து உத்தரிக்கிறன்.. போகேக்கை தகப்பன் காரனையும் என்ரை தலையிலையே சுமத்திப் போட்டு போய்ச் சேர்ந்திட்டுது..

அரு : அப்பிடிச் சொல்லாதை மோனை ஞானம். என்னை விடு.. நான்பாவி.. உனக்குச் சுமைதான். ஏற்றுக் கொள்ளுறன். ஆனால் அவன் கொடுப்பனவில்லாதவன் மோனை.

ஞான : ஏன்.. அந்தாள் இந்த உபத்திரவங்களை காணாமல்.. அனுபவிக்காமல்.. போய்ச்சேர்ந்திட்டார்.. அதுதான்...

அரு : இல்லை மோனை .. கர்த்தரின்ரை அருள் இருந்திருந்தால் இண்டைக்கு மகன்காரன் டாக்குத்தராய் இருக்கிற காட்சியை.. நாளைக்கு அவன்ரை கலியாணம் குழந்தை குட்டி.. இப்பிடியான விசேசங்களை காணாமல் போட்டானே எண்டு சொன்னன்.

ஞான : உப்பிடிப் பாத்தால்.. பேரப்பிள்ளையள்.. பூட்டப்பிள்ளையள்.. எண்டு ஆசை தொடர் கதையாய்த் தொடரும்.. ஒண்டு போக ஒண்டு வரும். எண்டைக்கோ ஒரு நாளைக்கு கர்த்தரின்ரை அழைப்புக் கிடைக்க.. போகத் தயாராகத்தான் நாங்கள் இருக்கவேணும்.

அரு : அது தெரியும் பிள்ளை.

ஞான : ஆனால்.. இஞ்சை.. மண்ணுக்கும் சுமையாய் இருந்து.. பாவிகளாய்.. தானும் கஷ்டப்பட்டு.. மற்றவைக்கும் பாரமாய் இருக்கிறதைப் பார்க்கிலும்.. கைகால் ஊசாடி ஆளாய்த் திரியேக்கை அடுத்தவைக்குப் பாரமாய் இருக்காமல் போய்ச் சேருறது எவ்வளவோ நல்லதெண்டன்..

அரு : அதுக்கு குடுத்து வைக்க வேணும் மோனை.. நாங்கள் நினைச்சு நடக்கிறதில்லை.. வலோத்காரமாய்ப் போக எண்ணுறதும் பிழை.. ம்.. அவற்றை அழைப்பு வரவேணுமே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான : போறதுக்கு அழைப்பு வரவேணும். சரி.. ஆனால் இருக்கேக்கை.. இருக்கிறவைக்கு உபத்திரவமாய் இல்லாமலிருக்க நாங்கள் ஒரு.. ஒரு கொஞ்சமெண்டாலும் முயற்சி செய்யவேணும்.

அரு : இஞ்சைபார் ஞானம்.. 'நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்.. உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்.. ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்' எண்ட தேவவாக்கை ஒவ்வொரு நாளும் செபம் செய்தும்.. புருஷன்ரை தகப்பனை பராமரிக்கிறதை ஒரு சுமையாய்.. உபத்திரவமாய் நினைக்கிறாயே.. அதை நினைக்கத் தான் எனக்கு என்ன செய்யிறதெண்டே விளங்கேலை மோனை..

ஞான : (எரிச்சலுடன்) அதுதான் சொல்லுறன்.. உங்களுக்கும் விளங்கும்.. சுதந்திரமாயும் இருக்கும்.. உங்கடை வயதுக் காறரோடை சந்தோசமாயும் இருக்கலாம். ஆண்டவற்றை ஆசீர்வாதமும் கிடைக்கும்.. ஒருமுதியோர் இல்லத்திலை சேர்த்து விடுறம்.. போய் இருங்கோ எண்டு சொல்லுறதைக் கேட்டால் தானே.. போயிருக்கப் பயந்து கொண்டு..

அரு : பயமில்லைப் பிள்ளை.. அதுவந்து..

ஞான : வந்தும் போயும்.. இஞ்சைபாருங்கோ 'தேவன் எங்களுக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்' எண்ட எண்ணமும் எப்பவும் எங்களோடையே இருக்க வேணும்.

அரு : மோனை..

ஞான : ம்.. அவனும் ஒரு டாக்குத்தர்.. வாறமாதம் யூகே யாலை வர எங்கையேன் ஒரு நல்ல இடத்திலை சம்பந்தம் அது இது எண்டு வந்து.. பிறகு எங்களாலை அதுகளுக்கை பிரச்சனை வர முந்தி நாங்களாய் கௌரவமாய் ஒதுங்கிக் கொள்ளுறது நல்லது எண்டு நினைக்கிறியளில்லை..

அரு : இஞ்சைவா ஞானம். பேரன்எட்வேட் அப்பிடிச் சொன்னவனே.. நீ ஏன் மற்றவையை அதுக்கை இழுக்கிறாய். கற்பனை பண்ணுறாய்.. எனக்கு சுமையாய் இருக்குது.. என்னாலை பாக்கேலாது.. இஞ்சை இருக்க வேண்டாம் எண்டு நேரை சொல்ல வந்ததைச் சொல்லு... அது எல்லாருக்கும் நல்லது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான : எப்பிடி எண்டாலும் புரிஞ்சாச் சரி..

அரு : ம்.. (பெருமூச்சு விட்டு) சரி.. இதுதான் உன்ரை நிலைப்பாடு எண்டால் நான் போறன்.. ஓம் என்ரை மனசைக் கல்லாக்கிக் கொண்டு போறன். கர்த்தரின்ரை செயல்தான் எண்டு போறன்..

ஞான : இப்ப எனக்கு முதியோர் இல்லத்துக்கு போறன் ஓம்.. சம்மதம்.. எண்டு சொல்லிப் போட்டு அவன் மகன் எட்வேட் வர.. அது இது எண்டு சொல்லுறதில்லை.. அவனுக்குத் தெரியுமே இஞ்சை நான் படுற பாடு.

அரு : நீ ஒண்டுக்கும் யோசியாதை மோனை.. நான் மனசாலை தான் போறதெண்டு சம்மதம் சொன்னனான். 'உன் வழிகளில் எல்லாம் தேவனை நினைத்துக் கொள்.. அப்பொழுது அவர் உன் பாதையைச் செவ்வைப் படுத்துவார்' எண்ட தேவ வாக்கை மனசிலை இருத்தித்தான் முடிவெடுத்தனான். தேவன் நல்ல வழியைக் காட்டியிருக்கிறான். அது நல்லதோ கெட்டதோ அந்த வழியிலையே போறன்.. ஒண்டு மோனை

ஞான : (எரிச்சலுடன்) என்ன..? ஒண்டும்.. ரெண்டும்.. சொல்லுங்கோ..

அரு : நான் போனாப்பிறகும் உங்களுக்கு உபத்திரவமாய் இருக்க விரும்பேலை.. எங்கை எப்பிடிப் போறன் எண்டது.. என்னோடையே இருக்கட்டும்.. அதைப்பற்றி மட்டும் கேக்க வேண்டாம்...

ஞான : (வேண்டாவெறுப்பாக) எங்கை போனால் எனக்கென்ன.. என்னைக் கொடுமை சொல்லாமலிருந்தால் சரி..

அரு : என்னத்துக்கு.. ஆரை ஆர் கொடுமை சொல்லுறது பிள்ளை.. ஏதோ இப்பிடி ஒரு நல்ல வழியைத் தேவன் காட்டியிருக்கிறான்.. அவற்றை அழைப்புவருமட்டும் காட்டின பாதையிலையே பயணிப்பம்.. பிறகு ஏன் மற்றவையிலை நோவான்..

........ காட்சி மாற்றம் ........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி : 2
மாந்தர்கள் : அருளப்பு, ஞானம்மா
களம் : ஞானம்மா வீடு

அருளப்பு தான் வயோதிபசாலைக்குப் போக மருமகளால் நிர்ப்பந்திக்கப்படுவதையிட்டு கவலையுடன் யேசுநாதரின் படத்தின் முன் பாடுதல்.

நேரம் கூட வந்தால் இக்காட்சியை (பாடலை) நீக்கலாம்

*ஆடு கின்ற ஆட்ட மெல்லாம்*
*ஆவி உள்ள மட்டு மே*
*கூடும் இன்ப போக வாழ்வு*
*கூன் வந்திட்டால் நீங்குமே*
*தேடும் செல்வம் காலப் போக்கில்*
*தேய்ந்து போகும் திண்ணமே*
*வீடு பேற்றை வேண்டி நாளும்*
*மீட்பர் அடியை பற்றுமே.. .. ..*

*பற்று கொண்ட சுற்றம் முற்றும்*
*மற்றும் உள்ள உறவினர்*
*உயிர் அற்றுப் போகும் போது*
*உன்னுடன் யார் வருவார் கூறுமே*
*உற்றுப் பார்த்தால் உலகவாழ்க்கை*
*ஒன்றுமில்லை என்பதை*
*சற்று நேரம் சிந்தை செய்து*
*சர்வரையே சாருமே.. .. ..*
*சற்று நேரம் சிந்தை செய்து*
*சர்வர் பாதம் பணியுமே..*

ம்.. சர்வமுமாய் உள்ள கர்த்தரின் எண்ணம் அதுவெண்டால் ஆர்தான் என்ன செய்யலாம். அண்டைக்கு கூத்திலைபாடினது.. ம்.. இண்டைக்கு வாழ்க்கையாகவே அமைஞ்சிருக்குது..

......... காட்சி மாற்றம் .........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி : 3

மாந்தர்கள் : எட்வேட், ஞானம்மா

களம் : ஞானம்மா வீடு

**வெளிநாட்டிலிருந்து வந்த எட்வேட் வயோதிபரான பேரன் அருளப்புவை வீட்டிலிருந்து வெளியேற விட்டது தொடர்பாக தாயாருடன் உரையாடுதல்**

எட் : அம்மா.. என்னம்மா.. ஏனம்மா தாத்தாவை இஞ்சை வீட்டை இருந்து போகவிட்டனீங்கள்.. நானுமில்லாத நேரத்திலை.. சொல்லி மறிச்சிருக்கலாம் தானே..

ஞான : (கவலை மாதிரி நடிப்பு) என்ன தம்பி.. நான் என்ன கேக்காமல் விட்டனானே.. ஆரேன் சொல்லுறதை அவர் கேட்கிற நிலைமையிலை இருந்தால் தானே சொல்லுறதுக்கு.. என்ன கெஞ்சு கெஞ்சியிருப்பன்.

எட் : அம்மா.. அவர் போக விரும்பினால் நான் வந்தாப்பிறகு போகச் சொல்லியிருக்கலாம் தானே அம்மா..

ஞான : சொல்லிப்பாத்தன்.. நீங்கள் விரும்பினால் போங்கோ மறிக்கேலை.. ஆனால் தம்பி வந்தாப்பிறகு ஒரு சொல்லுச் சொல்லிப் போட்டுப் போங்கோ எண்டு எத்தினை தரம் சொல்லிப் பார்த்தன். கேட்டால் தானே.. காதிலை போட்டால் தானே எதையெண்டாலும்..

எட் : ஆனாலும் அம்மா.. ஆரோடை எங்கை எண்டு தன்னும் கேட்காமல்..

ஞான : (இடைமறித்து) அதுதான் ஆரோ சேச்சிலை.. தன்ரை சிநேகிதம்.. சவரிமுத்து எண்டு.. அந்தாள் மூலமாய்த் தான் எல்லாம் ஒழுங்குபடுத்தியிருக்குதெண்டு வந்து.. போறதுக்கு ஒற்றைக் காலிலை நிண்டார். என்னாலை என்ன செய்யலாம் சொல்லு பாப்பம்.. அவற்றை பிடிவாதக் குணம் உனக்குத் தெரியும் தானே..

எட் : அது சரியம்மா.. எனக்கு ரெலிபோனிலை தன்னும் ஒரு சொல்லுச் சொல்லியிருக்கலாம் தானே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான : சொல்லுறதுக்கு விட்டால் எல்லோ.. கர்த்தர் காட்டின வழி.. அது இதெண்டு ஏதோ எல்லாம் வசனங்களையும் சொல்லிக் கொண்டு வெளிக்கிட்டார்..

எட் : எங்கை.. எப்பிடி.. எண்ட விபரத்தைத் தன்னும் வடிவாய்க் கேட்டிருக்கலாம் அம்மா.. இப்பநான் போய்க் கதைச்சுக் கூட்டி வந்திருக்கலாம்..

ஞான : என்ன போய்க் கூட்டிவரவோ.? (தனக்குள்) நான் அந்தாளைக் கலைக்கப்பட்ட பாடு.. எனக்குத் தெரியும்., நீ வந்தால் உது ஒருக்காலும் நடவாதெண்டு.. அது தானே நேரகாலத்தோடை எல்லாத்தையும் முடிச்சனான்.

எட் : நான் கேக்கிறன். நீங்கள் உங்களுக்கையே கதைச்சால்

ஞான : இல்லைத் தம்பி.. நான் பட்டபாடு எனக்கெல்லோ தெரியும். (பொய்க்கவலையுடன்) எத்தினை பாடுபட்டன். கடைசியிலை இப்ப எல்லாப் பழியும் என்ரை தலையிலை தான். எங்கை எவடம் எண்டு கேட்டனான். தனக்கு இடம்வலம் தெரியாது. எல்லாம் போய் விபரமாய் அறிவிக்கிறன் எண்டு வெளிக்கிட்டவர். இண்டைக்கு மாசமும் இரண்டாச்சுது.. ஒரு தகவலும் இல்லை..

எட் : கொண்டுபோய் விட்டிட்டு வந்திருக்க வேணும்.. அல்லது சவரிமுத்துவோடை தன்னும் கதைச்சு விபரங்களை அறிஞ்சிருக்க வேணும். கடைசியிலை அதுவுமில்லை.. இதுவும் இல்லை. ஏனம்மா நீங்கள் செய்த வேலை..

ஞான : (இடைமறிச்சு) உதுகளெல்லாம் எனக்கெங்கைமோனை தெரியப் போகுது.. இந்த மரமண்டைக்கு... நீ நிண்டிருந்தாய் எண்டால் உதுகளை வடிவாய்க் கேட்டு ஒழுங்காய்ச் செய்திருக்கலாம்.

எட் : நான் நிண்டிருந்தால் ஒழுங்கு முறையிலையோ.. போகவே விட்டிருக்கமாட்டன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான : (வேண்டாவெறுப்பாக) இஞ்சைபார் எட்வேட்.. அவர் குழந்தைப் பிள்ளையில்லை நான் கட்டி வைக்கிறதுக்கு.. தனக்குப் பிடிச்ச இடத்துக்கு.. தனக்குப் பிடிச்சவரோடை போகப்போறன் எண்டார். விபரம் கேட்டன். போய்த்தொடர்பு கொள்ளுறன் எண்டார். வெளிக்கிட்டுப் போறதிலையே குறியாயிருந்தார். பேரனுமில்லாத நேரம்.. அவள்பாவியும் தனிய எண்டுதன்னும் நினைச்சாரே..

எட் : அம்மா..

ஞான : (பொய் அழுகை) ஓ.. என்ன குறை வைச்சன்.. மகன்காரனும் போய் இருபத்திரண்டு வருசமாய் வைச்சுப் பாத்தாளே எண்ட நன்றி தன்னும் இருக்க வேண்டாம்.. இப்ப நீயும்.. நான் அது செய்யேலை.. இது செய்யேலை.. அப்பிடிச் செய்திருக்கலாம் இப்பிடிச் செய்திருக்கலாம் எண்டு பழிபோடு.. எல்லாம் நான் செய்த கர்மவினை..

எட் : அம்மா.. ஏன் இப்ப அழுகிறியள்.. கண்ணைத் துடையுங்கோ.. நான் உங்களிலை பிழை எண்டோ அல்லது நீங்கள் கலைச்சதெண்டோ சொன்னனானே.. இல்லையே.. பிறகேன் அழுகிறியள்.. எங்கை போனாரெண்ட விபரத்தைத்தான் கேட்டன்.. நீங்கள் அதுக்குப்போய் அழுதால்..

ஞான : (பொய் அழுகை) அதுதான் போய் அறிவிக்கிறனெண்டார்.. இற்றைவரை ஒண்டுமில்லை.. அதை அவரும் யோசிச்சிருக்க வேணும்.. ம்.. இதை மற்றவையிட்டையும் விசாரிக்கேலாது.. என்ரை மனம் இவளவு நாளும் பட்டபாடு.. எல்லாம் அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்..

எட் : அம்மா.. பிறகுமேன் அதையே திருப்பித் திருப்பி சொல்லிக் கொண்டு.. அதுதான் நான் வந்திட்டனே.. இனியென்ன.. நடக்க வேண்டிய எல்லாத்தையும் நான் பாக்கிறன்.. எல்லாப் பழி பாரத்தையும் நானே சுமக்க ஆயத்தமாய் இருக்கிறன். நீங்கள் ஒண்டுக்கும் கவலைப் படாதையுங்கோ.. சும்மாய் யோசிச்சு யோசிச்சு இல்லாத வருத்தங்களைத் தேடாதையுங்கோ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான : (போலியாக) ம்.. இப்பதானடா நெஞ்சிலை தண்ணி வாத்த மாதிரி நிம்மதியாய் இருக்குது.. ம்..ம்.. (தனக்குள்) உவன் அவரை எங்கை தேடிப்பிடிக்கிறது.. சவரிமுத்து எண்டு ஒருத்தர் இருந்தால் எல்லோ கண்டுபிடிக்க..

எட் : என்னம்மா பிறகும் உங்களுக்கையே புசத்திறியள். (அதட்டி) அம்மா அதையே பிறகும் பிறகும் நினைச்சுக் கொண்டிராமல் நடக்க வேண்டியதைப் பாருங்கோ. போங்கோ..

ஞான : (போலியாக) சரி..சரி.. ஏதோ மனம் கேக்குதில்லை.. உனக்காக.. உன்ரை மனசும் வேதனைப்படக் கூடாது எண்டதாலை மனம் ஆறியிருக்கிறன்.. ம்

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 3**

**மாந்தர்கள் : ஞானம்மா, புறோக்கர் பொன்னம்பலம்**

**களம் : ஞானம்மா வீடு**

**எட்வேட்டுக்கான திருமணப் பேச்சு**

ஞான : அவனுக்கும் ஒருத்தருமில்லை.. தனிப்பிள்ளை.. தகப்பன் இல்லாதவன் அதாலைதான் சொல்லுறன்.. பாக்கிற இடம் அவனுக்கு ஒத்துவாறதாயிருக்க வேணும் புறோக்கர்..

பொன் : எட உது நீங்கள் சொல்லியே தெரியவேணும்.. (தனக்குள் ஏளனமாய்) ம்.. முதலிலை இவவுக்கு அதுதான் மாமிக்காரிக்கு ஒத்துவாறதாய் இருக்கவேணுமே..

ஞான : என்ன பொன்னம்பலம் முணுமுணுக்கிறாய்..

பொன் : ஆ..ஆ.. இருந்து பாருங்கோ.. எப்பிடிப் பொருத்திறன் எண்டு.. புறோக்கர் பொன்னம்பலம் பொருத்தின ஒண்டுதன்னும் நொந்து போயிருக்குதோ எண்டு சொல்லுங்கோ பாப்பம்.. அப்பிடிக் காட்டினால்.. சத்தியமாய்.. இண்டைக்கே நான் இந்தப் புறோக்கர் தொழிலை விடுறன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான : இஞ்சைபார் பொன்னம்பலம் அதாலைதானே உன்னட்டை பாரம் தந்தனான்..

பொன் : ஞானம்மாக்கா.. ஒரு குமரோ.. இளந்தாரியோ இருந்தால்.. புறோக்கர் மாருக்கிடையிலையும் போட்டி கண்டியளோ.. சில புறோக்கர்மார் தங்கடை கொமிசனுக்காக இல்லாத பொல்லாததுகளைச் சொல்லி ஒப்பேற்றி விட்டாலும் பிறகு அதுகளுக்கிடையிலை நித்தம் செத்தவீடுதான்..

ஞான : அது மட்டுமில்லை.. (ரகசியமாக) அவர் பேரன்ரை விசயமும் எல்லே இருக்குது.. அந்தாளும் என்ரை சொல்லுக்கேளாமல் அவர் சவரிமுத்தரோடை போனார். போனது போனது தான்.. ஒரு தகவலுமில்லை.. சவரிமுத்தரையும் காணக் கிடைக்கேலை.. உவன் தம்பி நாலைஞ்சு தரம் சவரிமுத்தரைத்தேடி அங்கை இஞ்சையெண்டு போனவன்.. சந்திக்கேலை.. உதுகள் என்னாலை ஏலுமே..

பொன் : நீங்கள் அதைப்பற்றி யோசியாதையுங்கோ அக்கா.. உதென்ன.. ஊரிலை உலகத்திலை நடவாத விசயமே.. உதைத்தானே வயசு போனால் அறளை பிறக்கிறது எண்டு சொல்லுறது..

ஞான : (தனக்குள்) சவரிமுத்தரை எட்வேட்டும் நம்பியிட்டான். புறோக்கரையும் நம்பவைச்சாச்சுது.. இனி அதுவே நிரந்தரம் ஆகட்டும்.. எல்லாம் சரிவந்தால் வாறவைக்கும் சவரிமுத்து தான்.. ம்..

பொன் : என்ன ஞானம்மாக்கா உங்களுக்கையே சவரிமுத்துவை நினைக்கிறியள் போலை..

ஞான : (தடுமாறி) இல்லை சந்தோசமாய் சவரிமுத்தோடை போறனெண்டு போனவர்.. அவர்.. விபரம் தெரியாதவர்.. சவரிமுத்தர் தன்னும் எங்கை எப்பிடியெண்டு ஒருசொல்லுச் சொல்லியிருக்கலாம்..

பொன் : அதெண்டால் ஞாயம் (நியாயம்) தான்.. வயதுபோன நேரத்திலை.. அதுகளை விடுங்கோ.. அந்தக்கதை வராமல் பாதுகாக்கிறது இந்தப் பொன்னம்பலத்தின்ரை வேலை..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான : ஓம்..ஓம்.. அதுக்கு நீதான் பொறுப்பு பொன்னம்பலம்..

பொன் : அது சரி கதையோடை கதையாய்.. காதும் காதும் வைச்ச மாதிரி.. மகனுக்கு ஏதும் விசேசமாய் A,B,C,D,E அப்பிடி இப்பிடி எண்டு இருக்கோ.. இப்பவே சொல்லிப்போடுங்கோ.. பிறகு உந்த விசயங்கள் தான் கடைசி நேரத்திலை முட்டுக் கட்டையாய் நிக்கும்..

ஞான : பொன்னம்பலம்.. அப்பிடி ஆரும் இருக்கிறதாய் தெரியேலை.. அவன் எது எண்டாலும் என்னோடை ஒளிவு மறைவில்லாமல் கதைக்கிற பிள்ளை. வெளிப்படையாய் சொல்லியிருப்பான். இஞ்சைபார் டொக்டராய் இருந்தாலும்.. தகப்பனில்லாட்டிலும் நான் வளத்த பிள்ளை.. இண்டைக்கும் நான் கீறின கோட்டைத் தாண்டாத பிள்ளை.. ஓ..

பொன் : (இடைமறித்து) அதக்கா..

ஞான : அப்பிடி அவன்தான் சொல்லாட்டிலும் காத்து வாக்கிலை சேச்சிலை எண்டாலும் சரி.. ஊரிலை எண்டாலும் சரி அரசல் புரசலாய்த் தன்னும் கதை வந்திருக்கும்.. நான் நினைக்கேலை.. அப்பிடி அவன் ஆரேன்.. அதுதான் நீ சொன்னமாதிரி ஆரேன் A,B,C,D இருக்கிறதாய்த் தெரியேலை..

பொன் : அக்கா நான் அதைக் கேக்கேலை.. புறோக்கர்மாருக்குத் தெரியாத காதலும் கத்தரிக்காயுமே.. (சிரித்து) இஞ்சை பாருங்கோ ஞானமக்கா உதுகள் ஊருக்கும் சேச்சுக்கும் தெரிய முதல் புறோக்கர் மார் மணப்பெடுத்திடுவாங்கள்.. அப்பிடியான இக்கட்டான விசயங்களிலை நான் ஒருக்காலும் கைவைக்கிறதில்லை.. இது அதில்லை அக்கா..

ஞான : அப்ப நீ ஏதோ A,B,C,D,E அப்பிடி இப்பிடி இருக்கோ எண்டு கேட்டாய்..?

பொன் : இதுகூடத் தெரியாமல்..

ஞான : இஞ்சை அவனே வாறான் கேளுங்கோ..

எட் : (வந்து கொண்டு) என்னம்மா பொன்னம்பலம் மாமாவுக்கு A,B,C,D,E.. படிப்பிக்கிறியளோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான : சீச்சீ.. நானில்லையடா அவர்தான் உனக்கு எங்கையேன் பாக்கிறதுக்கு A,B,C,D,E.. கேட்டார்.

எட் : சரி நீங்கள் சொல்ல வந்ததை சொல்லுங்கோ பொன்னம்பலம் மாமா..

பொன் : அக்கா A எண்ணுறது Age அதுதான் வயசு.. எப்பிடியும் வயசு கூடக் கூடாதுதான்.. ஆனால் தம்பிக்கு..

எட் : நான் வராட்டில் அம்மாதானே பதில் சொல்லியிருப்பா.. நான் வரேலை எண்டு நினைச்சுக் கொண்டு கதையுங்கோ நான் பாத்துக் கொண்டிருக்கிறன்..

ஞான : ஆனால் உனக்குத் தானே பொம்பிளை..

எட் : ஆனால் உங்களுக்குத் தானே மருமகள். அம்மா உங்களுக்கான மருமகள் வாறது தான் குடும்பத்துக்கு நல்லது.. ஆனால் எனக்கெண்டு மனைவி வந்து அது உங்களுக்கான மருமகளில்லாமலிருந்தால், கடைசியிலை எனக்கான மனைவி எண்டதும் இல்லாமல் போகிடும்.. இப்ப அது தான் கன இடத்திலை நடக்குது..

பொன் : சரியாய்ச் சொன்னீர் தம்பி.. அப்பிடிச் சொல்லுங்கோ..

ஞான : உங்களோடை கதைச்சு வெல்லேலாது.. என்ன.. ஒருநாள் எண்டாலும் கூடக்கூடாது.. ஒரு நாலைஞ்சு வயசு எண்டாலும் குறைவாய் இருக்கவேணும். அப்பதான் குடும்பம் இழுபடும்.. அப்ப B எண்டால்..

பொன் : Beauty அதுதான் வடிவு சங்கை..

ஞான : உதென்ன நாங்கள் சொல்லிச் சரிக்கட்டிறதே.. நாலுபேர் ஏதோ அவன் கூட்டிக் கொண்டு போகக் கூடியதாய் கண்ணுக்கு லட்சணமாய் இருந்தால் சரி.. அப்பிடித்தானே தம்பி..

எட் : அதுதானே நான் முதலிலையே சொல்லிப் போட்டனே.. ஒண்டொண்டாய்ப் பிறகும் கேட்டால்.. இஞ்சை பாருங்கோ.. எனக்கு கண்ணியமான மனைவி.. அம்மாவுக்கு அனுசரிச்சுப் போகக்கூடிய அடக்க ஒடுக்கமான மருமகள்.. வேறை என்ன.. மிச்ச Z வரையான எழுத்துக்களை ரெண்டுபேருமே கதையுங்கோ நான் ஒருக்கால் Library லைபிறறிக்கு போட்டுவாறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன் : என்ன ஞானம்மாக்கா.. Z மட்டும் போகவேணுமோ.. தம்பிதான் எல்லாத்தையும் கட் அன்ட் றையிற்றாய் Cut and right சொல்லிப் போட்டுதே..

ஞான : (மெதுவாக - அங்குமிங்கும் பார்த்து) தம்பி போட்டான் தானே.. இஞ்சை பொன்னம்பலம் எல்லாத்துக்கும் மேலை நான் சொன்ன பேரன்ரை விசயம் முக்கியம்.. அதை மறந்திட வேண்டாம்..

பொன் : அதுதானே சொல்லிப் போட்டனே.. அதுக்கு நான் பொறுப்பு.. அதை விடுங்கோ.. கதைச்சுக் கொண்டிருந்ததிலை நேரம் போனதே தெரியேலை.. மோட்ட சைக்கிலுக்கு பெற்றோலும் அடிக்க வேணும்.. பிறகு செற் பூட்டிப் போடுவாங்கள்..

ஞான : என்ன மோட்ட சைக்கிலுக்கு பெற்றோல் அடிக்கவேணும் எண்டு அச்சவாரம் போடுறாய் போலை..

பொன் : உண்மைதானக்கா.. நூறு ஓடினா ஒரு நாலைஞ்சு சரிவரும்.. சைக்கிலுக்கு பெற்றோல் அடிக்கத்தன்னும் வாங்காட்டில் கட்டுமே..

ஞான : ஓம் ஓம்.. உண்மைதான்.. சரி..சரி நான் இல்லையெண்டு சொன்னாப் போலை நீ என்ன வாங்காமல் போகிடுவியே இல்லைத்தானே.. இந்தா இதை வைச்சிரு.. ஏதோ அந்த விசயத்தை மட்டும் மறந்திடாதை.. அது முக்கியம்.

பொன் : (எரிச்சலுடன்) சும்மாய் அதையே திருப்பித்திருப்பி.. (சாதாரணமாக) அதை என்னோடை விடுங்கோ மற்றதெல்லாம் சரியெண்டால் அதை நான் வெண்டு தாறன். இப்ப சரிதானே..

......... காட்சி மாற்றம் .........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி : 4
மாந்தர்கள் : அருளப்பு, சிசிலியா
களம் : முதியோர் இல்லம்
அருளப்பு தொழுதல்

அரு : (பாடுதல் - இராகம் கௌரி மனோகரியை அடிப்படையாகக் கொண்டது
*இறையவனே அருள் மறையவனே சரணம்*
*உனதருள் தருவாய் அமலனே சரணம்..*

*அண்ட சராசரங்கள் அனைத்துமாய் ஈந்த*
*அருள்நிறை கன்னியின் திருநிறை குமரா..*
*தொண்டர் தம் குறைகளைத் தீர்த்திடும் தேவா*
*திருவடி பணிந்தேன் தினம் உனைத் தொழுவேன்..*
*(மீண்டும் : தொண்டர்..)*
மீட்பரே.. மண்ணிலுள்ளோர் பாவங்களை இரட்சிக்க விண்ணிலிருந்து இறங்கிவந்த தேவகுமாரனே.. இந்தப் பாவியை இரட்சிக்க உனது உள்ளம் மறுப்பதேனோ.. என்னைச் சோதிப்பது போதுமையா.. எனது பாவங்களை மன்னித்து இரட்சிப்பாய் யேசப்பா.. கர்த்தரே என்னை மன்னித்து இரட்சியும்..

சிசி : (வந்து கொண்டு) என்ன அருளப்பு ஐயா.. வேண்டுதலெல்லாம் முடிஞ்சிட்டுதோ..?

அரு : ஆ..ஆ.. பிள்ளை சிசிலியாவே.. ம்.. (பெருமூச்செறிந்து) எனக்கென்ன வேண்டுதல்.. சோதித்தது போதும் விடுதலைதா.. எண்ட வேண்டுதல் அவ்வளவுதான்..

சிசி : அப்படியே ஐயா.. மிக்க சந்தோசம் .. ஐயா.. எங்களுக்காக காலங்கள் விரைந்து செல்வதும் இல்லை அவை ஒருபோதும் தாமதிப்பதுவும் இல்லை.. தெரியும்தானே..

அரு : உண்மைதான்.. ஆனால் தட்டுங்கள் திறக்கப்படும் கேளுங்கள் தரப்படும் எண்டும் இருக்குதுதானே.. (சிரித்து) தட்டுறன்.. கேட்டுப்பாக்கிறன். தந்தால் வாங்குவம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சசி : கிடைக்கும்.. நிச்சயமாய் கர்த்தரின்ரை கிருபையாலை நீங்கள் வேண்டுறது கிடைக்கும் ஐயா..

அரு : பிள்ளை. உங்களைப்போலை ஆக்களின்ரை அன்பும் ஆதரவும் எங்களைப் போலை ஆதரவற்றவைக்கு எப்பவும் கிடைக்க வேண்டுமெண்டும் வேண்டுதல்தான்..

சிசி : அது எண்டைக்கும் கிடைக்கும் பெரியவரே.. உண்மையைச் சொல்லப் போனால் நான் அதிலைதான் சந்தோசப்படுறன்.. மனத்திருப்தியடையிறன்..

அரு : (சிரித்துக் கொண்டு) ம்.. எண்டைக்கோ நீங்கள் ஒரு நாளைக்கு கலியாணம் முடிச்சாப்பிறகும்.. இப்பிடியே தொடரவேணும் எண்ணுறதும் எங்கடை எதிர்பார்ப்பு பிள்ளை..

சிசி : சரி.. அப்பிடி ஏதும் ஆண்டவன் கிருபையாலை நடந்தால் இரண்டு பேருமாய் வாறமே..

அரு : அதுக்கும் சேர்த்துத்தான் வேண்டுதல்.. பிரார்த்தனை... (இருவரும் சிரித்தல்)

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 5**
**மாந்தர்கள் : ஞானம்மா, சிசிலியா, பொன்னம்பலம், எட்வேட்**
**களம் : ஞானம்மா வீடு**

(நாய் குலைத்தல்)

ஞான : (உள்ளுக்கிருந்து) தம்பி.. தம்பி எட்வேட்.. நான் இஞ்சை குசினியுக்கை அலுவலாய் நிக்கிறன்.. உந்த நாய் குலைக்குது.. ஆரெண்டு ஒருக்கால் பார் மோனை..

எட் : சரி அம்மா.. (வந்து கொண்டு) பப்பி.. விடு.. இஞ்சாலை வா.. (குலைத்தல் நிற்பாட்ட) ஆ.. பொன்னம்பலம் அங்கிளே.. எட உங்களுக்கே இவர் இந்தப்பாடு பட்டவர்..

பொன் : ஓம்.. இப்ப பார் அடையாளம் கண்ட உடனை வாலாட்டிறதை..

ஞான : ஆர் மோனை அது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட் : அது பொன்னம்பலம் மாமா அம்மா..

ஞான : எட.. அவருக்கே உந்த ஆட்டம் ஆடினவர்..

எட் : சரி வாங்கோ வந்திருங்கோ..

சிசி : ஆர் பொன்னம்பலம் அங்கிளே.. வாங்கோ வாங்கோ..

பொன் : சரி.. என்ன தம்பதியள் பயணம் வெளிக்கிட்டதை நான் குழப்பிப் போட்டன் போலை.. காரும் வெளியிலை எடுத்து ஆயத்தமாய் விட்டிருக்கு.. நீங்களும் வெளிக்கிட்டபடி..

சிசி : ஓம் அங்கிள் ஒருக்கால் பாதரைச் சந்திக்க சேச்சுக்குப் போவமெண்டு..

எட் : ஒன்பதரைக்கு வரச் சொன்னவர்.. அதுதான்

சிசி : தெரியாதே.. பிந்தினால் பாதர் ஒரு மாதிரிப் பாப்பர்..

பொன் : ஓம் பிள்ளை.. உண்மை தான். இஞ்சை அம்மாவோடை கதைச்சுப் போட்டு நான் போறனே.. நீங்கள் போட்டுவாங்கோ..

ஞான : ஓம் மோனை.. நீங்கள் நிண்டு மினைக்கெடாமல் வெளிக்கிடுங்கோ.. நேரகாலத்துக்குப் போகவேணும்..

சிசி : சரி மாமி.. அப்ப நாங்கள் போட்டு வாறம்..

எட் : சரி வாறம் பொன்னம்பலம் மாமா..

பொன் : சரி.. தம்பி..

(கார் வெளிக்கிடும் சத்தம்)

பொன் : என்ன ஞானம்மா அக்கா.. எப்பிடி எல்லாம் சரிதானே.. திருப்திதானே..

ஞான : ஓம் பொன்னம்பலம்.. அதிலை எந்தக் குறையுமில்லை.. வீட்டுக்கேற்ற பிள்ளை

பொன் : அதுதானே அண்டைக்கே சொன்னனே.. பொன்னம்பலம் கைவைச்சா அது தவறுறது கிடையாது.

ஞான : ஓம்..ஓம்.. இந்தா தேத்தண்ணியைக் குடி.. (இழுத்து) என்ன உன்ரை அலுவலுக்குத்தானே..

பொன் : வேறை என்ன.. அதுதான்..

ஞான : இந்தா பொன்னம்பலம்.. இதிலை இருக்குது.. எண்ணி எடுத்துக்கொள்.. (காசு எண்ணுதல்)

ஞான : என்ன சரிதானே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன் : சரிதான்.. ஆனால்..

ஞான : என்ன சரிதான்.. எண்டு ஒரு இழுவை.. சொல்லு.. சொல்ல வந்ததை விழுங்காமல் சொல்லு..

பொன் : (குழைந்து) இல்லை.. பேரன்ரை விசயத்தை வெளியிலை வராமல் செய்யிறதுக்குப் பட்டபாடு.. எவளவு றிஸ்க் எண்டு தெரியும் தானே.. ஏதோ அதுக்கும் பாத்து..

ஞான : சரி..ஞாயம் (நியாயம்) தான். இந்தா இதையும் பிடி.. இப்ப திருப்திதானே.. நீ சந்தோசமாய்ப் போகவேணும்.. அப்பதான் அதுகள் சிறப்பாய் வாழுங்கள்..

பொன் : சரி..சரி எல்லாம் சரி அக்கா.. வேறை என்ன.. நானும் வரப்போறன்..

ஞான : (ஏளனமாக) என்ன இண்டைக்கும் பெற்றோல் செட் பூட்டப் போறாங்களோ..

பொன் : (சிரித்தபடி) இல்லை அக்கா.. அதுதானே சுளையாய்க் கிடைச்சுட்டுதே.. பிறகென்ன.. (இருவரும் சிரித்தல்)

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 5**
**மாந்தர்கள் : அருளப்பு, சிசிலியா, எட்வேட்**
**களம் : முதியோர் இல்லம்**

(கார் நிற்பாட்டும் ஓசை.. கதவு திறத்தல்)

எட் : ஓ.. எவ்வளவு அழகான பசுமையான இடம் சிசிலியா.. பச்சைப் பசேலெண்டு.. எவளவு சுத்தமாய்.. துப்பரவாய் இருக்குது.. உண்மையிலை இது ஒரு முதியவர் இல்லம் எண்டதை நம்பவே முடியேலை..

சிசி : ஓம்..ஓம்.. அது, பாதர் சஞ்சுதன் இங்கை வந்தாப்பிறகு ஏற்படுத்தின மாற்றுருவாக்கம்.. (transformation) அவர் வரமுந்தி வந்து பாத்திருக்கவேணும். ஐயோ சகிக்கேலாது.

எட் : அப்பிடியே.. பாக்கவே தெரியுது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிசி : சுத்தம் சுகாதாரத்திலை.. துப்பரவிலை சரியான கட்டுப்பாடு.. இப்ப இங்கை அட்மிசன் எடுக்கிறதே குதிரைக் கொம்பு மாதிரி.. ஆக்கள் கூடினால் தரத்தைப் பேணுறது கஷ்டம் எண்டது அவற்றை பொலிசி. (Policy)

எட் : அவற்றை பொலிசிதான் சரி.. செய்வன திருந்தச் செய்.. இந்த இடம் எனக்கு ரொம்பவும் பிடிச்சிருக்குது..

சிசி : ஓம்..ஓம்.. இந்த சுற்றுச் சூழல் மட்டும் இல்லை.. இஞ்சை இருக்கிறவையின்ரை ஒழுக்கம், சுத்தம், உணவு மற்றது சுகாதாரத்திலையும் அவர் சரியான கவனம்..

எட் : ஆ.. அப்பிடியே.. முதலிலை அதிலை கவனம் எடுத்தால் பிறகு பொறுப்புகள் தானாயே வரும்.

சிசி : அது மட்டுமில்லை இங்கை இருக்கிற இயலக் கூடிய (ஏலக்கூடியவைக்கு) முதியவர்களுக்கு அவை அவையின்ரை நிலைமைக்கேற்ப வேலையைப் பகிர்ந்து கொடுத்ததாலை தங்கடை சுத்தத்தையும் தாங்கள் இருக்கிற சூழலையும் பேண முடியுது. மற்றவைக்கு உதவுற தன்மை, குழுமுயற்சி அதுகளுக்கும் தூண்டுகோலாயிருக்குது.

எட் : ம்.. எந்தவொரு அலுவல் எண்டாலும்.. அதின்ரை உரிமையை உரியவர்களிடத்தையே கொடுத்தால் அது நிரந்தரமாகச் சிறந்த முறையிலை பேணப்படும் எண்டு சொல்லுறதைக்.. கண்கூடாகப் பார்க்க முடியுது..

சிசி : அது மட்டுமே.. அங்கை பாருங்கோ.. அதிலை பந்தல் போட்ட மாதிரித் தெரியுது.. அதுதான் தோட்டம்.. அதிலை வாறதை இங்கை இல்லத்தின்ரை தேவையளுக்கு எடுத்து மேலதிகமானதை விற்று வாற வருமானத்தை அவையின்ரை வங்கிக் கணக்கிலை போடுறார் எண்டால் பாருங்கோவன்..

எட் : ம்..எல்லாம் அக்குவேறை ஆணி வேறையாத் தெரிஞ்சு வைச்சிருக்கிறியள் போலை..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிசி : ஓம். ஓம்.. கிட்டத்தட்ட ஏழெட்டு வருசமாய்.. ஒவ்வொரு வருசமும் கிறிஸ்மஸ்ஸிலண்டு என்ன இருந்தாலும் எல்லாத்தையும் மறந்து இஞ்சை வந்து.. இங்கை இருக்கிற எல்டேர்ஸோடை (elders) செலவழிக்கிறதிலை ஆத்ம திருப்தியைக் காணுறன் எட்வேட்.

எட் : இங்கை வெளிக்கிடேக்கை.. முதியோர் இல்லத்திலை தான் நீர் கிறிஸ்மஸ்.. கொண்டாடுறது எண்டு சொல்லேக்கை சந்தோசப்பட்டன்.. ஆனால் இஞ்சைவந்து நேரிலை பார்த்தால் என்ரை மனசாட்சியே என்னை உறுத்துது. திருப்பிக் கேள்வி கேட்குது..

சிசி : ஏ.. ஏன் எட்வேட்.. ஏன் அப்பிடிச் சொல்லுறியள்.. நான் ஏதும் தவறாய்..

எட் : (இடைமறித்து) (தழுதழுத்து) இல்லை.. நான்.. நான்.. நான் தான் தவறு செய்திட்டன்.. ஓம் சிசிலியா நான் உம்மட்டைச் சொன்னனே.. தாத்தாவைப் பற்றி..

சிசி : ஓம்.. ஓம்.. இப்ப அதுக்கென்ன எட்வேட்

எட் : கையிலை இருந்ததையும் தவற விட்டிட்டு.. ஏதோ அம்மா சொன்ன மாதிரி சவரிமுத்தரோடை போட்டாரெண்டு.. தேடுறதிலை அக்கறை காட்டாமல் இருக்கேக்கை.. நீ.. நீர்.. இவ்வளவு தூரத்திலை இருக்கிறவையைத் தேடி வந்து.. வருசம் தவறாமல் அவையளோடை மனசாலை கிறிஸ்மஸ்ஸைக் கொண்டாடிற அதேவேளை.. ஒரு உண்மையான கிறிஸ்தவனாய் நான் செய்யத் தவறினதை நினைச்சு.. என்ரை மனசு.. கூனிக் குறுகி நிக்குது...

சிசி : சீ..சீ.. இந்த சின்னவிசயத்தைப் பெரிசுபடுத்தி..

எட் : இல்லை சிசிலியா.. இப்ப மூண்டு நாலு வருசம்.. தாத்தா எங்கையோ.. என்ன செய்யிறாரோ.. எண்டு யோசிச்சமே.. சவரிமுத்தரோடை போட்டார் வருவர்.. வரட்டுமெண்டு இண்டைக்கு மட்டும் காத்திருக்கிறம்.. அந்த விசயத்திலை என்ரை தவறை உணருறன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிசி : அவர் இயலக் கூடியவர்.. சுயமாய் எல்லாம் செய்யக் கூடியவர்.. தெளிவான அறிவோடைதான் போனவர் எண்டனீங்கள்.. அதாலை நீங்கள் செய்ததிலை.. காத்திருக்கிறதிலை.. எந்தத் தவறும் இல்லை.. கவலைப் படாதையுங்கோ.. கர்த்தரின்ரை கிருபை இருந்தால் கூடிய சீக்கிரம் நல்ல செய்தி கிடைக்கும். அதையே நினைச்சுக் கொண்டிராமல் வாங்கோ வந்த அலுவலை முடிப்பம்..

எட் : ம்.. வாரும்..

சிசி : (காட்டி) ஆ.. இதுதான் கொஞ்சம் அக்ரிவ் (active) ஆன ஆக்கள் இருக்கிற இடம். பாதருக்கும் கையுதவி.. ஹெல்ப்பேர்ஸ் மாதிரி.. ஆ.. ஆனால்.. ஒருத்தரையும் காணேலை.. அங்கை தோட்டத்திலையும் காணேலை.. நான் நினைக்கிறன்.. கிறிஸ்மஸ் தானே அதை எல்லாரும் ஒண்டாய்க் கொண்டாட சிக் ஹோலுக்குப் (sick hall) போட்டினம் போலை.. வாருங்கோ அங்கை போவம்..

எட் : (சிரித்து) நீர் வருவீரெண்டு தான் போயிருக்கினமோ.. அது சரி..சிக் ஹோல் எண்டு சொல்லுறீர்..

சிசி : ம்.. சிக் ஹோல் எண்டு சொல்லுறது.. இயலாதவை இருக்கிற இடம்.. சிலர் படுத்த படுக்கைதான்.. நான் நினைக்கிறன்.. அங்கை ஒரு ஏழெட்டுபேர் வரையிலை இருக்கினம். ஹொஸ்பிற்றலிலை ICU மாதிரி எண்ணுங்கோவன். (அருளப்பு பாடத் தொடங்குதல்.. பாடல் பின்னணியில் ஒலிக்க இரண்டு காட்சிகளும் சமாந்தரமாக நிகழ வேண்டும் அதாவது எட்வேட் சிசிலியா உரையாடும் போது பின்னணியில் அருளப்பு பாடவேண்டும். பின்னணியில் மிக மெல்லிய குரலில் தூரத்தில் ஒலிக்க சிறிது சிறிதாக கூடி நிறுத்த வேண்டும்)

மெட்டு : *பொன்னொளிர் - நீலாம்பரி ராகத்தின் சாயலை அடிப்படையாகக் கொண்டது தாளம் : மிஸ்ரசாபு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரு : *பொன்னொளிர் பூரண விண்ணுறை*
*தேவனே போற்றி போற்றி - மிகு*
*பூவும் பலபொருள் யாவும் படைத்தவா*
*போற்றி போற்றி..*
*பன்னரிதா நன்மை தன்னுரு வானவா*
*போற்றி போற்றி - உன்தன்*
*பாத சரோருக நீழல் தந்தாளுவாய்*
*போற்றி போற்றி..*
*எண்ணரும் ஆதியும் அனாதியுமானவா*
*போற்றி போற்றி - ஆறு*
*லட்சணத் ரீத்துவ ஏகபராபரா*
*போற்றி போற்றி..*
*மண்ணினிலே மனு வாகப் பிறந்தவா*
*போற்றி போற்றி*
*மாமரி மைந்தன் என வரு தேவனே*
*போற்றி போற்றி..*

*(தேவசகாயம்பிள்ளை)*

எட் : அப்ப.. கிறிஸ்மஸ்ஸை ஒண்டாய்க் கொண்டாட சிக் ஹோலுக்குப் போட்டினம் போலை எண்டு சொன்னீர்..

சிசி : ஓம் அதுக்கை இருக்கிறவை பொதுவாய் சுயமாய் எழும்பித் திரிய முடியாதவை.. மற்றவயின்ரை உதவி தேவைப் படுகின்றவை.. அதாலை தான் ஏதேன் கொண்டாட்டம் எண்டால் எல்லாரும் அங்கையே போய் ஒண்டுகூடி கொண்டாடிறது. அதுமட்டுமில்லை பெரிய ஸ்பேசும். (space)

எட் : அதுவும் ஒரு விதத்திலை பாக்கப் போனால் நல்லது தான்.

சிசி : ம் சிக் ஹோலிலை தான் எல்லாரும்.. அங்கை பாருங்கோ பெரியவற்றை.. அண்ணாவியாற்றை குரல்கேட்குது.. பாடுறார்.. கொஞ்சம் எட்டி அடி வைச்சு வாங்கோ.. (சிரித்தபடி) பிறகு தன்ரை பாட்டைக் கேக்கவரேலை எண்டு மூக்காலை அழுவர்.. கவலைப்படும் மனிசன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட் : ஓமோம்.. ஏதோ ஒரு கூத்துப் பாட்டுத்தான்.. அப்ப நீர் சொன்னது போலை ஆரோ அண்ணாவியார் தான் பாடுறார் எண்டு நினைக்கிறன். எங்கையோ கேட்ட குரல் போலையும் கிடக்குது.. எதுக்கும் போய்த் தான் பாப்பமே..

சிசி : இருக்கும்.. அந்தக் காலத்திலை பேமஸான மனிசனாம்.. இப்ப வயது போட்டுது தானே அதாலை கொஞ்சம் பிசகே தவிர.. பாடுவர் பெரியவர்..

எட் : என்ன பெயரெண்டு சொன்னனீர் சிசிலியா..

சிசி : எனக்கு அவற்றை பெயர் சரியாய்த் தெரியாது.. எல்லாத்துக்கும் முன்னுக்கு நிண்டு செய்யிறதாலையும் வயசெண்டதாலையும் பெரியவர் எண்டு தான் பொதுவாய்க் கூப்பிடுறது.. வாங்கோவன் போய் நேரையே கதைப்பமே..

எட் : இல்லை எங்கையோ கேட்ட குரலாயிருந்த படியாலை நாங்கள் ஸ்கூல் போற காலத்திலை.. தாத்தாவோடை கூத்தாடின ஆரேனுமோ எண்டு நினைச்சன்.. அவ்வளவுதான்..

சிசி : இருக்கலாம்.. எட்டி அடிவைச்சுப் போனமெண்டால்.. ஆர் எவரெண்டு நேரையே பார்க்கலாம்.. கதைச்சு கேட்டு அறியலாம்.. (சிரித்து) அதுமட்டமில்லை விரும்பினால் நீங்களும் ரெண்டு வரியை இழுத்துவிடலாம்..

எட் : (ஏளனமாக) ஐயோ உந்தத் தொழில் வேண்டாம். பிச்சை வேண்டாம் நாயைப் பிடி எண்டானாம்..

சிசி : (சிரித்து) இதுக்குப் போய் இவ்வளவு பயப்பிட்டால்.. சரி..சரி.. பயப்பிடாமல் வாங்கோ

(அருளப்புவின் பாடல் முடிய வேண்டும்)

எட் : ம்.. அந்தாள். பாடி முடிஞ்சுது போலை.. சத்தத்தைக் காணேலை..

சிசி : ஓம்..ஓம்.. (சிரித்து) இயற்கையை ரசிச்சு.. பெரியவற்றை கூத்துப்பாட்டை தவறவிட்டிட்டம்.. சரி..

எட் : இயலுமெண்டால் அவரோடை ஒருக்கால் கதைச்சுப் பாப்பம்..

சிசி : (ஆச்சரியத்துடன்) என்ன இயலுமெண்டால் எண்ணுறீர்.. அவரோடை மட்டுமில்லை.. ஏற்கெனவே சொன்னது போலை எல்லாரோடையும் கதைச்சுத்தான் நான் வருவன்.. அதிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமில்லை.. ற்..மஸ்ற் பி.. it must be .. உங்களாலை மனேஜ் பண்ணக் கஷ்டமாயிருந்தால் அந்த ஆல மரத்துக்குக் கீழை இருக்கிற சிமென்ற் பெஞ்சிலை இயற்கையை ரசிச்சுக் கொண்டு இருங்கோ..

எட் : நானும் உம்மோடை வாறன்.. இப்பவே ஆலமரத்துக்கும் அரசமரத்துக்கும் கீழை இருந்தால்.. (சிரித்து) அது.. இன்னுமொரு முப்பது முப்பத்தைஞ்சு வருசத்தாலை.. நிலைமையைப் பொறுத்து பாப்பமே..

சிசி : சும்மா எதுக்கும் பகிடி தான்.. அப்பிடிக் கனவிலையும் நினைக்க வேண்டாம்.

எட் : சரி அதை விடும்.. முதல்லை அந்தப் பெரியவரைப் பாப்பமே..

சிசி : ஆ.. அந்தா.. அங்கை பாருங்கோ.. அவர்தான்.. அவரே வாறார்.. அவருக்கு கொஞ்சம் தூரப் பார்வை குறைவு.. ஆனால் குரலிலை ஆக்களை அடையாயம் கண்டிடுவர்..

அரு : (இருமுதல்) (இதிலிருந்து எட்வேட்டின் வசனங்கள் பின்னணியில் தொடர வேண்டும் - தனக்குள்)

எட் : ஆ.. அவரைப் போலையும் இருக்குது..

சிசி : என்ன பெரியவர்.. பாட்டு முடிஞ்சுது போலை..

அரு : (வந்து கொண்டு) ஓம்..ஓம்.. ஆர்மோனை.. பிள்ளை சிசிலியா தானே.. தோத்திரம் கேட்டது தானே..

எட் : (தனக்குள்) ம்.. இது வந்து.. ம்.. அப்பிடி இருக்குமோ..

சிசி : ஓம்..ஓம்.. அண்ணாவியாற்றை ஸ்தோத்திரம் சுப்பறாய் இருந்தது.. இவரும் சொன்னார்..

அரு : அப்பிடியே பிள்ளை.. அந்தக் காலத்திலை பாடினது.. அது சரி.. இவரும் எண்ணுறியள்..

எட் : (தனக்குள்) நாலு வருசத்திலை வயோதிபம் வாட்டிப் போட்டுது போலை.. இ.. இது.. அவர்தான். ஆனால் இவளவு தூரத்துக்கு வந்ததெண்டால்..

அரு : இந்தக் கண்ணுக்கு வடிவாய்த் தெரியேலை.. ஆர்பிள்ளை.. உங்களோடை நிக்கிறது.. ஆர் அவரே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட் : (தனக்குள்) ம்.. அதே குரல்.. சரிதான்.. அவரைப் போலை தான் இருக்குது..

சிசி : ஓம் ஐயா.. ஓம் அது.. அது என்ரை மிஸ்ரர் தான்..

அரு : சந்தோசம் பிள்ளை.. என்ன.. அவர் வெக்கறை போலை கிடக்குது.. கதையைக் காணேலை

எட் : (தனக்குள்) ம்.. இப்பிடி மாறியிட்டாரோ..

சிசி : புது இடம்.. தெரியாத ஆக்களெல்லே பெரியவர்..

அரு : தம்பி.. அது.. நான் அருளப்பு.. பிள்ளைக்குத் தெரியும் இஞ்சை வந்து மூண்டு நாலு வருசமாகுது

எட் : (தனக்குள்) ம்.. அ.. அரு.. அருளப்பு.. அவரே தான்.. (அழுது) (வெளியே) அருளப்பு.. அருளப்பு.. அண்ணாவியார் அருளப்பு.. அரசடி அண்ணாவியார் அருளப்பு..

அரு : ஓ..ஓம்.. ஓம் மோனை.. கண்டு பிடிச்சிட்டாய்.. சரியாய்ச் சொன்னாய் தம்பி..

எட் : (விம்முதல்) தா.. தாத்.. தா.. தாத்..

சிசி : (பதிந்து) என்ன எட்வேட்.. ஏன்.. நீங்கள் சொன்ன தாத்தாவோடை கூத்திலை பாடின.. அப்பிடி எண்டால் இவரிட்டைக் கேட்டால் சிலவேளை அவரைப் பற்றி ஏதும் தகவல் கிடைக்கும்..

எட் : (அழுது) இல்லை சிசிலியா.. இவர்.. தாத்தாவோடை பாடினவரோ.. ஆடினவரோ இல்லை..வந்து..

சிசி : அப்பிடியெண்டால் எட்வேட்.. இப்ப.. இப்ப.. ஏன் அழுகிறீர்..

எட் : (அழுது) இவர் தாத்தாவே தான் சிசிலியா.. தாத்தாவே தான்.. எங்கடை தாத்தா..

சிசி : என்ன தாத்தாவோ..?

எட் : (அழுது) ஓம்.. ஓம்.. தாத்தாவே தான் சிசிலியா..

அரு : (தழுதழுத்து) என்ன.. தாத்தா எண்டால்.. அப்ப உது.. உது.. ஆர் தம்பி எட்வேட்டே..

எட் : (அழுது) ஓம்.. தாத்தா.. நான் எட்வேட் தான்..

அரு : என்ரை.. பேரன்.. என்ரை பேரன்.. எட்வேட்.. டொக்டர் எட்வேட்டே.. தம்பி.. என்ரை தங்கம்.. ராசா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட் : தாத்தா.. தாத்தா.. (பாசக் கொஞ்சல்கள்)

சிசி : (தழுதழுத்து) எட்வேட்.. பெரியவர்.. தாத்தா..

அரு : ஓம்.. ஓம்பிள்ளை. ஓம்.. இது என்ரை செல்லம்.. என்ரை தங்கம்.. எட்வேட்.. என்ரை பேரன்..

எட் : தாத்தா.. நா.. நாலு வருசமா.. இஞ்சை இருந்தும் ஒரு.. ஒரு தகவல் குடுத்திருக்கலாம் தானே..

அரு : அது.. அது வந்து.. அதடா மோனை.. இந்தத் தூரத்திலை இருந்து.. எனக்கு மறதிக்குணமுமடா..

எட் : நான் உங்களை யூகே யாலை வந்து எங்கை எல்லாம் தேடினது.. சவரிமுத்தரை விசாரிச்சது..

அரு : அப்பிடியேடா.. ஆர் மோனை.. ஆரது சவரிமுத்து..?

எட் : அதுதான் தாத்தா.. உங்களை இஞ்சை கூட்டிக் கொண்டு வந்தவர்..

அரு : (இடைமறித்து) என்னை இஞ்சை கூட்டிக் கொண்டு வந்தது.. எந்தச் சவரிமுத்தடா.. தம்பி..

சிசி : அவர் மறந்து போனார் போலை.. நாலு வருசமாகுதெல்லே. அவருக்கு மறதிக்குணம் வேறை.. சவரிமுத்தரை விடுங்கோ.. இப்ப தாத்தாவும் பேரனும் சந்திச்சிட்டியள் தானே.. பிறகென்ன

எட் : ஓம்.. ஓம்.. எது எப்பிடியோ.. தாத்தா.. ஓம்.. இந்தக் கிறிஸ்மஸ் தினத்திலை.. உங்களை

அரு : ஓமடா.. என்ரை செல்லத்தை.. என்ரை பேரனை.. இந்த கண்முட முந்திக் கண்டிட்டன்.. கர்த்தரின்ரை அழைப்புக்கு முன்னமே.. பாலன் பிறந்தநாளிலையே.. என்ரை பாலனைக் கண்டிட்டன்.. அதே போதும் பிள்ளை.. நான் குடுத்து வைச்சவன்.. குடுத்து வைச்சவன்..

சிசி : பாத்தியளே.. கர்த்தரின்ரை கிருபையைப் பார்த்தியளே.. பாலன் பிறந்தநாளிலையே.. உலக மானிடரை இரட்சிக்க உதித்த நாளிலையே.. நீங்கள் தேடின தாத்தாவைச் சந்திக்க வைச்சு..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட் : ஓம் சிசிலியா.. இப்பிடியொரு பெரிய பாக்கியத்தை ஆண்டவர் தந்திட்டார்.. என்ரை வேண்டுதலை ஏற்று நான் தேடினதைக் கர்த்தர் தந்திட்டார்..

அரு : ஓம் பிள்ளை உங்கள் மூலமாய் கர்த்தர் தந்திட்டார்..

எட் : ஓம்.. சிசிலியா இது எங்கடை குடும்பத்துக்குக் கிடைத்த பெருநாள் பரிசு.. கிறிஸ்மஸ் பரிசு..

சிசி : நாங்கள் எல்லோரும் சந்தோசமாயிருக்க.. இது.. பாலன்பிறந்த இந்தப் புண்ணிய தினத்திலை.. நாங்கள் செய்த பாவத்தைக் கழுவி.. பரிசுத்தராலை தரப்பட்ட பெருநாள் பரிசு..

(மணியோசை ஒலிக்கின்றது)

......... நிறைவு .........

**(இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையில் 25.12.2019 ல் ஒலிபரப்பாகியது)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. தூண்டில்



நாடக மாந்தர்கள் :

| | | |
|---|---|---|
| குமாரதேவன் | – | வைத்தியர், வீட்டுத்தலைவன் |
| குமுதா | – | குமாரதேவனின் மனைவி |
| பிரணவன் | – | குமாரதேவனின் மகன் |
| திருக்குமரன் | – | திருடன் |
| சாமித்தம்பி | – | வைத்தியசாலைக் காவலாளி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. தூண்டில்

காட்சி : 1

மாந்தர்கள் : **வைத்தியர் குமாரதேவன், குமுதா, திருடன் திருக்குமரன், பிரணவன்**

களம் : **வைத்தியர் குமாரதேவன் வீடு - வைத்தியர் வைத்தியசாலைக்குச் செல்கிறார். அப்போது இனம் தெரியாத ஒருவர் வருகிறார்.**

வைத் : இஞ்சேரும் குமுதா இண்டைக்கு கொஞ்சம் லேற்றாய்த்தான் வருவன். பொறின் டெலிகேற்ஸ் (foreign deligates) வந்திருக்கினம் அவையளோடை டின்னர் ஒழுங்கு பண்ணியிருக்கு.. டின்னரும் முடிச்சுத்தான் வருவன்,

குமு : சரி அப்ப பிரணவனை ரியூசனிலை இருந்து கூப்பிடுறது..

வைத் : நான் காரிலை போறன். மோ பைக் நிக்குது தானே போய்க் கூட்டிவாரும்.

குமு : மழைக்குணமாய் இருக்குது.. சரி.. சரி.. நீங்கள் காரிலை போட்டு வாங்கோ.. நான் பிரணவனை ஏதோ ஒரு விதத்திலை பிக்கப் பண்ணுறனே..

பிர : (வந்து கொண்டு) அம்மா.. இண்டைக்கு ஸ்கூலிலை பேரண்ட்ஸ் மீற்றிங் இருக்குதெல்லே.. அப்ப.. அதுக்கும் அப்பா வரமாட்டாரே..

வைத் : இல்லையடா தம்பி பிரணவன்.. அப்பாவுக்கு முக்கியமான வேலை கிடக்குது.. இண்டைக்கு ஏலாதடா செல்லம். அடுத்த மீற்றிங்குக்கு தவறாமல் வருவன்.. சரிதானே..

பிர : (கவலையுடன்) உப்பிடி எத்தினை தரம் சொல்லியிருப்பியள். எண்டைக்கும் உப்பிடித்தான்.. இப்ப வருசமும் முடியப் போகுது.. ஒரு நாள் தன்னும் வந்திருப்பியளே.. எண்டைக்கும் பிசி.. கிளினிக் அல்லாட்டில் மீற்றிங். ஆஸ்பத்திரியிலைதான் பாசம். என்னிலை ஒரு கொஞ்சமும் இல்லை..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமு : அப்பிடிச் சொல்லாதை தம்பி.. நான் இருக்கிறன் தானே தம்பியின்ரை அலுவல் பாக்க.. அதுக்காகத்தானே நான் என்ரை ரீச்சிங் வேலையையும் விட்டிட்டு வீட்டோடையே இருக்கிறன்.

பிர : அம்மா..

குமு : பிள்ளைக்காகத்தானே அப்பா கஸ்டப்படுறார். நாலுபேருக்குத் தோல்வி போகாமல் நாங்களும் டொக்டர் எண்ட ஸ்ரேற்றசை மெயின்ரெயின் பண்ணத்தானே வேணும்..

பிர : இதைத்தானம்மா சாடிக்கேற்ற மாதிரி மூடி எண்ணுறது.. உங்களாலை தான் அப்பா இப்பிடி ஆனவர்.. அல்லாட்டில் அப்பாவாலைதான் நீங்கள் இப்பிடியோ.. ம்.. எல்லாம் கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

குமு : எப்பிடியெண்டாலும் சொல்லு.. உன்ரை அலுவல் என்ன எண்டாலும் செய்யாட்டில் என்னிலை பிழையைப் பிடி..

பிர : ம்.. எத்தினை தரம் கேட்டன் தியேட்டரிலை போய்ப் புதுப் படம் பாப்பமெண்டு.. கேட்டியளே.. அல்லாட்டில் கேட்டுதே.. சொல்லுங்கோ பாப்பம்..

குமு : (இழுத்து) அது.. அது.. வந்து.. போறதெண்டால் மூண்டு பேரும் போகவேணும். அப்பாவுக்கு நேரமில்லை.. அப்பாவுக்கு நேரம் கிடைக்கேக்கை அவருக்கு ரிக்கற் எடுக்க கியூவிலை நிக்க விருப்பமில்லை.. அப்பிடி எல்லாரும் போனாலும் இஞ்சை வீட்டை ஒருத்தருமில்லாமல் போறதெண்டால் அதுவும் பயம்..

பிர : அம்மா.. உதுகள் எல்லாத்தையும் பாக்கிறதெண்டா.. அலுவல் ஒருநாளும் சரி வராது.. ஒரு விசயத்துக்கு எண்டாலும்.. கொஞ்சம் தன்னும் றிஸ்க் எடுக்க வேணும்.. அப்பதான் என்னஎண்டாலும் நடக்கும்.

குமு : பிரணவா.. உதைத்தானடா.. இளங்கன்று பயமறியாதது எண்ணுறது.. பட்டால் தான் தெரியும்.. இது புதுஇடம்.. அதாலை பிரச்சனையளைச் சொன்னன்..

திரு : (வந்து கொண்டு) என்ன.. மகன் றிஸ்க் எடுக்கட்டாம்.. அம்மா புது இடமாம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிர : அது அங்கிள்.. புதுப்படம்.. தியேட்டரிலை பாப்பம் எண்டால்.. நூற்றெட்டுக் காரணம் சொல்லுறா.. அதுதான்.. வேறை ஒண்டுமில்லை..

திரு : அம்மா புது இடம் எண்டதாலை பயப்பிடுறா போலை இருக்குது தம்பி.. அதிலையும் நியாயமிருக்குது தானே..

குமு : பாத்தியே பிரணவன் நான் சொன்னன்.. அது சரி.. நீங்கள் யார்.. என்ன அலுவலாய் வந்தனிங்கள். எங்கடை கதையிலை.. அதைக் கேட்க மறந்திட்டம்..

திரு : (தடுமாறி) அ.. அது,, அது நான் அங்கை வைரவ கோயிலடி.. கிளாக்கர் பரமலிங்கத்தார் வீடு எங்கை எண்டு கேட்பமெண்டு சைக்கிளை நிப்பாட்டினன்.

பிர : (பெரியவை மாதிரி) எந்த வைரவ கோயிலடி அங்கிள்.. அம்பலத்தாடி வயிரவ கோயிலடியோ.. அல்லாட்டில் இந்த புலோக்காட்டு வைரவ கோயிலடியோ..

திரு : (தடுமாறுதல்) அது வந்து.. வந்து..

குமு : (ஏளனமாக) சொன்னாப் போலை.. இவர் இப்ப போகப் போறார்..

திரு : விடுங்கோ அம்மா.. இப்பத்தையப் பிள்ளையளைத் தெரியாதே.. நீங்களும் புதிசெண்ணுறியள்.. நான் வேறை ஆரிட்டையும் தருமலிங்கத்தார் வீட்டைக் கேக்கிறனே.. வாறன்.. (சைக்கிள் போகும் சத்தம்)

பிர : அம்மா உந்தாளிலை எனக்கொரு ஐமிச்சம்..

குமு : என்னடா..

பிர : வைரவகோவிலடி எண்டார்.

குமு : அதுக்கு.. என்னடா..

பிர : ஆனால் அம்பலத்தாடி வயிரவ கோயிலடியோ புலோக்காட்டு வயிரவ கோயிலடியோ எண்டால் தடுமாறுறார். அது மட்டும் இல்லை முதலிலை பரமலிங்கம் வீடெண்டார்.. பிறகு தருமலிங்கம் வீடெண்ணிறார்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழு : பெரிய கண்டு பிடிப்பு.. அதுகளை விட்டிட்டு போ.. போய் வெளிக்கிடு.. ஸ்கூலுக்கு லேற்றாயிடும். பிறகு பின்னேரம் பேரன்றஸ் மீற்றிங்கிலை பிள்ளை நெடுக லேற் எண்டு ரீச்சர் சொல்லுவா.. நிண்டு மினைக்கெடாமல் போ.. போய் கெதியெண்டு வெளிக்கிடு..

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 2**

**மாந்தர்கள் : வைத்தியர் குமாரதேவன், சாமித்தம்பி**

**களம் : வைத்தியர் குமாரதேவனின் வைத்தியசாலை வைத்தியரின் மோட்டார் சைக்கிலை யாரோ திருடிவிட்டனர்**

(மோட்டார் சைக்கிலை காணாததால் அனைவரும் பதற்றத்தில்)

வைத் : இதிலைதான் என்ரை மோட்டர் சைக்கிள் காலையிலை நிப்பாட்டிப் போட்டு கிளினிக்குக்குப் போனனான். இப்ப மகனை கூட்ட ஸ்கூலுக்குப் போவமெண்டால் விட்ட இடத்திலை காணேலை.. (யோசிச்சு) ம்.. இதிலைதான் நிப்பாட்டினனான். வடிவாய்த் தெரியும். (யோசிச்சு) ம் என்ன நடந்திருக்கும்.. (திரும்பி) நான் வரேக்கை காணேலையே சாமித்தம்பி.

சாமி : ஐயா.. நீங்கள் வரேக்கை சீ..சீ.. (CC) ஏதோ பைல் கொண்டு போய் எக்கவுண்டனிட்டைக் குடுக்கச் சொல்லி நான் போட்டன் ஆனால் திரும்பி வரேக்கை உதிலை பைக் நிண்டது கண்ட மாதித்தான் இருக்குது..

வைத் : (யோசினை) அப்ப.. என்ன.. நடந்திருக்கும்..

சாமி : திறப்பு சைக்கிளிலையே விட்டிட்டியளா அல்லது..

வைத் : இஞ்சைபார் திறப்பு கையிலை வைச்சிருக்கிறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமி : வடிவாய் யோசிச்சுப் பாருங்கோ.. திறப்பு கையிலை இருக்கு தெண்டால்.. மறந்து போய் வேறை எங்கையேன். மாறிக்கீறி விட்டியளோ தெரியாது.. அல்லாட்டில் வாறபோறவை தங்கடை வாகனம் நிப்பாட்ட வசதியாய் அங்காலை எங்கையேன் உருட்டிக்கிருட்டி விட்டினமோ தெரியாது. பொறுங்கோ அங்காலை கொஸ்பிற்றலின்ரை பின் பக்கத்திலை பாத்துக் கொண்டு வாறன்.

வைத் : (எரிச்சலுடன்) எந்தப்படுபாவி.. என்ன வேலை செய்தானோ.. ச்சீ..

சாமி : (வந்து கொண்டு) டொக்டர் ஐயா.. எல்லா இடத்தையும் வடிவாய்ப் பாத்தன். ஒரு இடமும் காணேலை.. நான் பாத்த மட்டிலை டொக்டர் ஐயாவின்ரை மோட்டச்சைக்கிள் இந்த ஆஸ்பத்திரி வளவுக்கை இல்லை எண்டுதான் சொல்ல வேணும்..

வைத் : கோபத்துடன்) அப்ப என்ன பறந்து போச்சுதெண்ணிறியே சாமித்தம்பி..

சாமி : எனக்கு என்ன ஐயா தெரியும்.. பாத்தன்.. காணேலை.. அதாலை ஆஸ்பத்திரி வளவுக்கை இல்லை எண்டன். என்னிலை ஏனய்யா கோவிக்கிறியள்.

வைத் : சிலவேளை காலையிலை எங்கையேன்.. சீச்சீ... இதிலை தான் விட்டனான். ஆனால் திறப்பு என்னட்டை இருக்கேக்கை என்ன நடந்திருக்கும்

சாமி : இப்ப எல்லாம் கள்ளத்திறப்பு போட்டே கள்ளர் திறந்திடு வாங்கள்.

வைத் : அப்ப கள்ளன் கொண்டு போட்டான் எண்டே முடிவெடுத் திட்டியே நீ..

சாமி : இல்லை ஐயா ஊருலகத்திலை நடக்கிறதைச் சொன்னன்..

வைத் : (கோபத்துடன்) சீ.. இந்த நேரமெண்டு பாத்து.. இஞ்சை மோட்ட பைக்கை காணேலை.. அங்கை பிரணவன் பாத்துக் கொண்டு நிக்கப் போறான். எல்லாரும் போனாப்பிறகு பிள்ளை தனிய நிண்டு அழுவான். அது வேறை..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமி : சொல்லிறன் எண்டு கோபிக்காதையுங்கோ.. மோட்டச் சைக்கில் ஆஸ்பத்திரி வளவுக்கையே காணேலை.. ம். பிள்ளையையும் கூட்ட வேணும் எண்டால்.. இரண்டும் ஒண்டாய்ச் செய்யிறதுக்குப் பிந்திப்போகும்..

வைத் : உண்மை தான். அது தான் யோசிக்கிறன்.

சாமி : அம்மாவுக்கு ரெலிபோன் பண்ணிச் சொல்லுங்கோ.. காரிலை தன்னும் போய்க் கூட்டி வருவா.. ஒரு பிரச்சினை தீரும்.. ஆறுதலாய் சைக்கிளைத் தேடலாம்.

வைத் : ஓம் அதுவும் சரிதான். நான் வீட்டுக்குக் கதைக்கிறன். ஒருக்கால் அங்காலை இஞ்சாலை வடிவாய்ப் பார்.

சாமி : (போய்க்கொண்டு) சரி ஐயா..

வைத் : (தொலைபேசியில் கதைத்தல்) ஹலோ.. ஹலோ.. ஆர் குமுதாவே.. (தடுமாறி) இஞ்சை ஹொஸ்பிற்றலிலை ஒரு சின்னப் பிரச்சினை..

குமு : (பதகளித்து) என்ன.. பிரச்சனையோ.. கடவுளே.. ஆ.. சொல்லுங்கோ.. என்ன பிரச்சினையோ..?.. ஆரோடை.. என்னது.. பெரிய பிரச்சனையே..?

வைத் : (தடுமாறி) அது. அது வந்து பெரிசாய் ஒண்டும் இல்லை.. ஆனால் நான் இஞ்சை ஹொஸ்பிற்றலிலை நிக்க வேணும்.. அதுதான்..

குமு : உங்கடை குரலும் ஒரு மாதிரி இருக்கு.. என்னண்டு தான் சொல்லுங்கோவன்..

வைத் : நான் நைற் வந்து ஆறுதலாய்ச் சொல்லுறனே.. இப்ப தம்பியை ஒருக்கப் போய் கூட்டிவரவேணும்.. அதுதான்..

குமு : சரி.. சரி.. அது நான்போய்க் கூட்டிவாறன்.. நீங்கள் பதட்டப் படாமல் நிதானமாய் உங்கத்தைய அலுவலைப் பாருங்கோ..

வைத் : (ரெலிபோன் வைக்கும் சத்தம்) அப்பாடா ஒரு அலுவல் முடிஞ்சுது..

சாமி : (வந்துகொண்டு) ஐயா நான் எல்லா இடமும் வடிவாய்ப் பாத்திட்டன்.. விசாரிச்சனான். ஒரு இடத்திலையும் காணேலை.. இஞ்சை ஆஸ்பத்திரி வளவுக்கை ஐயாவின்ரை சைக்கிள் இல்லை எண்டு தான் சொல்லவேணும்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத் : அப்ப வேறை என்ன..! ஆரோ கொண்டு போய்த் தான் போட்டாங்கள்.. நீ சொன்ன மாதிரிக் கள்ளத்திறப்பையோ கிறப்பையோ போட்டுத் திறந்து கொண்டு போட்டாங்கள்.. கடவுளே.. போச்சுது.. போ.. எவன் பாவியோ கொண்டு துலைஞ்சிட்டான்..

......... காட்சி மாற்றம் .........

காட்சி : 3

மாந்தர்கள் : **வைத்தியர் குமாரதேவன், குமுதா, பிரணவன்**

களம் : **வைத்தியர் குமாரதேவனின் வீடு வைத்தியரின் மோட்டார்சைக்கில் களவுபோன கவலையில்.**

குமு : இஞ்சேருங்கோ.. என்னப்பா.. எந்த உலகத்திலை இருக்கிறியள்.. அதையே யோசிச்சுக் கொண்டிருந்தால்.. ஏதோ அவையவைக்குக் குடுக்குமதியாக்கும்.. போய்ச் சேர்ந்திட்டுது.. அள்ளிக்கொண்டு போட்டாங்கள்..

வைத் : வழமையாய் வைக்கிற இடத்திலை.. வழமை மாதிரி வைச்சிட்டுப் போனன். கொஞ்சம் பேசன்ற்ஸ் கூடத்தான்.. ம்.. வந்து பாத்தால்.. ஆண்டவனே..

குமு : அங்காலை இஞ்சாலை வடிவாய்த் தேடிப்பாத்தனீங்கள் தானே..?

வைத் : ம்.. நான்மாறி.. அந்தாள்.. சாமித்தம்பி மாறி.. தேடாத இடமில்லை.. ஆரோ கண்வைச்சான்.. கொண்டு போட்டான்.. அதுவும் கள்ளத்திறப்பாலை திறந்து.. தன்ரை சைக்கிளைக் கொண்டு போறமாதிரிக் கொண்டு போயிருக்கிறான் எண்டால் பாருமன்.. திட்டம் போட்டு என்ரை மோபைக்கை எடுக்க வேணும் எண்டு எடுத்திருக்கிறான்.. எந்த பாவியோ..

குமு : பொருள் எடுத்தவனுக்கு ஒரு பாவமாம்.. ஆனால் குடுத்தவனுக்கு ஆயிரம் பாவம் எண்டு சொல்லுவினம். அதைமாதிரித்தான் உங்கடை கதையும் கிடக்குது.. அவன் என்ன உங்கடை சைக்கிலை எண்டு தேடி வந்திருப்பானெண்டு நினைக்கிறியளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத் : அப்ப..

குமு : வைச்சிருந்த திறப்பாலை நிண்ட சைக்கிள்களைத் திறப்பம்.. திறபடுறதைக் கொண்டு போவம் எண்டு வந்திருப்பான்.. உங்கடை சைக்கிள் திறபட்டுது.. கொண்டு போனான். (மகன் உள்ளுக்குள் இருமுதல்)

வைத் : ஓம்.. குமுதா அதுவும் சரிபோலை தான் தெரியுது. இந்தக் கள்ளக் கூட்டம் இதுக் கெண்டே திரியிறவங்கள் போலை..

பிர : (பாடிக்கொண்டு வந்து) திட்டம் போட்டுத் திருடிற கூட்டம்.. திருடிக் கொண்டே இருக்குது.. அதைச் சட்டம் போட்டுப் பிடிக்கிற கூட்டம் பிடிச்சுக்கொண்டு இருக்குது.. திருடனாய்ப் பாத்துத் திருந்தா விட்டால் திருட்டையும் தடுக்க முடியாது.

குமு : (உறுக்கி) தம்பீ..

பிர : அம்மா அவங்கள் உதுக்கெண்டே இருக்கிறவங்கள்.. அது தான் புறவெசனல் (professional) திருடர் எண்டு சொல்லுங்கோ.. வடிவாய் பிளான் பண்ணி.. திறப்புக் கொண்டு வந்து.. தன்ரை பைக் மாதிரி..

குமு : தம்பி உனக்கடா.. எதுக்கும் விளையாட்டுத் தான்..

வைத் : பூனைக்கு விளையாட்டு.. சுண்டெலிக்குச் சீவன் போகுதாம் எண்டமாதிரி.. எனக்கு மோபைக்போட்டுதே எண்டு கவலை.. அவருக்கு அவங்கள் புறவெசனல் (professional) திருடராம்..

பிர : உடைக்காமல் கொள்ளாமல் திறப்பாலை திறந்து கொண்டு போட்டான் எண்டியள். அதாலை சொன்னன். இப்ப வாகனங்கள் எடுக்கச்சரி.. வீடுகளுக்கை புகுந்து கொள்ளை யடிக்கேக்கை சரி தங்கடை சொந்தம் போலை.. திறப்பாலை திறந்து கொண்டு போய்த்தான் எல்லாம் நடக்குது.

குமு : (எரிச்சலுடன்) சரி சும்மாயிரு தம்பி.. அவனிலை ஏன் பாயிறியள். அவனை விடுங்கோ.. அவன் சின்னப்பிள்ளை..

வைத் : உண்மைதான். ஆரிலை நொந்தென்ன.. என்ரைகாலம். இனியென்ன போனது போனது தான். இனித் திருப்பி வரப் போகுதே.. (பல்லி சொல்லுதல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிர : அம்மா.. உச்சத்திலை பல்லி சொன்னால் அச்சமில்லை எண்டு பெத்தப்பா நெடுகச் சொல்லுவார்.. பாருங்கோ உச்சத்திலை பல்லி சொல்லுது. அச்சமில்லாமல் இருங்கோ.. துலைஞ்ச பொருள் கிடைக்கும்.

குமு : சரி உன்ரை வாய்தான் பொன்வாயாய் இருக்கட்டுமே.. இருந்து பாப்பம்..

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 4**

**மாந்தர்கள் : வைத்தியர் குமாரதேவன், சாமித்தம்பி, திருக்குமரன்**

**களம் : வைத்தியர் குமாரதேவனின் வைத்தியசாலை வைத்தியரின் களவுபோன மோட்டார்சைக்கில் திரும்பக் கிடைத்தல்.**

சாமி : (யோசினை) என்ன.. டொக்டர் நேற்றுக் காலையிலை மோட்டசயிக்கில் வழமையாய் விடுறமாதிரி இதிலைதான் விட்டனான் காணேலை எண்டார்.. இப்ப அதே இடத்திலை சைக்கிள் நிக்குது.. கிடைச்சதுபற்றி எனக்கு ஒரு சொல்லுச் சொல்லேலையே.. (பெருமூச்சு விட்டு) காணாட்டில்.. அங்கை தேடு.. இஞ்சை தேடெண்டு அலைக்கழிப்பினம்.. கிடைச்சால் கிடைச்செண்டு சொல்ல நினைக்காயினம்.. அதுதான் பெரிய்ய்ய குணம்..ம்..

வைத் : என்ன சாமித்தம்பி.. உங்களுக்குள்ளையே கதைச்சுக் கொண்டு.. நான் ஒருக்கால் பொலிசுக்குப் போட்டுவாறன். ஆரேன் பேசன்ற்ஸ் (patient) வந்தால் ஒரு அரை மணித்தியாலம் பொறுக்கச் சொல்லுங்கோ..

சாமி : பொலிசுக்கோ.. என்ன டொக்டர்.. ஏன் என்ன விசயம்..

வைத் : என்ன தெரியாத மாதிரி.. அதுதான் மோட்டபைக் காணாமல் போனதுக்கு என்ட்ரி போடத்தானே வேணும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமி : (ஆச்சரியத்துடன்) என்ன.. மோட்டபைக் காணாமல் போனதுக்கு பொலிசிலை என்றியோ..

வைத் : போடத்தானே வேணும்..

சாமி : (தயங்கி) இல்லை டொக்டர்.. நான் தேத்தண்ணி குடிச்சிட்டு வரேக்கை.. அங்கை மோட்டபைக் பார்க்கிலை நிண்டது மாதிரிக் கிடந்தது.. கண்டனான்..

வைத் : (ஆச்சரியத்துடன்) என்ன.. பார்க்கிலை.. என்ரை மோட்ட பைக்கோ..?

சாமி : ஓம் டொக்டர்.. இப்பதான் கண்டனான்.. ஏன் உங்களுக்குத் தெரியாதே.. நான் நீங்கள் விட்டதாக்கும் எண்டு எனக்குள்ளை நினைச்சன்.

வைத் : அப்பிடிக் கிடைச்சிருந்தால் உங்களுக்குச் சொல்லாமல் விட்டிருப்பனே.. சரி வாங்கோ பாப்பம்.. (போய்க் கொண்டு) ம். அது எப்பிடி.. நேற்று இல்லாததது..

சாமி : (காட்டி) அதுதானே டொக்டர்.. அங்கை பாருங்கோ.. அங்கை.. அங்கை நிக்குது..

வைத் : ஓம்.. ஓம்.. என்ரையே தான்.. என்ரை பைக் தான்.. என்ரை பைக்.. கடவுளே.. என்ன கலக்குக் கலக்கிப் போட்டாய்.. சாமி பாத்தியளே நான் சொன்னன்.

வைத் : என்னாலையே நம்பமுடியேலை.. அப்பிடியே.. எடுத்தவனட நான் விட்ட இடத்திலை கொண்டந்து விட்டிட்டுப் போயிருக்கிறான். ஆரோ புண்ணியவான்..

சாமி : ஏதோ நீங்கள் கையெடுத்துக் கும்பிடுற வைரவர் காட்டியிருக்குது. அதுதான் கொண்டந்து விட்டிருக்கிறான்..

வைத் : அம்பலத்தாடியான் லேசுப்பட்டவரில்லை.. ஓம்..

சாமி : வைச்சிட்டுப் போட்டானோ.. அல்லாட்டில் தன்ரை தானே எண்டு கொண்டந்து விட்டிட்டு.. ஏதும் அலுவலுக்குப் போட்டானோ.. கொஞ்ச நேரம் இதிலை நிண்டு பாத்தால் தெரியும் தானே. ஆர் வந்தெடுக்கிறதெண்டு..

வைத் : அப்பிடியிருக்காது.. எடுக்கேக்கை களவு எண்டு தெரியும். பிறகும் துணிவாய் இஞ்சையே கொண்டந்து விடுறதெண்டால்.. அதுவும் அதே இடத்திலை..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமி : அதுவும் சரிதான். இதென்ன கடிதம் கரியரிலை.. டொக்டரின்ரையோ அல்லாட்டில்..

வைத் : எனக்கென்ன பைத்தியமே.. கடிதத்தை கரியரிலை வைக்க.. அதை எடுத்துத்தா என்னண்டு பாப்பம்.. ம்.. என்ரை கடிதமில்லை.. எடுத்தவன் தான் மறந்து போய்விட்டானோ தெரியாது.. உடைச்சுப் பாத்தால் சிலவேளை ஆரெண்டு பிடிக்கலாம்.. எடு..

சாமி : இந்தாங்கோ..

வைத் : ம்.. டொக்டருக்கு.. எட கவரிலையே அட்ரசும் போட்டிருக்கிறான். எனக்குத் தான்.. என்னண்டு பாப்பம்.. (கிழித்தல்).. ம்.. அன்புக்கும் மதிப்புக்கும் உரிய.

திரு : வைத்தியர் ஐயா அவர்கட்கு.. நடந்த சம்பவத்திற்கு முதலில் மன்னிப்புக் கேட்பதோடு அந்த அவசரமான நிலைமையிலை தங்களின் மோட்டபைக்கில் உதவியுடன் எனது மனைவியை சரியான தருணத்தில் பிரசவ வைத்தியசாலையில் சேர்த்த படியால் மனைவிக்கு சுகப்பிரசவம். உங்களை கடவுளாகவே பார்க்கிறேன். உங்கள் மோட்டபைக் அதனிலும் மேல்.. அதிர்ஸ்டமான சைக்கில்.. எனது முதற் பையனைச் சுமந்து சென்ற பெருமை..

வைத் : பாத்தியளே சாமித்தம்பி..

சாமி : ம்..ம்..

திரு : மீண்டும் நடந்த தவறுக்கு மன்னிப்புக் கேட்பதோடு.. செய்த தவறுக்கு சிறு பிராயச்சித்தம்.. நாளை திரைக்கு வரும் சுப்பர் திலகத்தின் படத்திற்கு ஞாயிற்றுக்கிழமை மாலை ஆறு மணிக் காட்சிக்கான மூன்று பல்கனி பதிவு செய்யப்பட்ட ரிக்கற்றுகளும் இத்துடன் உள்ளது. என்னை மன்னித்து எனது அன்பு வேண்டுகோளை நிறைவேற்றினாலே எனக்கு பாவ மன்னிப்பாக அமையும் என அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். நன்றி

வைத் : (சிரித்துக் கொண்டு) பாத்தியளே சாமித்தம்பி.. ஏதோ அவசரத்துக்கு எடுத்திருக்கிறான். ஹொஸ்பிற்றலாலை வந்து திருப்பி அப்பிடியே கொண்டந்து விட்டிருக்கிறான்.. அத்தோடை மூண்டு ரிக்கற் வேறை..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமி : (தனக்குள்) சரியாய் மூண்டு.. ஐயாவுக்கு.. அம்மாவுக்கு.. மகனுக்கு.. என்னைத் தெரியாது போலை

வைத் : என்ன சாமித்தம்பி..

சாமி : (தடுதாளித்து) இல்லை.. அது சரி.. ஆனால்.. எனக் கெண்டால் ஏதோ ஒரு மாதிரிக்கிடக்கு.. சைக்கிளைத் திறந்து.. அது தான் தன்ரை சொந்த சைக்கிள் மாதிரி மற்றவையின்ரை கண்ணிலை படாமல் எடுத்து.. பிறகு கொண்டு வந்து விட்டு.. மற்றது திறப்பு.. சரியாய் மூண்டு ரிக்கற்..

வைத் : சரி ஆனால் பைக் கிடைச்சிட்டுதே.. அதுவே போதும்.. நன்றியுள்ளவன்.. ரிக்கற்வேறை.. பைக் கிடைச்சிட்டு தெண்டால் குமுதா எவளவு சந்தோசப்படுவா.. ரிக்கற் றிசேவ் பண்ணின தெண்டால் பிரணவன் எவளவு சந்தோசப்படுவான். ம்.. திருடனிலும் இப்பிடியும் ஒரு திருடன்.

சாமி : ஆனால் திறந்து.. சைக்கிளை ஒரு விதமான அசுமாப்பும் இல்லாமல் எடுத்தது மட்டுமில்லை கொண்டந்து விட்டிட்டும் போனான் எண்டால்.. திறப்பும் அவன்ரை கையிலை இப்ப இருக்கு.. சும்மாய் இல்லை டொக்டர்.. எதுக்கும் ஒரு தடவைக்கு இரண்டு தரம் யோசிக்க வேணும்..

வைத் : சரி..சரி.. அதைப் பிறகு ஆராய்ச்சி செய்வம்.. முதலிலை குமுதாவுக்குச் சொல்ல வேணும்.. ச் சீ.. மொபைல்போனை அங்கை மேசையிலையே விட்டிட்டு வந்திட்டன். போன் பண்ணிப் போட்டு திறப்பையும் எடுத்திட்டு வாறன்.

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 5**

**மாந்தர்கள் : வைத்தியர் குமாரதேவன், குமுதா, பிரணவன்**

**களம் : வைத்தியர் குமாரதேவனின் வீடு களவுபோன மோட்டார் சைக்கிள் திரும்ப கிடைத்தலும் சினிமாவுக்குப் போக ஆயத்தமாகுதலும்.**

பிர : பாத்தியளே நான் சொன்னது தப்பேலை. அப்பிடியே நடந்திருக்குது. உச்சத்துப் பல்லி சொல்லுதெண்டியள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சமில்லை.. போன பொருளைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் கிடைக்குமெண்டன். இண்டைக்கு அப்பிடியே கிடைச்சிட்டுதே.. போதாக்குறைக்கு மூண்டு ரிக்கற் வேறை.. ஆரோ அப்பாவைப் பற்றி நல்லாய்த் தெரிஞ்சவன் எண்ட படியாலை தான் மூண்டு ரிக்கற்றும் எடுத்து தந்திருக்கிறான்.

குமு : எனக்கெண்டால் பயமாய்க்கிடக்குது..

பிர : என்ன பேய்பிசாசு தூக்கிப் போட்டுக் கொண்டு வந்து வைச்சிட்டுது எண்டோ பயப்பிடுறியள் அம்மா..

வைத் : இஞ்சைபாரும்.. பாக்கிலை விட்டன். அவன் மனிசிக்காரியோடை ஹொஸ்பிற்றலுக்கு வந்திருக்கிறான். அவசரம். சீரியஸ். ஜீ.எச் (GH) உக்கு போகவேணும். நிண்டுது. எடுத்தான். அலுவல் முடிஞ்சுது. கொண்டந்து விட்டான்.. அதுக்கு ஏனப்பா பயப்பிடுறீர்.

குமு : சைக்கிள் கிடைச்சது சந்தோசம் தான்.. ஆனால்.. திறப்பு.. என்னண்டு திறந்தது.. படத்துக்கு ரிக்கற்.. யோசிக்கவேணும்.

வைத் : இஞ்சைபாரும் அவசரத்திலை ஏதோ மாதிரித் திறந்து போட்டான்.. ஆனால் அவன் நேர்மையானவன் எண்டபடியாலை தான் பயமில்லாமல் துணிஞ்சு அங்கையே கொண்டந்து விட்டிருக்கிறான்.

பிர : திறப்பைப் பிறகு பாருங்கோ.. சரி பிழையைப் பிறகு விவாதியுங்கோ.. இப்ப படத்துக்கு வெளிக்கிடுங்கோ.. பிறகு ரிக்கற் இருந்தும் சான்சை மிஸ்பண்ண வேண்டி வரும்..

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 6**

**மாந்தர்கள் : வைத்தியர் குமாரதேவன், குமுதா, பிரணவன்**

**களம் : வைத்தியர் குமாரதேவனின் வீடு படத்திற்குப் போய் வந்துள்ளார்கள். களவுபோய் விட்டது. வரும் போது வீடுலைற் போட்டிருக்கின்றது.**

(கார் நிற்பாட்டும் ஒலி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமு : என்ன.. படத்துக்குப் போகேக்கை லைற் எல்லாம் ஓவ் பண்ணிப் போட்டு, போட்டிக்கோ லைற் மட்டும் போட்டிட்டுப் போனனான். இப்ப குசினி லைற்.. ஹோல் லைற்.. சாமிஅறை லைற் எல்லாம் எரியுது.

பிர : ஓமம்மா.. என்ரை றூம் லைற்றும் எரியுது..

வைத் : சிலவேளை படத்துக்குப் போகேக்கை பவர்கட்டாய் இருந்திருக்கும். லைற் எரியேலைத் தானே எண்டு அவசரத்திலை கவனம் இல்லாமல் போயிருப்பம். கறண்ட் வந்த உடனை எல்லாம் எரியுது..

குமு : எனக்கெண்டால் போகேக்கை கறண்ட் இருந்தது ஞாபகம்.. தகப்பனும் மகனும் தான் ஓசி ரிக்கற் எண்டு கண்மண் தெரியாமல் ஓட வெளிக்கிட்டனீங்கள்.. நான் வடிவாய் யன்னல் பூட்டி சுவிச் ஓவ் பண்ணி வெளிக்கதவு பூட்டித் திறப்பெடுத்தனான். பேசுக்கை திறப்புக்கிடக்குது. எடு தம்பி..

வைத் : சரியம்மா.. யன்னல் எல்லாம் பூட்டித்தான் இருக்குது.. இந்தாங்கோ கதவுத்திறப்பு

குமு : (கதவு திறக்கும் பொழுது தானாகவே திறக்குது - பயத்துடன்) இஞ்சேரப்பா.. கதவு தானாயே திறக்குது.. திறந்தே கிடக்குது.. என்ன இது.. ஏதோ இஞ்சை வித்தியாசமாய் நடந்திருக்குது..

பிர : அப்பா.. கெதியாய் வாங்கோ.. பயமாய்க் கிடக்குது..

வைத் : இஞ்சை விடும்.. ம்.. எல்லாக் கதவுகளும் திறந்து தான் கிடக்குது.. ஆரோ.. ஆரோ.. ஏதோ நடந்து தான் கிடக்குது.. அலுமாரியைப் பாரும்.. தம்பி உன்ரை அறையையும் பார்..

குமு : இஞ்சேருங்கோ.. அலுமாரி திறந்து எல்லாம் எடுத்து வெளியிலை வைச்சுக்கிடக்கு.. ஐயோ ஆண்டவனே.. நகைப் பெட்டியைக் காணேலை.. காசுவைச்ச பேசையும் காணேலை.. (அழுதல்) கடவுளே.. போச்சு எல்லாம் போச்சு.. நகையும் போச்சு.. காசும் போச்சு.. ஆ.. நல்ல சீலையளும் போச்சு.. எல்லாம் போச்சு..

பிர : (உள்ளுக்கையிருந்து) அம்மா.. என்ரை லப்ரொப்பையும் ஸ்மாட் போனையும் காணேலை.. (அழுது கொண்டு வரல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா எல்லாம் போச்சு.. போன் கொண்டு வருவம் எண்டு எத்தினை தரம் கேட்டன் வேண்டாமெண்டியள்.. இப்ப போச்சு.. போ

குமு : எல்லாம் முடிஞ்சுது.. எல்லாம் கழுவித் துடைச்சாச்சுது.. கடவுளே.. கடவுளே.. என்ன சோதினை.. (அழுதல்) என்னப்பா ஒண்டும் பேசாமல் நிக்கிறியள்.

வைத் : ம்.. என்னத்தைப் பேச.. எல்லாம் முடிஞ்சுதே.. (பெருமூச்சு) எல்லாம் புரிஞ்சுது.. இனி என்னத்தைச் சொல்ல.. அவன் தூண்டிலில இறாலைப் போட்டு சுறாப் பிடிச்சிருக்கிறான்..

பிர : (அழுது) ஆரப்பா.. என்னப்பா சுறா.. ஆரப்பா இறால்..

வைத் : வேறை ஆர்.. எங்களுக்கு ரிக்கற் றிசேவ் பண்ணினவன் தான்.. மோட்டபைக் எடுத்துக் கொண்டு போய் திருப்பிக் கொண்டந்து வைச்சவன்தான். கணக்காய் மூண்டு ரிக்கற்றையும் எடுத்துத்தந்து.. நேரகாலம் தெரிஞ்சு எங்களை அனுப்பிப் போட்டு.. ஆறுதலாய். கலங்காமல் பயமில்லாமல் எல்லாத்தையும் சுத்தப்படுத்தியிருக்கிறான். அதுமட்டுமில்லை அதே மோட்ட பைக்கையும் எடுத்துக் கொண்டே போயிருக்கிறான். நான் அறிவு கெட்டனான்.

குமு : என்னப்பா.. கடவுளே..

வைத் : ம்.. அப்பவும் சாமித்தம்பி என்னவோ எண்டு சொன்னவர்.. நான்தான் சிந்திக்கேலை. வெளுத்தது எல்லாம் பால் எண்டு நம்பினம். ஆரிலையும் நொந்து பிரயோசனமில்லை. நான் தான் அறிவு கெட்டனான். அவன் தூண்டில் போட்டான்.. நான் அவன்போட்ட தூண்டிலிலை மாட்டுப்பட்டன். மாட்டுப்பட்டு எல்லாத்தையும் இழந்து நிக்கிறன். கடவுளே.. நான் ஆருக்கு என்ன கொடுமை செய்தன்.. ஏன் எனக்கு இந்தநிலை..

......... **நிறைவு** .........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. உயர்ந்தவர்கள்



நாடக மாந்தர்களும் வானொலியில் குரல்கொடுத்த கலைஞர்களும்.

| | | |
|---|---|---|
| சிவலிங்கம் | – | வீட்டுத்தலைவன் |
| | | லூக்கஸ் திருச்செல்வம் |
| யோகநாதன் | – | சிவலிங்கத்தின் அயலவர் |
| | | செல்லம் அம்பலவாணர் |
| ஜோதி | – | யோகநாதனின் மனைவி |
| | | A.M.C ஜெயஜோதி |
| வானொலி அறிவிப்பாளர் | – | ராதிகா வில்சன் |
| மயூரினி | – | குயிலகம் சிறுவர்காப்பகக் குழந்தை |
| | | கலாவர்ஷனி |
| வானொலிக்கான தயாரிப்பு | – | சிவராசா தக்கீசன் |

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தமிழ்ச்சேவையில் 01.01.2020 ல்
புதுவருட தின சிறப்பு நாடகமாக ஒலிபரப்பாகியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. உயர்ந்தவர்கள்

காட்சி : 1
மாந்தர்கள் : யோகநாதன், ஜோதி
களம் : புதுவருடப் பிறப்பு பட்டாசு வெடி வெடிக்கும் சத்தம். பின்னணியில் வானொலி நிகழ்ச்சி.

ஜோதி : (ஆடம்பரத்துடன்).. இஞ்சேருங்கோ.. இஞ்சை பாருங்கோவன்.. இதை ஒருக்காப் பாருங்கோவன்..

யோக : (வேண்டா வெறுப்பாக) என்ன ஜோதி.. என்னத்தையப்பா பார்க்கச் சொல்லுறாய்..

ஜோதி : மூத்தவனும் இளையவனும் தங்கடை ஸ்ரேற்றஸ் அப்டேற் பண்ணியிருக்கினம்.. அதுதான்.. புதுவருசத்துக்கு வாழ்த்து அனுப்பியிருக்கினம்.. இஞ்சை பாருங்கோ.. உங்களுக்கும் சேர்த்துத்தான்.. அப்பா எண்டும் போட்டு பெயரையும் வீரபுலவு யோகநாதன் எண்டு எழுப்பமாய்ப் போட்டிருக்கிறாங்கள்..

யோக : (ஏளனமாக) அட.. உதுக்கே இப்ப உந்தத் துள்ளுத் துள்ளுறாய் ஜோதி..

ஜோதி : இல்லாமலே.. பாருங்கோ.. அதுகள் நாடு விட்டு நாடு போனாலும், புதுவருசமெண்ட உடனை.. எல்லா வேலையளையும் விட்டிட்டு சரியாய்ப் பன்னிரெண்டு மணிக்கு அப்பா அம்மாவுக்கு மெசேஜ் போட்டிருக்குதுகள் எண்டால்.. சந்தோசமில்லாமலே..

யோக : (ஏளனமாக) பிறகென்ன காசில்லாத.. லேசான வேலை பாத்திட்டுதுகள் எண்டு சொல்லன்.. ம்.. (பெருமூச்சு விட்டு) இதோடை அவையின்ரை கடமை முடிஞ்சுது..

ஜோதி : (எரிச்சலுடன்) ஏனப்பா வருசம் பிறந்த காலையிலை பெருமூச்சு விடுறியள். உங்களுக்கு மற்றவை செய்யிறது என்னதான் பிடிக்கும்.. நீங்கள் எதிலை பிழை பிடிக்கேலை.. சொல்லுங்கோ பாப்பம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக : ம்..

ஜோதி : ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொரு சொத்தை சொல்லிக் கொண்டு.. ம்.. அதுகள் இதைத்தன்னும் போட்டுதுகளே எண்டு சந்தோசப் படுவம் எண்டில்லை.. காசில்லாத.. லேசான வேலை பாத்திட்டுதுகள் எண்டு ஏளனக் கதை போடுங்கோ.. காசோ.. காசில்லையோ.. அது வேறைகதை.. விடுங்கோ.. ஆனால்.. ஏதோ இருக்கிறதை பாவிச்சு அம்மா அப்பாவுக்கு வாழ்த்துப் போடவேணும் எண்டு நினைச்சு.. அக்கறையோடை சரியாய் வருசம் பிறக்கிற நேரம் போடுதுகளெண்டால் பாருங்கோவன்.. ஒரு மனச்சாட்சி இல்லாத பிறப்பப்பா நீங்கள்..

யோக : ம்.. நான் என்ன ..இல்லாததைச் சொல்லிப்போட்டன் எண்டே இப்ப கொக்கரிக்கிறாய்.. ஓ.. எல்லாம் ஒரு கடமைவேலை.. நாங்களும் வாழ்த்து அனுப்பினம் எண்ட பேருக்கு.. ஓ.. எண்ணிக்கைக்கு அனுப்பியிருக்கினமாக்கும். அதைச் சொன்னன்.. உதென்ன பெரியவேலையே.. இந்தாபார் ஒரு தகவலைக் குடுத்து இன்னார் இன்னாருக்கு இன்ன நேரம் அனுப்பு எண்டு கொம்பியூட்டரிலை போட்டு விட்டால் அது அவை இருக்கினமோ இல்லையோ அந்த நேரம் வரத் தானாய் அனுப்பும். அதுக்கு அனுப்புறவை அந்த நேரம் முழிச்சிருக்க வேணுமெண்ட அவசியமில்லை.. அதைச் சொன்னன்.. அதுக்குப்போய் நீ சன்னதமாடினால்..

ஜோதி : (பொய்க் கோபத்துடன்) நான் இஞ்சை சன்னதமாடேலை.. உங்களைத் தான் ஏளனம் பண்ண வேண்டாமெண்டன்.. (கவலையாக) அதுகள் அங்கை.. இந்தக்குளிருக்கை என்னபாடோ.. இரவு கிடந்த இடம் பகல் கிடவாமல்.. தங்கடை செலவுக்கு.. இஞ்சை அனுப்ப.. வீட்டுக்கடன் அது இதெண்டு.. அதுகளைச் சமாளிக்க இரவுபகல் பாராமல்.. ரெண்டு மூண்டு இடமெண்டு ஏதோ கிடைச்ச வேலையைச் செய்யிறதுகள்.. அந்தக் கஷ்டத்திலையும்.. வருசம்.. அம்மா அப்பா தனிய.. பாக்கட்டுமெண்டு பாசத்தோடை அனுப்பியிருக்குதுகள்.. அதைத்தன்னும் பாப்பம், சந்தோசப் படுவம் எண்டில்லை.. அதிலையும் பிழைபிடிச்சு குறைசொல்ல வேண்டாமெண்டு தான் சொன்னன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக : நானும் இல்லாததைச் சொன்னனே.. உள்ளதைத் தானே சொன்னன்.

ஜோதி : என்ன.. இல்லாததைச் சொன்னனோ எண்டு ஒரு மாதிரி இழுக்கிறியள்.. தாங்கள் விரும்பினதை, விரும்பினபடி பிரீயாய் இருக்கிறநேரம் அனுப்ப.. இஞ்சை அப்பா அம்மா பாக்கட்டுமெண்டு தானே அறாக்காசு குடுத்து ஸ்மாட்போனும் வாங்கி இன்ரநெற்றும் எடுத்துத் தந்திட்டுப் போனதுகள்..

யோக : சரியப்பா

ஜோதி : சும்மாயே அம்மா அப்பாவுக்கு வயசுபோன கண்பார்வை குறைஞ்ச நேரத்திலை எண்டு.. சுளையாய் ரெண்டு இலச்சம் வரை குடுத்தெல்லே ஏதோ விசேசமாய் வாங்கினதுகள்.. அதுவும் எங்கைபோனாலும் கையோடை கொண்டு திரியட்டும் எண்டு.. அதுகள் நிக்கேக்கை வாயைப்பொத்தி முப்பத்திரண்டு பல்லையும் காட்டிக் கொண்டு நிண்டிட்டு.. இப்ப என்னோடை வீரவசனம் பேசினால்.. அதுவும் வருசம் பிறந்த நேரத்திலை..

யோக : (சிறிது உறுக்கி) இஞ்சைபார் ஜோதி.. எங்களிலை உருகி வாங்கிப் போட்டிட்டுப் போனவை எண்டு மட்டும் நினையாதை.. ரோட்டு ரோட்டாய்க் கொட்டிக் கிடக்குது.. ஊருலகத்துக்குப் பயந்து வாங்கித்தந்தினம்.. ஏதோ நாங்களும் பாவிக்கிறம். அதை நான் இல்லையெண்டு சொல்லேலை.. ஆனால் தலையிலை வைச்சு ஆடவேண்டாம் எண்டு தான் சொல்லுறன்..

ஜோதி : (ஏளனமாக) சரி..சரி.. நான் தூக்கித் தலையிலை வைக்கேலை.. (சிரித்துக் கொண்டு) வீரபுலவு யோகராசா ஐயாவுக்கு ..இப்ப சந்தோசம் தானே..

யோக : இஞ்சைபார் ஜோதி ..ஏதோ அனுப்பினதுகள் தான்.. அதை இல்லையெண்ணேலை.. ஆனால் யோசிச்சுப் பார்.. அந்தக் காலத்திலை பிள்ளையள் பேரப்பிள்ளையள் எண்டு தாய் தேப்பன் வீட்டை வருசம் பெருநாளெண்டு போகேக்கை இருக்கிற சந்தோசம் இதிலை இருக்குதே சொல்லு பாப்பம்...

ஜோதி : ம்.. (பெருமூச்சு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக : படலையுக்கை அதுகளின்ரை குரலைக் கேக்கேக்கை இருக்கிற குதூகலம், படலையைத் திறந்து கொண்டு அதுகள் வர.. அதுகளைக் கண்டவுடனை கட்டிப்பிடிச்சு ஆசைதீரப் பாசத்தோடை பரிமாறுற கொஞ்சல்களும் அந்த நேரத்திலை குதூகலிக்கிற பிஞ்சு மொழிகளும்.. ம்.. ஒரு நிமிசத்திலை வீடே நிறைஞ்சிடும்..

ஜோதி : ஓமப்பா.. பிறகு.. சொல்லவே வேணும்.. கொண்டாட்டம் குசினிக்கும் பாய்ஞ்சிடும்.. அம்மம்மா என்ன பலகாரம் செய்து வைச்சிருக்கிறியள் எண்டு இறப்பு ஈறாய் ஆராய்ஞ்சு கண்டு பிடிச்சு கொட்டிச் சிந்தி அவை ருசிக்கிறதைப் பாத்தாலே பசி அடங்கிவிடும்..

யோக : பார்வையாலையும், மனசாலையும், உடம்பாலையும் தொட்டு பாசத்தை உணரேக்கை எவ்வளவு சுகமாய் இருக்கும்.. மனசும் நிறைஞ்சிடும்.. ஆ.. இருந்த வருத்தங்களும் இடம் தெரியாமல் போயிடும்... மருந்தே தேவையில்லை..

ஜோதி : என்ன செய்யிறது.. எண்டைக்கு எங்கடை சனத்துக்கு வெளிநாட்டு மோகம் வந்துதோ.. அண்டைக்கு துலைஞ்சுது எல்லாம்..

யோக : வெளிநாடில்லையப்பா.. இப்ப இஞ்சையும் உதுதான்.. சந்திக்குச் சந்தி பார்.. எல்லாம் காலத்தின்ரை கோலம்.. தொழினுட்ப வளர்ச்சியின்ரை மாயம்.. தொழினுட்பத்துக்கை துலைச்ச பெறுமதியான எங்கடை விழுமியங்கள்..

ஜோதி : அதெண்டா உண்மைதான்.. கதையோடை கதையாய்.. இஞ்சை பாருங்கோ.. உவர் கிணத்தடி கிருஷ்ணரும் மனிசியோடை இப்ப வயோதிபர் மடமாம்.. உந்தப் பெரிய வீடு அவைக்கு என்னத்துக்கெண்டு அவ மருமோள்காரி சொல்ல மகன்காரனும் அவவின்ரை சொல்லைக் கேட்டு வீட்டை ஏதோ ஒரு கொம்பனிக்கு லச்சக்கணக்கிலை வாடகைக்குக் குடுத்திட்டு தாய் தகப்பனை வயோதிபர் மடத்திலை விட்டிட்டுப் போட்டினமாம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக : கேள்விப்பட்டன்.. உதெல்லாம் அவையவையின்ரை கொடுப்பனவு.. உதுகளை நானும் நீங்களும் கதைச்சு மாத்தேலுமே. உதுதான்.. உந்த வெளிநாட்டு வாழ்க்கையாலை மனிதாபிமானம் செத்துப் போச்சுது எண்டு சொன்னதுக்கு இதுவும் ஒரு எடுத்துக் காட்டு.. ஆனால்.. நல்ல காலம் எங்கடை பிள்ளையளுக்கு அந்த எண்ணம் வரேலை.. இல்லாது விட்டால் இப்ப நாங்களும் வயோதிபசாலையோ அல்லது அநாதை மடமோதான்..

ஜோதி : இஞ்சை பாருங்கோ.. என்ரை பிள்ளையளை நான் அப்பிடி வளர்க்கேலை.. அதை நினைவிலை வைச்சிருங்கோ..

யோக : நான் அதை இல்லையெண்டு சொல்ல வரேலை.. உன்ரை வளர்ப்புத்தான் இண்டைக்கு அதுகளை நல்ல நிலையிலை வைச்சிருக்கிறது எண்டதையும் எங்களை இப்பிடியான மன நிம்மதியோடை சந்தோசமாய் இருக்கிறதும் உன்ரை வளர்ப்புத் தான். (சிரித்தபடி) ஜேசுநாதர் தன்ரை பிறப்போடை, அதுதான் தன்ரை வரவோடை இந்த உலகத்தை இருட்டிலை இருந்து வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார் எண்டால்.. என்ரை ஜோதி தன்ரை வரவோடை எங்கடை வீட்டிலையும் வெளிச்சத்தைக் கொண்டு வந்தவ எல்லே.. அதுக்கு மாற்றுக் கருத்துக்கு இடமில்லையப்பா.. இப்ப சரியே..

ஜோதி : என்ன அதை ஒரு இளக்காரமாய் சொல்லுறியள்.. ஓம் நான் வரேக்கை ஒரு கட்டிலும் சூட்கேசும் தான் உங்கடை சொத்து.. ஒரு இனசனமோ.. சிநேகிதமோ.. கூப்பிட்ட குரலுக்கு ஆருமில்லாமல் இருந்தனீங்கள்.. அதை மறந்து போடாதை யுங்கோ.. இப்ப என்ன குறை.. இரண்டு ஆம்பிளைப் பிள்ளையள்.. மூத்தவன் டொக்டர்.. மற்றவன் எஞ்சினியர்.. ரெண்டு பேரும் பெரிய இடத்திலை கலியாணம் செய்து.. வெளிநாட்டிலை வீடு வாசல் வாகனம் எண்டு பிள்ளை குட்டியளோடை நல்லாய் இருக்குதுகள்.. இதை விடவேறை என்ன வேணும்.. சொல்லுங்கோ பாப்பம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக : அதை மறுக்கிறனே.. ஆனால் அதாலைதான்.. அந்தப் பெருமையாலை தான் இஞ்சை அயலோடையும் எல்லாரோடையும் கொளுத்தாடு.. (சிரித்தபடி) நீ சொன்னியே.. நான் கூப்பிட்ட குரலுக்கு ஆருமில்லாமல் இருந்தனான் எண்டு.. உண்மை தான்.. அது இல்லாத்தன்மை (கவலையாக) ஆனால்.. எல்லாம் இருந்தும் இண்டைக்கும் கூப்பிட்ட குரலுக்கு ஆருமில்லாமல் தான் இருக்கிறம்.. அதை நினைக்கத்தான் கவலையாய் இருக்குது.. ஜோதி.. சொத்திருக்கலாம்.. சுகமிருக்கலாம்.. அதுகளை நாங்கள் இருக்கு மட்டும் அனுபவிக்கலாமே தவிர அதுகள் எங்களை ஆளக்கூடாது.. இஞ்சைபார் என்ன இருந்தாலும் இண்டைக்கு நானும் நீயும் தனிய.. பெத்ததுகளும் வெளிநாட்டிலை.. சொந்தங்களும் எங்கெங்கையோ.. அயல்வீடும்..

ஜோதி : (இடைமறித்து) விளங்குது.. எல்லாம் நல்லாய் விளங்குது.. கடைசியிலை எங்கை வரப்போறியள் எண்டு விளங்குது.. அந்தக் காலத்திலை ஆரோ இருந்தவராம்.. ஆ.. நாரதராம்.. அவருக்கு ஏதேன்.. ஒரு நாளைக்கு ஒரு கொழுவல் தன்னும் உருவாக்காமல் விட்டால்.. அவற்றை தலை வெடிச்சு சுக்கு நூறாகியிடுமாம்.. அதைப் போலை தான் உங்களுக்கும்.. ஒரு நாளுக்கு ஒரு தரம் எண்டாலும் உதைக் குத்திக் காட்டாமல் விட்டால் நிம்மதியாய்த் தூக்கம் வராதே..

யோக : சரி..சரி.. ஜோதி.. உன்ரை மனச்சாட்சியைத் தொட்டு நடந்ததை யோசிச்சுப்பார்.. அந்தச் சம்பவம் மட்டும் நடக்காமல் இருந்திருந்தால்.. அவர் சிவலிங்கமும் சிவராணியும் தன்னும் அல்லும் பகலும் வந்து சுகதுக்கம் விசாரிச்சுப் போகுங்கள்.. இப்பிடி அயலும் இல்லாமல் இருந்திருக்க வேண்டி வருமே.. அதை நாங்கள் தான் இல்லாமல் அறுத்துப் போட்டம்..

ஜோதி : என்ன உறவு முறிஞ்சு போயிடும் எண்டு யோசிக்கிறியளோ..

யோக : (மனதுக்குள்) நான் சிவலிங்கத்தாரோடை கதைச்சது என்னும் இவவின்ரை காதிலை விழேலைப் போலை..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோதி : ஆ..ஆ.. என்னப்பா.. ஆற்றை கதை ஆற்றை காதிலை விழேலை எண்ணுறியள்....

யோக : (தடுமாறி) இல்லை.. அது அந்தோனியார் கோயிலிலை ஞாயிற்றுக்கிழமை பாதரோடை கதைச்சதைச்சொன்னன்..

ஜோதி : அங்கை சேர்ச்சிலை எண்டால் கதைக்குக் குறைவில்லைத் தானே.. (சிறிது கோபமாக) அதுதானே பாத்தன்..

யோக : (பெருமூச்சு விட்டு) ம் யோகன்.. சகுனம் சரியில்லை.. இப்ப இது உனக்கு வேண்டாம்.. ஓம் நீ சிவலிங்கத்தாரிட்டை சரணாகதி அடைஞ்ச கதையைக் கேள்விப்பட்டால்.. எல்லாம் சுக்கு நூறாகி விடும்... ஓம்..ஓம்.. ஜோதிக்குச் சொன்னாத் தான் பிரச்சனை.. சரி என்னநடந்தது எண்டு உங்களுக்குச் சொல்லுறனே..

......... காட்சி மாற்றம் .........

**காட்சி : 2**

**மாந்தர்கள் : யோகநாதன், சிவலிங்கம்**

**களம் : இருவரும் வழிபாட்டுக்குச் சென்று வருகின்றார்கள்.**

யோக : (கார் வரும் சத்தம்..காரை மறித்து) (குழைந்து) தம்பி சிவலிங்கம்.. என்ன கோயிலாலை வீட்டுக்குப் போறியள் போலை..

சிவ : (கோபத்துடன்) ஏன் மிஸ்ரர் யோகநாதன்.. நான் இதாலை போகிறதாலை உங்களுக்கு ஏதும் இடைஞ்சலோ.. என்ரை பயணத்தைப் பற்றி பெரிசாய்க் கேக்கிறியள்..

யோக : (குழைந்து) சீச்சீ.. அப்பிடி ஒண்டும் இல்லை.. நானும் வீட்டை தான் போறன்.. அதே பாதை தானே.. காரிலை தான் போறன்.. தனியத்தான் போறன். அதுதான் ஒண்டாய்க் காரிலையே போவமே.. எண்டு கேட்டன்..

சிவ : (கோபத்துடன்) ஏனய்யா வீண் பிரச்சனையை.. வந்த எனக்குப் போகத் தெரியும் தானே.. நான் போறன்.. நான் மற்றவைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைஞ்சல் குடுக்காமலிருக்கத் தான் விரும்புறன். இருக்க முயற்சி செய்யிறன்.. வீணாய் எவரிட்டையும் கடமைப்பட விரும்பேலை.. போதும் ஐயா.. கேட்டதே போதும். பிறகும் தடியைக் குடுத்து அடிவாங்க விரும்பேலை.. நீங்கள் போட்டு வாங்கோ.. நான் என்ரை வழியிலை வாறன்..

யோக : அண்டைக்கு நடந்ததை மனதிலை வைச்சுக் கொண்டு கதைக்கிறியள் போலை.. நானும் அப்பிடித் தான் இயண்டளவுக்கு மற்றவைக்கு இடைஞ்சல் குடுக்காமல் இருக்கத் தான் விரும்புறனான். என்னசெய்யிறது. என்னையும் மீறி சிலவேளை சில நடக்கக் கூடாத சம்பவங்கள் நடந்திடுது.. ம்.. ஜோதி பிழை விட்டிட்டா..

சிவ : ஒரு தடவை பட்டு அனுபவிச்சதன் பிறகும்.. நெருப்பு எண்டால் அது சுடும் எண்டு தெரிஞ்சும்.. பிறகும் அதுக்கை கைவைக்க வேணுமே..

யோக : பிறகும் பிறகும் அதையே மனதிலை வைச்சுக் கொண்டு ஒவ்வொண்டைச் சொல்லுறதை விட்டிட்டு.. அதை விடுங்கோ.. ஏதோ நடக்கக் கூடாதது நடந்திட்டுது.. அதை மறந்து.. மன்னிச்சுக் கொண்டு.. ஏறுங்கோ தம்பி காரிலை.. மனம்விட்டு ஆறுதலாய்க் கதைச்சுக் கொண்டு போவம்..

சிவ : அதுவும் சரி தான்.. ஏன் நடுறோட்டிலை நிண்டு வீண் கதையை வளர்ப்பான்.. சரி வாறன்..

யோக : (காரின் கதவைத் திறந்து விடுதல். கார் ஸ்ராட்ஆகி பயணித்தல்). நன்றி தம்பி சிவலிங்கம்.. உண்மையிலையே அண்டைக்கு ஜோதி உங்கடை சிவராணி அம்மாவோடை கதைச்சது பிழை.. முழுப் பிழை.. நான் அதை ஏற்றுக் கொள்ளுறன்.. மன்னிச்சுக் கொள்ளுங்கோ..

சிவ : சீச்சீ.. நீங்கள் பெரிசாய் எல்லாம்..

யோக : (இடைமறித்து) இல்லைத்தம்பி சிவலிங்கம்.. பிழையைப் பிழை எண்டு சொல்லுறதிலை எந்தத் தவறும் இல்லை.. வெட்கப்பட வேண்டியதுமில்லை.. அதாலைதான்.. திரும்பவும் சொல்லுறன்.. ஜோதி, சிவராணி அம்மா வோடை கதைச்சது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழை.. முழுப் பிழை.. அதை பெரிய மனசோடை.. மன்னிச்சுக் கொள்ளுங்கோ.. மனஸ்தாபம் வாறது சகசம் தான். ஆனால் யாகாவாராயினும் நாகாக்க எண்டமாதிரி நாவடக்கம் முக்கியம். நான் அதை மறுக்கேலை.. அதிலை ஜோதி அவசரப்பட்டிட்டா.. இல்லை இல்லை முழுத்தவறுசெய்திட்டா..

சிவ : (பெருமூச்சு விட்டு) அப்பிடிச் சொல்லாதையுங்கோ.. என்ன தவறு.. உங்களிட்டை இருக்கிறதையும் எங்களிட்டை இல்லாதையும் சொல்லிக் காட்டினா.. சொன்னா.. அவளவு தானே.

யோக : உண்மையாய் இருக்கலாம்.. ஆனால் பிள்ளையள் இருக்கிற தாலை மட்டும் எல்லாத்தையும் செய்திடலாம்.. மற்றவயின்ரை உதவி தேவையில்லை எண்டு சொன்னதும்.. நம்பிக்கை வைச்சிருக்கிறதும்.. எல்லாத்துக்கும் மேலை அதையே சொல்லிக் காட்டி சிவராணி அம்மாவின்ரை மனதைப் புண் படுத்தினதும்.. தவறுதான். என்ன செய்யிறது.. நடந்திட்டுது.. தயவு செய்து நீங்கள் தான் பெரியமனசு பண்ணி மன்னிச்சுக் கொள்ள வேணும்..

சிவ : ஏதோ உண்மையைத் தானே சொன்னவ எண்டு நான் சமாதானமடைஞ்சாலும் அவ சிவராணி அதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் காட்டினது.. வெந்த புண்ணிலை வேல் பாய்ச்சினது போலை எண்டு ஒரே கண்ணீர்.. என்ன செய்யிறது எங்களுக்கு அந்தக் கொடுப்பனவு இல்லை.. கடவுளுக்கும் கண்திறக்க மனம் வரேலை.. அதையே ஜோதி அக்காவும் சொல்ல..

யோக : (இடைமறித்து) அதை மறவுங்கோ.. ஜோதியை பெரிய மனசு பண்ணி மன்னிச்சுக் கொள்ளுங்கோ.. இஞ்சை பாருங்கோ.. இண்டைக்கு எல்லாரும் வெளிநாடு எண்டு போய்ச்சேர எங்களை மாதிரிக் கிழடுகட்டையள் தான் இஞ்சை மிச்சம். அது குழந்தைகுட்டி இருந்தாலும் ஒண்டு தான் இல்லாட்டிக்கும் ஒண்டுதான்.. எங்களுக்கு நாங்களும் அயலட்டையும் தான் துணை.. அதுதான் நிஜம்.. உண்மை.. ஒரு பட்டாசு கொழுத்தின விசயம் இப்படி பூதாகாரமாக மாறும் எண்டு நான் கனவிலையும் நினைக்கேலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ : அதைத் தான் நானும் சொல்லவாறன்.. எனக்கு அண்டையிலை இருந்து ஒரு மனப்புழுக்கம். இவ்வளவுகாலம் அயலுக்கை இருந்து ஒண்டாய்ப் பழகியும் எங்களைப் பற்றி சரியாய்ப் புரிஞ்சிருந்தும்.. ஜோதி அக்கா உப்பிடி வாய்க்கு வந்தபடி ஏசிப்போட்டா.. அது மட்டுமில்லை நீங்கள் கூட இது சம்பந்தமாய் என்னோடை மன ஆறுதலுக்குத் தன்னும் சும்மாய் கதைக்கேலை எண்டும் சரியான கவலை. என்ன செய்யிறது உங்களிட்டை இருக்கிறதை.. அதுதான் எங்கடை இயலாமையைச் சொன்னவ.. அதை நீங்களும் ஆமோதிக்கிறியள் ஆக்கும் எண்டு நினைச்சன். அல்லும் பகலும் கையெடுத்துக் கும்பிடுற அம்பலத்தாடியானிலை பழியைப் போட்டிட்டு அண்டையிலையிருந்து எனக்குள்ளையே அழுது கொண்டு நடைப்பிணமாகத்தான் திரியிறன்..

யோக : உங்கடை நிலைமை அது எண்டால் என்ரை நிலைமை அதுக்கு மேலை. எனக்குத் தெரியும்.. என்ரை மனசாட்சியே என்னை உறுத்தினது.. ஜோதியிலை பிழை எண்டு தெரியும்.. ஆனால் என்னண்டாலும் என்ரை மனிசியெல்லே.. பிள்ளையளும் வெளிநாட்டிலை இருக்கிற இந்த நேரத்திலை.. அவளுக்கு ஆறுதலாயிருக்க வேண்டின நானே குற்றம் குறை காண வெளிக்கிட்டால்.. பிரச்சனைதான் வளரும்.

சிவ : ஐயா..

யோக : உண்மையைச் சொன்னால் தம்பி சிவலிங்கம் உரலுக்கு ஒரு பக்கம் இடியெண்டால் மத்தளத்துக்கு ரெண்டு பக்கமுமெல்லே.. எனக்கு மூண்டு பக்கமெண்டே சொல்லலாம்.. மனிசி பிடிச்சபிடி.. சூட்டோடை சூடாய்.. பிழை சரி சொல்ல வெளிக்கிட்டால் அதுவும் பிரச்சனை.. பிள்ளையள் அம்மாவின்ரை வியாக்கியானத்தைத் தட்டாதுகள். பிறகென்ன.. என்ரை மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் அந்தோனியாரிட்டை பாரம் குடுத்திட்டு இருந்தன். இண்டைக்கும் அந்தோனியாரிட்டை பாவ மன்னிப்பு கேட்டிட்டு வரேக்கை உங்களைச் சந்திச்சது ஏதோ மனப்பாரத்தை இறக்கி வைச்சது மாதிரி இருக்குது. இதைத் தான் அந்தோனியாற்றை செயல் எண்ணிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ : உண்மைதான் அது அந்தோனியாராய் இருந்தாலென்ன அம்பலத்தாடியானாய் இருந்தாலென்ன வேறை ஆரிட்டை நாங்கள் எங்கடை மனப்பாரத்தை இறக்கிவைக்கிறது.

யோக : தம்பி சிவலிங்கம்.. கதைச்சது.. மனம்திறந்து பகிர்ந்தது சந்தோசம். உண்மை நிலைமையை அதுதான் என்ரை மன நிலையை சிவராணி அம்மாவிட்டையும் சொல்லி அவவின்ரை மனத்தைத் தேற்றுங்கோ.. ஆனால் எங்கடை வீட்டுக்கு.. இப்போதைக்கு கதை அப்பிடியே இருக்கட்டும். சந்தர்ப்பம் வரேக்கை நானே எடுத்துச்சொல்லி சமாதானப்படுத்தி ரெண்டு பேருமாய் உங்கடை வீட்டுப்பக்கம் வாறமே..

சிவ : எனக்குப் புரியுது யோகநாதன் ஐயா..

யோக : (சிரித்து) அதுக்காக மனிசிக்குப் பயந்தவன் எண்டு சொல்ல வேண்டாம். எதையும் பக்குவமாய் கையாள வேணும். அதுதான்..

சிவ : இல்லை.. இல்லை.. நான் அப்பிடி நினைக்கேலை எனக்கு விளங்குது.. அவவின்ரை குணம் தெரியும் தானே.. உங்களோடை இந்தப் பாரத்தைப் பகிர்ந்து கொண்டதே சந்தோசம்.. என்னை இதிலை இறக்கி விடுங்கோ.. இரண்டு வீட்டுக்காறரும் கண்டால் தேவையில்லாமல் பூகம்பமும் வரலாம்.. எதையும் மெதுவாய்த் தான் பூசி மெழுகவேணும்..

யோக : அதுவும் சரிதான்.. (கார் நிப்பாட்டுதல்) கவனம் பாத்துப் போங்கோ தம்பி.. றோட்டைக் கடக்கேக்கை கவனமாய்.. திறீவீலர், மோட்டபைக், சட்டெண்டு குறுக்காலை போடுவாங்கள்..

சிவ : ஓம்.. ஓம்..

......... காட்சி மாற்றம் .........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி : 3

மாந்தர்கள் : **ஜோதி, யோகநாதன், வானொலி அறிவிப்பாளர், மயூரினி**

களம் : **யோகநாதன் வீட்டில் வானொலி கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள் .**

யோக : இஞ்சேரும் ஜோதி உந்த றேடியோவைக் கூட்டிவிடப்பா.. வெடிச்சத்தம் தான் குறைஞ்சிட்டுதே.. நாட்டு நடப்பை கொஞ்சம் கேப்பம்..

ஜோதி : என்ன.. வெடிச்சத்தம் தான் குறைஞ்சிட்டுதே எண்டு ஒரு இழுவையோடை.. உண்மையிலை வெடிச்சத்தம் தானோ அல்லாட்டில்..

யோக : இந்தா.. உன்னிலை பிடிச்சது எனக்கு இதுதான்.. எப்பிடியோ என்ரை வாயாலை விழுகிறதுகளுக்கு ரெட்டை அர்த்தம் தேடிப் போடுவாய்.. சரி அது எதெண்டாலும் கிடக்கட்டும் கொஞ்சம் கூட்டிவிடு (றேடியோ ஒலிபரப்பு)

வானொ : .. தொடர்ந்து.. பிறந்துள்ள புதுவருடத்தில் நேயர்களுடனான கலந்துரையாடலில், அடுத்து முகநூலில் வந்துள்ள சில பின்னூட்டல்களைப் பார்ப்போம்..

வீரபுலோவில் இருந்து மலரவன் என்ற நேயர் அழகான புதுவருட வாழ்த்தினைக் கொண்ட ஸ்ரிக்கர் ஒன்றினை இணைத்து இந்தப் புதுவருடப் பண்டிகையானது ஜனவரி மாதம் முதலாம் திகதி என்பதனால் அனைவருக்கும் பொதுவானதாக இன, மத வேறுபாடுகளின்றி கொண்டாடப்படும் ஒரு பொதுவான பண்டிகை என்று குறிப்பிட்டு பண்டிகை என்பது பண்டு சக ஈகை எனப்பிரித்து ஈகையை முன்னிலையாகக் கொண்ட இல்லாதவர்களுக்குப் பகிர்தல் அல்லது தேவையானவர்களுக்குப் பகிர்தல் என்பதைக் கருவாகக் கொண்டு அமைய வேண்டுமென்ற தனது கருத்தைப் பதிவு செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் நேயரே.. இலங்கையில் யேசுநாதர் பிறந்த தினமான கிறிஸ்துமஸ் தினமும் அதனைத் தொடர்ந்து வரும் புதுவருடமும் முக்கிய இடம் பெறுகின்றது. யேசுநாதர் பிறந்த தினமானது மானிடகுலத்தின் இருளகன்று ஒளி பிறந்த நாளாக கருதப்படுகின்றது. கிறிஸ்தவர்கள் சமய நிகழ்வுகளில் பங்கு கொள்ளும் அதே வேளை ஏனைய சமயத்தவர்களும் சமய சார்பற்ற பண்டிகையாகக் கொண்டாடுகின்றனர் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை. முக்கியமாக அலுவலகங்கள், தொழில் நிறுவனங்கள் இது வருடத்தின் முதல் நாளாக அமைந்திருப்பதனால் கொண்டாடத் தவறுவதில்லை.

ஆம் இலங்கையில் கைக்கொள்ளப்பட்டு வருகின்ற அனைத்து மதங்களுமே அடிப்படையில் தர்மத்தினையும் கொடையையும் போதிப்பதனால் அவை எம்முடனே ஒன்றிவிட்ட கலாச்சார விழுமியம் எனலாம். இல்லாதவர்களுக்கு கொடுத்தல் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்துண்ணல் என்பன இலங்கையரின் கலாச்சார அடையாளங்களில் ஒன்றாகும். அதுவே உங்களது புதுவருடக் கொண்டாட்டத்தின் கருவாக அமைந்தமையை இட்டு மகிழ்ச்சி.. (வானொலி நிகழ்ச்சியில் இசை தொடரவும்)

ஜோதி : இந்தாருங்கோ தேத்தண்ணியைக் குடியுங்கோ.. ம்.. அந்தக் காலத்திலை.. பிள்ளையள் இஞ்சை இருக்கேக்கை நாங்கள் குடுத்து வாங்காததே.. கிறிஸ்மஸ் அண்டைக்குத் தொடங்கினால் வருசம் மட்டும் கொண்டாட்டம் தானே.. ம்.. இப்ப ஆளும் ஆளும் தனிய..

யோக : நான் என்ன இப்ப அதைச்செய்யாதை, இதைச் செய்யாதை எண்டு மறிக்கிறனே.. அல்லது பிள்ளையள் தான் வேண்டாம் எண்ணுறாங்களே.. விரும்பினால் விரும்பினதைக் குடுத்து வாங்கனப்பா.. அதுக்கேன் பெருமூச்சு விடுறாய்..

வானொ: அடுத்த அழைப்பில் நேயர் ஒருவரை இணைப்பதற்கு முன் மேலுமொரு முகநூல் பதிவினை பார்க்கலாமென்று எண்ணுகின்றேன்.. ஆம் சாவகச்சேரியிலிருந்து மரியசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நேயரின் பதிவு இது.. புதுவருடக் கொண்டாட்டம் கொண்டாடப்பட வேண்டியது தான் எனக்குறிப்பிட்டு வித்தியாசமாக தனது பதிவில்குறிப்பிட்டுள்ளார். பதிவில் கடந்த வாரச் செய்தியின் ஒரு பகுதியையும் இணைத்துள்ளார். ஆம்.. அதனைப் பார்ப்போம்.

கொழும்பு நகரை அண்மித்த வளிமண்டலத்தில் தூசுதுகள்களின் தரச்சுட்டி மீண்டும் அதிகரித்துள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது. கொழும்பு நகரை அண்மித்த வளிமண்டலத்தில் இன்று காலை 150 புள்ளியாக தூசு துகள்களின் தரச்சுட்டி காணப்பட்டதாக தேசியகட்டடஆய்வு நிறுவகத்தின் சிரேஸ்ட புவிச்சரிதவியல் நிபுணர் தெரிவித்துள்ளார்.

என்ற செய்தியையும் இணைத்து.. கொண்டாட்டங்கள் கொண்டாடப்படும் பொழுது சூழலுக்கு பாதிப்பில்லாது கொண்டாட வேண்டியதன் அவசியத்தை விஞ்ஞான ரீதியில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜோதி : என்னத்தைச் சொல்லுறான் பாப்பம்..

யோக : வேறை என்ன உன்ரை மக்கள் செய்தமாதிரி ஸ்ரேற்றஸ் போடச் சொல்லி இருப்பான். இளவட்டமெல்லே..

ஜோதி : பொறுங்கோவன்.. நீங்கள் சொல்லுறதைக் கேக்கிற தெண்டால் ரேடியோ ஏனப்பா..

யோக : சரி..சரி.. வருசப் பிறப்பைக் கொண்டாடுற நேரத்திலை உதை ஏன் தான் வாசிக்கிறானோ.. அறுவை

ஜோதி : ஏனப்பா.. நேயர் வித்தியாசமாக தனது பதிவில் கொண்டாட்டத்தினைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் எண்டு சொல்லித்தானே வாசிச்சவை.. பொறுங்கோவன் பாப்பம்.

வாணொ: பண்டிகைகளின் பொழுது பட்டாசு வெடிப்பதால் பெருமளவில் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது என்பதனை நாம் கவனத்திற் கொள்வதில்லை.

ஆம் .. முதல் பாதிப்பு, அதிலிருந்து வரும் பெரும் அதிர்வு ஒலி (Noise pollution). இது நம் காதுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகச் சுகாதார நிறுவனம், வகுத்துள்ள வரையறையின்படி இரவில் 35 டெசிபலுக்கு மேலே சத்தம் ஏற்பட்டால், மனிதர்களிடையே தூக்கக் கோளாறு (sleeping disorder) ஏற்படலாம்.

பட்டாசு ஒலியால் வீட்டு வளர்ப்புப் பிராணிகள், பறவைகள், வண்ணத்துப் பூச்சிகள், சிறு பூச்சியினங்கள் போன்றவற்றின் ரத்த அழுத்தம் அதிகரிக்கிறது.

பகலில் 55 டெசிபலுக்கு மேல் ஒலி இருக்கக் கூடாது என்று வரையறுத்திருக்கிறது. ஆனால், பட்டாசு வெடிக்கும் போது 140 டெசிபலுக்கு மேல் ஒலி மாசு ஏற்படுகிறது. இதிலிருந்து பட்டாசு வெடிக்கும் போது ஏற்படும் ஒலியின் ஆபத்தினை உணரமுடிகின்றதல்லவா..

ஜோதி : பாத்தியளே.. பட்டாசு வெடிக்கிறதிலை இப்பிடியும் ஒரு சங்கதி இருக்குது. ஆ..

யோக : ம்.. கேக்குது.. கேக்குது..

வாணொ : இப்படிக் குறிப்பிட்ட நேயர் மேலும் இவ்வாறாக பண்டிகைகளில் பட்டாசு வெடிப்பது தொடர்பாக அதிலிருந்து வெளிவரும் ஒலி மற்றும் இரசாயனப் பதார்த்தங்களின் தாக்கம் தொடர்பாகவும் விஞ்ஞான ரீதியில் குறிப்பிட்டுள்ளார்.

ஆம்.. இந்த இரண்டு முகநூல் பதிவுகளையும் ஒருங்கே பார்த்தோமானால் எமக்கு ஒன்று தெளிவாகப் புரிகின்றது. பட்டாசு வெடிப்பதனால் எமக்கு காயம் ஏற்படுகின்ற அதே வேளை சுற்றுச் சூழல்.. சூழல் சமநிலை நீண்ட காலத்துக்குப் பாதிப்படைகின்றது.

அதே நேரம் இதற்குச் செலவழிக்கும் பணத்தை, அன்றாட உணவுக்கே கையேந்தி நிற்கும் சிறார்களின் தேவைக்குப் பயன்படுத்தினால் சூழல் பாதுகாக்கப்படுகின்ற அதேவேளை புதுவருடக் கொண்டாட்டத்தைப் பயனுள்ள, அர்த்தமுள்ள வகையில் நாமும் கொண்டாடி சிறார்களையும் மகிழ்விக்கலாமே என்றும் அருமையான கருத்தினைப் பதிவிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி.. நன்றி நேயரே.. அருமையான கருத்து.. இந்தச் செய்தியானது எமது நேயர்களைச் சென்றடைந்து ஒரு மாற்றத்தை.. விழிப் புணர்வை ஏற்படுத்தும் என நானும் எண்ணுகின்றேன்..

ஜோதி : பாருங்கோ.. ஏதோ மனிசருக்குக் காயம் தான் எண்டு நாங்கள் நினைச்சால் கண்ணுக்குத் தெரியாத எவ்வளவு நடக்குது. மனிதருக்கு மட்டுமல்ல சூழலுக்கு இவளவு பாதிப்பிருக்குது எண்டு இப்பதான் தெரியுது.

யோக : அதுதானே எல்லாரும் அறியவேணுமெண்டு ரேடியோவிலை வாசிச்சது. இஞ்சைபார்.. சினிமாப் பாட்டை மட்டும் திருப்பித் திருப்பி போடுறது மட்டுமில்லை உது மாதிரியான பிரயோசனமான தகவல்கள் இப்ப நிறைய ரேடியோவிலை கேக்கக் கூடிய தாயிருக்குது.

ஜோதி : அது தானப்பா தொழினுட்பப் புரட்சி

யோக : சரி.. நீ தொடங்கினால் விடாய்.. புரட்சியைப் பிறகு பண்ணு.. இப்ப ரேடியோவைக் கேள்..

வாணொ : அடுத்ததாக ஒரு தொலைபேசி நேயரை இணைத்துக் கொள்வோம்.. ஹலோ.. வணக்கம்.. மகிழ்ச்சிகரமான புத்தாண்டு வாழ்த்துக்கள்..

மயூ : வணக்கம்.. ஹப்பி நியூ இயர்.

வாணொ: ஆம்.. ஒரு சிறுமி புதுவருட வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்காக எம்முடன் தொலைபேசி மூலம் இணைந்துள்ளார்.. வணக்கம்.. ஹப்பி நியூ இயர்.. உங்கடை பெயர் என்ன.. நீங்கள் எங்கேயிருந்து கதைக்கிறியள்.

மயூ : எனது பெயர் மயூரினி, குயிலகம் குழந்தைகள் காப்பகத்தில் இருந்து கதைக்கிறன்.

வாணொ: என்ன பெயர் சொன்னீங்கள்.. மயூரினி.. அப்பிடித்தானே..

மயூ : ஓம் அன்ரி..

வாணொ: மயூரினிக்கு எத்தினை வயது..

மயூ : எட்டு.

வாணொ: எட்டு வயது மயூரினி குயிலகத்திலிருந்து கதைக்கிறியள். குயிலகம்.. நல்ல அழகான பெயர்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயூ : அது அன்ரி குயில் குஞ்சுகள் வளருமிடம். அதுதான் அம்மா அப்பா இல்லாத பிள்ளையள் வளருமிடம்.

வானொ: ஓ.. குட்டி மயூரினி குயிலகத்துக்கு அருமையான விளக்கம் சொன்னா.. அப்பிடித்தானே..

மயூ : ம்..

வானொ: இந்த புதுவருட வாழ்த்து நிகழ்ச்சியிலை குட்டி மயூரினி என்ன சொல்ல விரும்புறியள்..

மயூ : நான் வீரபுலவு அம்பலத்தாடி கோயிலடியிலை இருக்கிற சிவலிங்கம் அங்கிளுக்கும் சிவராணி அன்ரிக்கும் மற்றது எங்கடை குயிலகத்தின்ரை அம்மம்மா செல்லம்மாவுக்கும் எனது நண்பர்கள் அனைவருக்கும்.. மற்றது.. வந்து.. உங்களுக்கும் ஹப்பி நியூ இயர் சொல்லப்போறன். நான் மட்டுமில்லை இஞ்சை இருக்கிற எல்லாரும் சொல்லப்போறம்..

ஜோதி : (ஆச்சரியத்துடன்) இஞ்சை பாருங்கோ வீரபுலவு அம்பலத்தாடி கோயிலடி சிவலிங்கம் அங்கிளுக்கும் சிவராணி அன்ரிக்குமாம்.. ஆர் உவைதானாக்கும்..

யோக : ஓம். எனக்கும் கேக்குது. பொறு சொல்லிறது சொல்லி முடியட்டும். முடியவிட்டு உன்ரை கண்டு பிடிப்பைச் சொல்லு..

ஜோதி : (பெருமூச்சுடன்) சரி.. நான் உங்களைக் குழப்பேலை.. (தனக்குள்) அவையின்ரை பெயர் சொன்னாப் போலை ஆர்வத்தைப் பார்..

வானொ: சரி.. நல்லது.. எல்லாருக்கும் இனிய புதுவருட வாழ்த்துக்கள்.. சரிதானே மயூரினி.. அதுசரி புதுவருசக் கொண்டாட்டம் எல்லாம் எப்பிடி.. புதுச்சட்டை போட்டாச்சோ..

மயூ : அதுவந்து.. நான் இஞ்சை குயிலகத்திலை தானே இருக்கிறன். என்னோடை இன்னும் கொஞ்சப்பேர் இருக்கினம் தானே. எங்களுக்கு சிவலிங்கம் அங்கிளும் சிவராணி அன்ரியும் புதுச் சட்டையும் சுவீற்சும் கொண்டு வாறதெண்டு சொன்னவை. அவை வந்தபிறகுதான் போடுவம். அவை கொண்டுவாற புதுச்சட்டை போட்டு.. அதுக்குப் பிறகுதான் எல்லாரும் சேர்ந்து பிறே பண்ணுவம். ரோய்சும் கொண்டு வாறதெண்டு சொன்னவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொ: ஆ.. அப்பிடியா.. நல்லது.. புதுச்சட்டை போட்டுக் கொண்டு சேச்சுக்கப் போட்டு வாங்கோ.. நன்றி.. பார்த்தீர்களா பிஞ்சு உள்ளத்தின் குதூகலத்தை.. முகநூலிலை இருந்த தகவலை செயல்படுத்திற சிவலிங்கம் தம்பதிகளுக்கும் குயிலகக் குழந்தைகளுக்கும் மீண்டும் வாழ்த்துக்கள் ..

மயூ : நன்றி அன்ரி. பாய்..

வானொ: அடுத்ததாக ஒரு இனிய பாடல் அனைவரும் கேட்போம். (பாடல் ஒலிக்க வானொலி அப்படியே மெதுவாக குறைந்து செல்ல)

யோக : சரி.. பாட்டுத்தானே போகுது.. றேடியோவைக் குறைச்சுப் போட்டு சொல்லப்பா உன்ரை கண்டுபிடிப்பு என்ன எண்டு..

ஜோதி : இல்லை.. அது .. உந்தப்பிள்ளை சொல்லிச்சுதே சிவலிங்கம் அங்கிளும் சிவராணி அன்ரியும் எண்டு அது உவைதானப்பா..

யோக : கையில் புண்ணுக்கு கண்ணாடி வேணுமே.. இஞ்சைபார்.. அந்தப் பிள்ளை என்னண்டு சொன்னது.. வீரபுலவு அம்பலத்தாடி கோயிலடி சிவலிங்கம் அங்கிளுக்கும் சிவராணி அன்ரிக்கும் எண்டுதானே.. இதுக்கு ஆராய்ச்சி வேறை வேணுமே.. அவைதான்..

ஜோதி : அவை சைவஆக்கள் எல்லே!..

யோக : இஞ்சைபார்.. ஜனவரி முதலாம் திகதி எண்டது.. எல்லாருக்கும் வருசத் தொடக்கம் தானே.. இதிலை சைவம் வேதமெண்டு..

ஜோதி : அதுசரி.. அவை குயிலகத்துப் பிள்ளையளுக்கு புதுவருசத்துக்கு புது உடுப்பும் சுவீற்சும் ரோய்சும் குடுக்கினமாம்.. (அழைப்பு மணி அடித்தல்)

யோக : கொஞ்சம் மெல்லமாய்க் கதையப்பா ஆரோ வந்திருக்கினம். (மீண்டும் அழைப்பு மணி அடித்தல்)

யோக : ஓம் வாறம்.. வாறம்.. இஞ்சேரப்பா உந்தக் கதவைத் திறவுங்கோ.. (கதவைத்திறக்க சிவலிங்கம் வருதல்)

ஜோதி : ஆ.. நீங்களே.. வாங்கோ வாங்கோ.. கோலிங் பெல் அடிக்கேக்கை நாங்கள் றேடியோக் கேட்டுக் கொண்டிருந்ததாலை கொஞ்சம் சுணங்கிப் போச்சுது.. (கூப்பிடுதல்) இஞ்சேருங்கோ ஆர் வந்திருக்கிறதெண்டு பாருங்கோ.. ம். ம். வாருங்கோ உப்பிடி.. உதிலை இருங்கோ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ : புதுவருச வாழ்த்துக்கள்.. இந்தாங்கோ .. இதைச் சிவராணி உங்களிட்டைக் குடுக்கச் சொல்லித் தந்துவிட்டவ.. புதுவருச வாழ்த்துக்கள்..

யோக,ஜோதி : புதுவருச வாழ்த்துக்கள்..

யோக : வாரும் சிவலிங்கம்.. வந்திருங்கோ.. என்ன.. நாங்கள் வருசப் பலகாரம் தரவேண்டிய நேரத்திலை நீங்கள்..

ஜோதி : (தனக்குள்) முகம் குடுத்தே கதைக்காத மனிசர்.. இப்ப வருசப் பலகாரத்தோடை (தடுமாறி).. ஆ.. ஆ.. ஓ அதுதான்.. நாங்கள் ஆளும் ஆளும் தானே.. அவரும் டயபற்றிஸ்காறன்.. அதாலை..

சிவ : (இடைமறித்து) உண்மைதான்.. நீங்கள் சொன்னியளே அப்பிடித்தான்.. நாங்களும் ஆளும் ஆளும் தான். சைவக்காரர் தான்.. எண்டாலும்.. வருசத்தின்ரை முதல்நாள் வருசப்பிறப்பு எல்லாருக்கும் தானே.. அது மட்டுமே பகிர்ந்து கொண்டாடுறது தானே பண்டிகை..

ஜோதி : ஓ..ஓ.. உண்மை தான்..

சிவ : இல்லை.. எங்களுக்கு.. ஆர்.. பிள்ளையோ குட்டியோ.. கிட்டின சொந்தபந்தமோ.. ஒண்டுமே இல்லைத்தானே

ஜோதி : (மனதுக்குள்) அண்டைக்கு நான் மனிசிக்காரிக்குச் சொன்னதை குத்தாமல் குத்திக் காட்டிறார் போலை..

யோக : வந்து..

சிவ : ஓம்.. யோகநாதன் ஐயா.. எங்களுக்கு.. ஆர்.. பிள்ளையோ குட்டியோ.. நாங்கள் தனிச்சாக்கள். அதாலை உதிலை ஒரு இடத்துக்குப் போகவேணும்.. அதுதான்..

ஜோதி : ஓம் றேடியோவிலை கேட்டனாங்கள். எங்கையோ குயிலகமாம்.. அங்கையிருந்து ஒரு பிள்ளை கதைச்சது கேட்டனாங்கள்..

யோக : நீங்கள் இப்பிடி ஒரு பெரிய சேவை செய்யிறது நாங்கள் பக்கத்திலை இருந்தும் எங்களுக்குத் தெரியாது..

சிவ : *சீச்சீ..* இதெல்லாம் விளம்பரப்படுத்திக் கொண்டே.. உள்ளங்கை குடுக்கிறதை புறங்கை அறியக்கூடாது எண்ட கொள்கை சிவராணிக்கு.. தனக்குத்தான் தன்ரை பிள்ளையள் எண்டு கொண்டாட கடவுள் கருணை புரியேலையெண்டாலும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லநாள் பெருநாளிலை தாய் தகப்பனின்ரை பாசத்தக்கு ஏங்கிற.. பெருநாளைக் கொண்டாடிற ஆசையிருந்தும் அதை நிறைவேற்றத் தவிக்கிற குழந்தையளோடை.. ஏதோ எங்களாலை இயண்டதை குடுத்து.. அதுகளின்ரை முகத்திலை தெரியிற புன்னகையையும் சிரிப்பொலியையும் ஒரு மணித்தியாலம் தன்னும் அனுபவிக்க வேண்டுமெண்டது அவவின்ரை ஆசை.. நானும் அதுக்கு மறுப்பில்லை.. அதுதான்.. எங்களாலை இயலக்கூடிய ஒரு சின்ன முயற்சி..

யோக : (தனக்குள்) போயும் போயும் இப்பிடியான தங்கமான மனிசியை இவள்பாவி.. சீ.. தேவையில்லாமல் வார்த்தையளைக் கொட்டித் தீர்த்தாளே..

ஜோதி : (தனக்குள்) கடவுளே.. அந்தோனியாரே.. இவ்வளைவையும் செய்துபோட்டு ஒரு சின்ன முயற்சியாம்.. நாங்கள் பிள்ளை குட்டியளைப் பெத்து வளத்து அதுகளின்ரை அருமை பெருமை. ஆசை.. பாசம்.. தேவையளைத் தெரிஞ்சனாங்கள்.. உதுகளைப் பற்றி யோசிக்கேலை.. எங்கடை பெருநாள் எண்டு இண்டைக்குப் புது வருசத்தைக் கொண்டாடுற நாங்கள் அயலெண்டு யோசிக்கேலை.. வருசப்பிறப்பு பண்டிகை எண்டு, நடந்ததை மறந்து ரெண்டு கேக்துண்டு கொண்டு போய்க் குடுப்பமெண்டு நினைக்கேலை.. அதுகள்.. ஓம்.. இவ்வளவு நடந்தாப் பிறகும் எங்கடை வீடுதேடி வந்திருக்குதே.. உண்மையிலையிலேயே உயர்ந்த மனிசர் தான்.

சிவ : என்ன இரண்டு பேரும் உங்களுக்குள்ளையே கதைச்சுக் கொண்டு நிக்கிறியள். சிவராணி வரேலை எண்டு குறைபோலை..

யோக : இல்லை.. இல்லை.. அப்பிடி இல்லை..

ஜோதி : (குழைந்தபடி) இல்லை.. அது வந்து.. நான் அண்டைக்கு அவவை தாறுமாறாய்.. அதாலை தான்.. இல்லை.. இல்லை.. அதை எல்லாம் பெருமனசு பண்ணி..

சிவ : அதை எல்லாம் அப்பவே மறந்தாச்சு.. உண்மையிலை சிவராணியும் வாறதெண்டு தான் இருந்தவ.. ஆனால் பிள்ளையளுக்கு குடுக்கிற சாமான்கள் அடுக்கிக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிண்டவ. அங்கைபிள்ளையள் நாங்கள் போகும் மட்டும் ஆசையோடை காத்துக் கொண்டு நிக்குங்கள். அதாலை நான்தான் விட்டிட்டு தனிய வந்தனான்.

யோக : பரவாயில்லை.. அந்தக்குழந்தை மயூரினி றேடியோ விலை கதைக்கேக்கை எவ்வளவு ஆவலோடை.. ஆசையோடை காத்துக் கொண்டு இருக்குதுகள் எண்டதை விளங்கக் கூடியதாயிருந்தது..

ஜோதி : (தழுதழுத்து) அதுவும் சரி.. ஆனால் அவ வராமல் விட்டதும் ஒரு விதத்திலை பாக்கப் போனால் சரி எண்டு தான் என்ரை மனச்சாட்சி சொல்லுது.

சிவ : உண்மையிலை ஜோதி அக்கா.. உந்த அம்பலத்தாடி சத்தியமா அவ உங்களிலை கோபமாயோ.. அல்லது இங்கை வரக்கூடாதெண்டோ வராமல் விடேலை.. ரெண்டு பேரும் இஞ்சை வந்தால் பிள்ளையளின்ரை சாமான்கள் ஒழுங்கு பண்ணுறது பிந்தியிடும். அதுதான்..

யோக : நீங்கள் ஏன் கடவுளைக் கொண்டு சத்தியமெல்லாம் பண்ணுறியள். எங்களுக்குத் தெரியாதே.. முப்பது முப்பத்தைஞ்சு பிள்ளையளுக்கு குடுக்க சாமானுகள் ஒழங்கு பண்ணுற தெண்டால் சும்மாயே..

ஜோதி : எது எப்பிடியோ.. அவ வராமலிருந்ததும் ஒரு விதத்திலை நல்லதெண்டு நினைக்கிறன்.

சிவ : (ஆச்சரியமாக) ஏன்.. ஏன் ஜோதி அக்கா அப்பிடி எடுத்தெறிஞ்சு சொல்லுறியள்.

ஜோ : எடுத்தெறிஞ்சில்லை.. உண்மையாய்.. என்ரை மனம் திறந்து தான் சொல்லுறன். இவ்வளவு பெரிய மனசிருக்கிற அவவை என்னென்ன எல்லாம் சொல்லக் கூடாதோ.. ஒரு பொம்பிளையைப் பார்த்து என்னென்ன வார்த்தை எல்லாம் சொல்லக்கூடாதோ.. அவ்வளவும் சொல்லி.. அவ்வளவு வசையையும் சொல்லி.. இந்த எலும்பில்லாத நாக்காலை கொட்டித் தீர்த்தன்.

சிவ : ஜோதி அக்கா..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோதி : ஓம்.. (தழுதழுத்து) என்ரை மனத்திலை இருக்கிறதைச் சொல்ல விடுங்கோ.. நீங்கள் வந்ததே கடவுள் வந்த மாதிரி இருக்கேக்கை.. அவ சிவராணி வந்திருந்தால் நான் செய்த தவறுக்கு மண்ணிப்புக் கேட்கவே சந்தர்ப்பம் இல்லாமல் போயிருக்கும். நான் செய்த பாவத்துக்கு பரிகாரம் தேடமுடியாமல் இருந்திருக்கும்.

யோக : என்ன சொல்லுறாயப்பா..

ஜோதி : ஒழுங்கோ.. (தழுதழுத்து) நான் செய்த தப்புக்கு நான்தான் போய் அவவிட்டை மன்னிப்புக் கேட்க வேண்டும். என்ரை மனச்சாட்சியே என்னைக் குத்திக் காட்டுது. நான்தான் போய் அவவின்ரை காலிலை விழுந்து மன்னிப்புக் கேட்க வேண்டும். அப்பதான் எனக்கு நிம்மதி.. எனக்குத் தெரியும் நான் செய்தது மன்னிக்க முடியாத குற்றம் எண்டு. ஆனால் அவவிட்டைப் போய் அவவின்ரை காலிலை விழுந்து மன்னிப்புக் கேட்டால் தான் எனக்கு நிம்மதி. அதாலைதான் அப்பிடிச் சொன்னன். அப்பதான் எனக்கு நிம்மதி. (அழுதல்)

சிவ : இந்த ஒரு சின்ன விசயத்துக்குப் போய் நீங்கள் பெரிசு பெரிசாயெல்லாம் சொன்னால்.. விடுங்கோ.. இதோடை விடுங்கோ.. அவ உங்களை மன்னிச்சதாலைதானே.. இல்லை இல்லை.. நீங்கள் சொன்னதுகளை தவறாய் எடுக்காததாலை தானே.. பிள்ளையளும் வெளியிலை போய் ஒரு வருசமாகேலை.. அவை வருசத்துக்கு ஏதேன் செய்தினமோவும் தெரியாது.. நான் குயிலகத்துப் . பிள்ளையளின்ரை சாமான்களை ஒழுங்குபடுத்துறன் நீங்கள் இதைக்கொண்டு போய் குடுத்திட்டு வாங்கோ எண்டு என்னை அனுப்பிவிட்டவ..

யோக : இந்த விசயத்திலை தான் அவ தன்னை ஆரெண்டு அடையாளம் காட்டிவிட்டா.. ஓம் ஜோதி சொன்ன மாதிரி உங்கடை வீட்டுக்கு வந்து அவவிட்டை மன்னிப்புக் கேட்கிறது தான் சரி.. தடுக்காதையுங்கோ..

சிவ : சரி.. நான் மறிக்கேலை.. உங்கடை இஷ்டம்.. நானும் வாறன்.. குயிலகத்துக்குப் போற ஒழுங்குகள் செய்யவேணும்..

......... காட்சி மாற்றம் .........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி : 4
மாந்தர்கள் : ஜோதி, யோகநாதன்,
களம் : யோகநாதன் வீட்டில்

ஜோதி : இஞ்சேருங்கோ.. சிவராணியிட்டைப் போய் மன்னிப்புக் கேட்டது ஏதோ ஒரு.. ஒரு இறுக்கம் குறைஞ்சது மாதிரிக் கிடக்குது..

யோக : சரி எல்லாம் நல்லாய் முடிஞ்சுது.. அதைவிடு..

ஜோதி : என்ன இருந்தும் இண்டைக்கு வருசமெண்டு வீட்டுக்கு வந்து வாழ்த்துச் சொல்லி உறவாட ஒருத்தருமில்லை.. மனம் நிறைய மகிழ்ச்சியாய் கதைக்க மனிசரில்லை..

யோக : ம்.. அதுக்குத்தான் நீ ஏங்குகிறாய் எண்டதை நீ பிள்ளையள் ஸ்ரேற்றஸ் போட்டிருக்குதுகள் எண்டு ராத்திரிச் சொல்லேக்கையே புரிஞ்சிட்டன்..

ஜோதி : ஏதோ உங்கடை பென்சனும் பிள்ளையள் வெளிநாட்டிலை இருந்து அனுப்பிற காசும் இருக்கிறதாலை காசுக்கும் குறைவில்லை..

யோக : அதுக்கென்னப்பா..

ஜோதி : சரியோ பிழையோ.. புதிசோ பழசோ இந்த சீதனவீடு இருக்கிற தாலை இல்லிடத்துக்கும் பிரச்சனை இல்லை..

யோக : ம்.. அதுவும் சரிதான்

ஜோ : இவ்வளவு இருந்தும். இந்த வயோதிப காலத்திலை பாசத்தோடை உறவாடுற உறவுகளும் கிட்ட இல்லை..

யோக : அதாலை அயலோடை இனித் தேவையில்லாததுக் கெல்லாம் சண்டை பிடிக்காமல் சந்தோசமாய் மன்னிக்கிற மனப் பான்மையோடை இருக்கவேணும் எண்டு சொல்ல வாறாயாக்கும்.

ஜோதி : அயலோடை மட்டுமில்லை.. எவையோடையும் தான்

யோக : பிறகென்ன..

ஜோதி : இஞ்சை பாருங்கோ.. எங்களைப் போலை வயது போனாக்கள் பிள்ளைப் பாசத்துக்கு ஏங்கிறதைப் போலை.. தாய் தகப்பன் உறவுகளின்ரை ஆதரவில்லாமல் குயிலகம் போலை காப்பகங்களிலை இருந்து பாசத்துக்கு ஏங்கிற பச்சைப் பிள்ளையளோடை மனம் விட்டுப் பழகினால் அதுகளுக்கும் சந்தோசம் எங்களுக்கும் மனம் நிறைஞ்சமாதிரித்தானே..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக : ம் உண்மைதான்.. கணக்கிலை படிச்சமே சய தர சய சமன் சக எண்டு அதை மாதிரி எண்டு சொல்லுமன். அதுகள் சிறிசுகள் தாய் தந்தையின்ரை பாசத்துக்கு ஏங்குதுகள் சயதான்.. நாங்கள் வயோதிபர்.. கிழடுகட்டையள் பிள்ளைப் பாசத்துக்கு ஏங்கிறம். சயதான். ரெண்டு பேரும் சேர்ந்தால் எல்லாருக்கும் மனநிறைவு.. சந்தோசம் அதுதான் சக எண்டன்.. உன்ரை தியறி சரிதானே..

ஜோதி : ஓமப்பா.. சரியாய்ச் சொன்னியள்.. நீங்கள் அதுக்கை கணக்கையும் கொண்டந்திட்டியள்.. அதுதான். சொல்லுறனெண்டு கோவிக்காதயுங்கோ.. அவ சிவராணியோடை கதைக்கேக்கை மனிசி சொன்னது எனக்கும் சாடையாய் உறுத்திச்சுது. அதாலை சொல்லுறன்..

யோக : சொல்ல வந்ததைச் சொல்லனப்பா.. அதுக்கொரு கேள்வி கேட்டுக்கொண்டு..

ஜோதி : நாங்களும் சிவலிங்கத்தாரவையோடை குயிலகத்துக்குப் போய் அந்தப் பச்சைப் பிஞ்சுகளோடை கொஞ்ச நேரம் இருந்திட்டு வருவமே.. எங்களுக்கும் ஆறுதலாய் இருக்கும். அதுகளுக்கும் சந்தோசமமாயிருக்கும்..

யோக : அட உதே.. நானே கேட்பம் எண்டு இருந்தனான்.. நீயே கேட்டிட்டாய். ஆனால்..

ஜோதி : சம்மதம் நானும் நினைச்சனான் எண்டு சொல்லிப்போட்டு பிறகுமேனப்பா ஆனால் எண்டு இழுக்கிறியள்.

யோக : இல்லை.. வெறுங்கையோடை போறதோ எண்டுதான்..

ஜோதி : (இடைமறித்து) அதுக்கேன் யோசிக்கிறியள்.. ஒரு இரண்டு மூண்டுகிலோ கேக்குக்கு ரெலிபோனிலை றோமரோ.. றூமரோ அவயிட்டைச் சொல்லுங்கோ.. ஐஞ்சு நிமிசத்திலை வாசலிலை மோட்ட பைக்கிலை வந்து நிக்கும்..

யோக : எட அதை நான் மறந்தே போனன்.. அப்ப இந்த வருசம் சிவராணி அம்மாவோடை ஜோதியும் குயிலகத்துக்குப் போய் குழந்தையளோடை வருசம் கொண்டாடப் போறாவெண்டு சொல்லு..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோதி : ஓமப்பா.. ஏன் நீங்கள்

யோக : நானில்லாமலே நானும்தான்.. (நிறுத்தி) எடை... போறமெண்டு சந்தோசப் படுகிறதுக்கு கண்கலங்குிறாய்..

ஜோதி : அது.. அதுவந்து.. உண்மையிலை.. (அழுது..) பிள்ளை குட்டியோ.. பொருள் பண்டமோ.. வீடுவளவோ அல்லது வேறு என்ன சொத்து சுகமோ பெரிசில்லை.. மனிதப் பண்புதான் ஒரு மனிதனை உயர்த்திறது எண்ணுறதை இந்த வருசம் எனக்கு புரிய வைச்சிருக்குது. அவர் சிவலிங்கமும் அவற்றை மனிசி சிவராணியும் புரிய வைச்சிருக்கினம். என்ரை மனத்தை தங்கடை செயலாலை பண்படுத்தி புதுமனிசியாக்கி இருக்கினம். இந்த புதுவருசம் புதுப்பாடத்தை கற்றுத் தந்திருக்குது..

யோக : அப்ப இனி நீயும் உயர்ந்த மனிசி எண்டு சொல்லு.. உயரத்திலை இல்லை மனிதப்பண்பிலை (இருவரும் சிரித்தல்)

......... நிறைவு .........





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில நினைவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

රාජ්‍ය සාහිත්‍ය සම්මාන ප්‍රදානෝත්සවය
அரச இலக்கிய விருது வழங்கல் 2019
State Literary Awards Ceremony



சிறந்த சுயநாடக இலக்கியத்திற்கான விருது - 'மனவைரம்'
செல்லம் அம்பலவாணர்

வானொலி அரச விருது விழா 2019



சிறந்த வானொலிநாடகப் பிரதிக்கான நடுவர் குழாமின் விசேட திறமை விருது- ' வீதி '
'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திறந்த கையெழுத்துப்பிரதிப்போட்டி2015 –2ஆம் இடம்– பஞ்சாமிர்தம்




சிறுகதை–1ஆம் இடம்: சிறுவர்கதை– 3ஆம் இடம்: கவிதை– 1ஆம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**"பஞ்சாயுதம்" – நூல் வெளியீடு– ஆரம்பக் கல்விகற்ற மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலை அதிபருக்கு**




**"சலங்கை" கூத்து நாடகப்பிரதி – முதலாமிடம் கொழும்பு றோயல் கல்லூரி தமிழ் நாடகமன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"விதி" – நாடக ஒலிப்பதிவு– கலைஞர்கள் மற்றும் தயாரிப்பாளர்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன கலையகம்



"சட்டத்தின் திறப்புவிழா"– நூல் வெளியீடு – கொழும்பு தமிழ்ச்சங்கம்

விசாலி கண்ணதாசன், ரவி தமிழ்வாணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'சுமை' ஆசிரியர்

'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர்
ஓர் அறிமுகம்

'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர் அவர்கள், தொலைத்தொடர்புத் துறையில் ஒரு பொறியியலாளராக இன, மத, மொழி வேறுபாடின்றி நம் நாட்டு மக்கள் அனைவருக்கும் நற்பணியாற்றிய அருமையான மக்கள் தொடர்பாளர்.

சேவையில் இருந்து ஒய்வு பெற்ற பின்னரும் ஆன்மிகம், கலை, இலக்கியப்பணி என அரும்பணியாற்றி வருகிறார்.

பல்துறைக் கலைஞர் நல்லதொரு குடும்பத் தலைவர்.
எல்லாவற்றையும் விட நற்பண்பு மிக்கதொரு நல்ல மனிதர்.

சமூகம், இலக்கியம், சரித்திரம் சார்ந்த பல வானொலி நாடகங்களை எழுதியிருக்கிறார். அடியேனும் அவரது சில நாடகங்களில் நடித்திருக்கிறேன். மகிழ்ச்சி. அவரது இன்னுமொரு வானொலி நாடகங்களின் தொகுப்பான "சுமை" நூலின் அட்டையில் அம்பலவாணர் அவர்களை அறிமுகம் செய்வதில் அகமகிழ்கிறேன்.

வாழ்க வளத்துடன்..!



கலாபூசணம்
கே. சந்திரசேகரன்
கலைஞர்

ISBN 978-955-42626-7-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org